உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை.
49
VIII . D.31.(L)

கணபதிதுணை.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்துத்

துறைமங்கலம்

**சிவப்பிரகாசசுவாமிகள்**

அருளிச்செய்த

# திருக்கூவப்புராணம்.

ஷை ஆதீனத்துச் சிதம்பரம் ஈசானியமடம்

**ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள்**

பதிப்பின்படி

ஷை சுவாமிகள் மாணாக்கரும்,

சென்னை: பச்சையப்ப முதலியார் கலாசாலைத்

தமிழ்ப்பண்டிதருமாகிய

**க. வ. திருவேங்கட நாயடுவினால்**

ஆராய்ந்து,

நூதனமாக எழுதிய குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம்பதிப்பு.

சென்னை, முத்தியாலுப்பேட்டை
எஸ். மூர்த்தி அண்டு கோ. கபாலி பிரஸ்.
கீலக ௵ தை மீ.
1908.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் ...

உ

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

பொருந்தாரரணம்பொடிபடுத்தபொன்னஞ்சிலையோன் கூவத்தி
னிருஞ்சீர்த்தமிழாற்புனைதல்செய்தானிதழ்க்கூப்பாதவந்தாதி
யருந்தாமந்தான்புனைந்துசெந்திலமர்ந்துரூமாமுதறடிந்தோன்
பெருந்தோண்மலைகட்கணிந்தசிவப்பிரகாசப்போபபெருந்தகை
[யே.

ஸ்ரீ
கணபதி துணை.

# முகவுரை.

**திருக்கூவம் :**—என்பது தொண்டைநாட்டில் தேவாரம் பெற்ற (௩உ) திருத்தலங்களுள் ஒன்றாய்த் திருவாலங்காட்டிற்குத் தென்றிசையி லுள்ளதோர் சிவஸ்தலம். இதற்குத் திருவிற்கோலம் என்றும் பெயர். இதில்,

**விநாயகர் திருநாமம் :**—கூவாக்நர், அச்சிறுத்த விநாயகர். (திருத் - ருஉ, திரிபுர க0௬).

**சுவாமியின் திருநாமம்:**—திரிபுராந்தகநாதர் (தல-ருக. திரிக௩உ) திருவிற்கோலநாதர் கோதண்டமண்டிதர் (திருத - ருஉ) தேவசிங்கம் - சங் - உ) இரக்ஷகர் - தியாகர் - சந்ததாரர் - தீர்க்க ஜடாநிர்த்தர் - ஜகநாதர் - அஞ்சநாபகண்டர் - கிலாநிக்னர் - புவனநாயகர் - திரிபுரக்நர் - அபபிரதிஷ்டர் - கூபரநாதர் - நீவாரதர். (செங் - ச0) சிவலிங்கப் பெருமான் விற்றழும்புடையராய் “ஐயனல்லதிசயன்” என்ற தேவாரப்படி அற்புதராய் விளங்குவர்.

**வேறு மூர்த்திகள் :**—அரம்பேசர்-கண்ணுவேசர். (திருத். ௬அ-௬௯.)

**அம்பிகைத் திருநாமம்.**—திரிபுராந்தகநாயகி, பையரவல்குலம்மை - (செங் உரு.) வயிரவாகாரை. (திருத். ருஉ.)

**தீர்த்தம் :**—அச்சிறு கேணி. (திருத்-எஉ.)

**நடனம் :**—இரக்ஷாநடனம்.

**காளி :**—தர்க்கமாதா (பீடாரி) (தாருக-உஎ௯).

**வழிபடடுப் பேறு பெற்றோர் :**—பிரமன்-விஷ்ணு-முனிவர்கள் - கண்ணுவர் - அரம்பையர் - தருமசீலர் - தர்க்கமாதா (காளி) முதலியோர்.

இத்தகைய மேன்மைவாய்ந்த இந்தத் திருக்கூவப்புராணத்தை வடமொழியினின்றும் பெயர்த்துத் தமிழ்ச்செய்யுளாக

இயற்றியருளவேண்டுமென்று அந்நகரவாசிகளான வேளாளப் பிரபுக்கள் விரும்பியபடி, அங்கு யாத்திரையை மேற்கொண்டு வந்திருந்தவரும், நல்லாற்றூரிலும் துறைமங்கலத்திலும் வசித்தவரும், நிஷ்டாபரருமான சிவப்பிரகாசசுவாமிகள் சொல்வளமும் பொருள்வளமுங் கற்பனு அலங்காரமுஞ் செறியப் பாயிரமுட்பட (௭௦௬) செய்யுள்களமையப்பாடி அரங்கேற்றலுஞ்செய்து முடித்தார்கள். இவர்கள் காலம் இற்றைக்கு (௩௦௪) வருடங்கட்கு முன் என்பர். இச்சுவாமிகளின் திருவாக்கை யான் விதந்துகூறல் அநாவசியம். அது உலகறிந்தவிடயமே: இப்புராணச் செய்யுள்களில் தோன்றும் சொற்செறிவுகளும் பொருட்பொலிவுகளும் கற்பனாலங்காரவிசேடங்களுமே, அதனை வலியுறுத்தும். இப்புராணத்தை எனதாசிரியரான திருக்கைலாசபரம்பரைப் பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலயதேசிகராதீனத்துச் சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீ இராமலிங்கசுவாமிகளவர்கள் அச்சிட்டிருந்தபடி பார்வையிட்டதன்றி அவர்கள் அரிதிற்றேடிவைத்திருந்த சிலபாடபேதங்களையுங் கூட்டித் தெரிந்தமட்டும் ஓர் குறிப்புரையும் எழுதிச்சேர்த்து இரண்டாம் பதிப்பாக வெளியிட்டனன். இதிற்றோன்றும் குறைகளைக் கல்விமான்கள் பொறுத்தருளப் பிரார்த்திக்கின்றனன்.

கீலக௵ }
தை ௴. }

இங்ஙனம்,
தாழ்மையுள்ள
க. வ. திருவேங்கடன்.

சருக்கவகை.

உருக்கமிகு பாயிர நைமிசாரணியச்சருக்க முயர்தலச்சருக்கம்,
தருக்குதிரிபுரதகனச்சருக்க நல்லசந்தானகிரிசந்தானச்
சருக்க மடிமுடிதேடுசருக்க மலிசெந்நெல்வைத்தசருக்கம் பாவச்
செருக்குறுதாருகன்வதையாஞ்சருக்க மிவைகூவபுராணச் சேர்
[வாமால்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

அருளிச்செய்த

# திருவிற்கோலத்தேவாரம்.

---

பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உருவினாருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினான்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெகுண்டுநோக்கிய
செருவினானுறைவிடந்திருவிற்கோலமே. ௧

சிற்றிடையுமையொருபங்கனங்கையி
லுற்றதோரெரியினனொருசரத்தினால்
வெற்றிகொளவுணர்கள்புரங்கள்வெந்தறச்
செற்றவனுறைவிடந்திருவிற்கோலமே. ௨

ஐயனல்லதிசயனயன்விண்ணோர்தொழு
மையணிகண்டனார்வண்ணவண்ணம்வான்
பையரவல்குலாள்பாகமாகவுஞ்
செய்யவனுறைவிடந்திருவிற்கோலமே. ௩

விதைத்தவன்முனிவருக்கறமுன்காலனை
யுதைத்தவனுயிரிழந்துருண்டுவீழ்தரப்
புதைத்தவனெடுநகர்ப்புரங்கண்மூன்றையுஞ்
சிதைத்தவனுறைவிடந்திருவிற்கோலமே.

முந்தினான்மூவருண்முதல்வனாயினான்
கொந்துலாமலர்ப்பொழிற் * கூகமேவினா
னந்திவான்பிறையினானடியர்மேல்வினை
சிந்துவானுறைவிடந்திருவிற்கோலமே. ௫

தொகுத்தவனருமறையங்கமாகமம்
வகுத்தவன்வளர்பொழிற்கூகமேவினான்
மிகுத்தவன்மிகுத்தவர்புரங்கள்வெந்தறச்
செகுத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. ௬

விரித்தவனருமறைவிரிசடைவெள்ளந்
தரித்தவன்றரியலர்புரங்களாசற
வெரித்தவனிலங்கையர்கோனிடர்ப்படச்
சிரித்தவனுறைவிடந்திருவிற்கோலமே. ௭, ௮

திரிதருபுரமெரிசெய்தசேவகன்
வரியராவொடுமதிசடையில்வைத்தவ
னரியொடுபிரமனதாற்றலாலுருத்
தெரியலனுறைவிடந்திருவிற்கோலமே. ௯

சீர்மையில்சமணொடுசீவரக்கையர்
நீர்மையிலுரைகள்கொள்ளாதநேசர்க்குப்
பார்மலிபெருஞ்செல்வம்பரிந்துநல்கிடுஞ்
சீர்மையினானிடந்திருவிற்கோலமே. ௧௦

கோடல்வெண்பிறையனைக்கூகமேவிய
சேடனைசெழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லஃதமிழ்ஞானசம்பந்தன்
பாடல்வல்லார்களுக்கில்லைபாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

* கூவம் என்பது - கூகம் என மருவியது.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

அருளிச்செய்த

# திருஇலம்பையங் கோட்டூர்த்தேவாரம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மலையினார்பருப்பதந்துருத்திமாற்பேறு
மாசிலாச்சீர்மறைக்காடுநெய்த்தான
நிலையினானெனதுரைதனதுரையாக
நீறணிந்தேறுகந்தேறியநிமலன்
கலையினார்மடப்பிணைதுணையொடுந்துயிலக்
கானலம்பெடைபுல்கிக்கணமயிலாலு
மிலையினார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. க

திருமலர்க்கொன்றையானின்றியூர்மேயான்
றேவர்கடலைமகன்றிருக்கழிப்பாலை
நிருபமனெனதுரைதனதுரையாக
நீறணிந்தேறுகந்தேறியநிமலன்
கருமலர்க்கமழ்சுனைநீண்மலர்க்குவளை
கதிர்முலையிளையவர்மதிமுகத்துலவு
மிருமலர்த்தண்பொய்கையிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. உ

பாலனாம்விருத்தனாம்பசுபதிதானாம்
பண்டுவெங்கூற்றுதைத்தடியவர்க்கருளுங்
காலனாமெனதுரைதனதுரையாகக்
கனலெரியங்கையிலேந்தியகடவு
ணீலமாமலர்ச்சுனைவண்டுபண்செய்ய
நீர்மலர்க்குவளைகடாதுவிண்டோங்கு
மேலநாறும்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாபபேணியென்னெழில்கொள்வதியல்பே. ௫

உளங்கொள்வாருச்சியார்கச்சியேகம்ப
னொற்றியூருறையுமண்ணாமலையண்ணல்
விளம்புவானெனதுரைதனதுரையாக
வெள்ளநீர்விரிசடைத்தாங்கியவிமலன்
குளம்புறக்கலைதுள்ளமலைகளுஞ்சிலம்பக்
கொழுங்கொடியெழுந்தெங்குங்கூவிளங்கொள்ள
விளம்பிறைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. ௬

தேனுமாயமுதுமாய்த்தெய்வமுந்தானாய்த்
தீயொடுநீருடன்வாயுவாந்தெரியில்
வானுமாமெனதுரைதனதுரையாக
வரிபராவரைக்கசைத்துழிதருமைந்தன்
கானமான்வெருவுறக்கருவிரலூகங்
கடுவனோடுகளுமூர்கற்கடுஞ்சார
லேனமானுழிதருமிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாபபேணியென்னெழில்கொள்வதியல்பே. ௭

மனமுலாமடியவர்க்கருள்புரிகின்ற
வகையலாற்பலிதிரிந்துண்பிலான்மற்றோர்
தனமிலானெனதுராதனதுரையாகத்
தாழ்சடையிளமதிதாங்கியதலைவன்

புனமெலாமருவிகளிருவிசேர்முத்தம்
பொன்னொடுமணிகொழித்தீண்டிவந்தெங்கு
மினமெலாமடைகரையிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. ௬

நீருளான்றீயுளானந்தரத்துள்ளா
னினைப்பவர்மனத்துளானித்தமாவேத்து
மூருளானெனைதுரைதனதுரையாக
வொற்றைவெள்ளேறுகந்தேறியவொருவன்
பாருளார்பாடலொடாடலறாத
பண்முரன்றஞ்சிறைவண்டினம்பாடு
மேருளார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. ௭

வேருலாமாழ்கடல்வருதிரையிலங்கை
வேந்தனதடக்கைகளடர்த்தவனுலகி
லாருலாமெனதுரைதனதுரையாக
வாகமோரரவணிந்துழிதருமண்ணல்
வாருலாநல்லனமாக்களுஞ்சார
வாரணமுழிதருமல்லலங்கான
லேருலாம்பொழிலணியிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. ௮

கிளர்மழைதாங்கினானான்முகமுடையோன்
கீழடிமேன்முடிதேர்ந்தளக்கில்லா
வுளமழையெனதுரைதனதுரையாக
வொள்ளழலங்கையிலேந்தியவொருவன்
வளமழையெனக்கழைவளர்துளிசோர
மாசுணமுழிதருமணியணிமாலை
யிளமழைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. ௯

உரிஞ்சனகூறைகளுடம்பினராகி
யுழிதருசமணருஞ்சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வனெனதுரைதனதுரையாகப்
பெய்பலிக்கென்றுழல்பெரியவர்பெருமான்
கருஞ்சுனைமுல்லைநன்பொன்னடைவேங்கை
களிமுகவண்டொடுதேனினமுரலு
மிருஞ்சுனைமல்கியவிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. ௧௦

கந்தனைமலிகனைகடலொலியோதங்
கானலங்கழிவளர்கழுமலமென்னு
நந்தியாருறைபதிநான்மறைநாவ
னற்றமிழ்க்கின்றுணை ஞானசம்பந்த
னெந்தையார்வளநகரிலம்பையங்கோட்டூ
ரிசையொடுகூடியபத்தும்வல்லார்போய்
வெந்துயர்கெடுகிடவிண்ணவரோடும்
வீடுபெறின்மையின்வீடெளிதாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

---

சுவாமிதிருநாமம் - அரம்பேசுரர்.

தேவிதிருநாமம் - கனககுசாம்பிகையம்மை.

சந்திரசேகரர் - கோடேந்துமுலையம்மை - என்பதும் வழக்கம்.

---

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கூவப்புராணம்.

## கடவுள் வாழ்த்து.

### விநாயகர் காப்பு.

கலிவிருத்தம்.

குவளத் தந்தக் குளிர்விண் வளத்துறக்
கவளத் தந்தக் கரண மிருத்திய
பவளத் தந்தப் படிவ நிகர்த்தொளிர்
தவளத் தந்தத் தலைவனை வாழ்த்துவாம். க

### அச்சிறத்த விநாயகர்.

நச்சி றுத்த நயனக் குவிமுலைப்
பொச்சி றுத்த நுசுப்பினர்ப் போற்றிவாய்
மிச்சி றுத்த விரகிலிக காங்கொலோ
வச்சி றுத்த வடிக ளடிகளே. உ

## திரிபுராந்தகநாதர்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நீர்கொண்ட சடையொடுசம் பெருங்காமத் தழலவிப்ப நிற்கின் றானைக், கூர்கொண்ட கனன்மழுமா னுண்மையும் பெண்மையுமாய கூற்றிற் கேற்பச், சீர்கொண்ட வலனிடங்கொ ளுயகனைப புகலியிறைச் செந்த மிழ்ப்பூந், தார்கொண்ட திருவிற்கோ லப்பெருமான் றனையிதயத் தவிசின் வைப்பாம். க

## திரிபுராந்தகநாயகி.

பைத்தசிறு மணியரவந் தாழ்ந்துமதி கவர்கின்ற பரிச தென்ன, மெய்த்தவிரும் புகழ்த்திருவிற் கோலநா யகன்மகிழ விற்கோலத்தை, யொத்தநறு நுதலிடைப்பொற் சுட்டியின்கீழ் வெண்டிலக மொளிரத் தீட்டி, வைத்தருளு மெழிலுடைப்பை யரவல்கு லம்மைபதம் வணக்கஞ் செய்வாம். ௨

## சபாநாதர்.

சீர்கொண்ட மலைமாதின் றிருநுதல்கண் டராப்பகைவெண்டிங்க ணீக்கி, யார்கொண்ட சடையரவ மல்குலைக்கண் டடற்கையுழைப பகைய யர்த்து, நேர்கொண்ட வுழைவிழிகண் டருகுறமெய்ப் புலிப்பகைநீத் திருப்ப நின்றே, யேர்கொண்ட தனித்தில்லை நடம்புரியெம் பெருமானை யிறைஞ்சல் செய்வாம். ௩

## சிவகாமியம்மை.

வன்னிகரம் வளர்வுறநற் பணிபயில வருவார்க்குச் சுவர்க்கமீந்து, பன்னுநுதன் மதியடியார் பரிபுரங்கொண் டெழிற்கனிமெல் லிதழி யாரப், பொன்னனூறுகு மலரவைசேர்ந் திசைகொளரி மறையோதி புரிந்து தாழத், தன்னையிடத் திருத்துபரம் பொருளோங்க ருமையம்மை சரணிற் றாழ்வாம். ௪

## விநாயகக்கடவுள்.

கற்றைநெடுஞ் சடாமவுலிப பிறையுமொரு தன்கோடுங் கரத்
திற் சேர்த்தி, மற்றைநிறை மதியாக்கி மறுவிகந்து வல்லபை
தன் வடிவு பூத்த, நெற்றிநிகாத தமையன்றி யழகொழுகு திரு
முகத்தை நிகர்ப்ப நேயம், பெற்றமழ களிற்றைமணச் சேவ
கத்தி னிறுவியிடர்ப் பிறவி தீர்ப்பாம். ரு

## சுப்பிரமணியக்கடவுள்.

நான்குமுகன் றெழுமைந்து முகனீன்ற வாறுமுக நாதன்
றன்னை, வான்குலவு மொருகடவுள் யானையினைப் பா கணைப்புன
த்து வடிவு கூராத, மான்குறக வேங்கையுரு வெடுக்கதானை
யசுராகுல மாய்த்தப பேய்கட், கூனருக்கி யொடுமௌவிப் புது
விருந்திட் டானைநம துளத்துள் வைப்பாம். சு

## திருநந்தி தேவர்.

### கலிவிருத்தம்

பாக்கு லங்கள் பழிச்சுமை நெஞ்சமும்
வாக்கு மங்கை வடிவு நிகர்த்தொளி
தேக்கும் வெள்ளிச் சிலம்புட னெமமையுங்
காக்கு நந்தி கழறொழு தேத்துவாம். எ

## காரைக்காலம்மையார்.

கிடந்து கண்களிற் கேட்கு மவனபுக
லடைந்த கைகொ டுயிர்ப்பவ னத்தன்வாழ்
வடந்த யங்கு வனத்திற் றலையிறு
ணடந்த வம்மை பதமலர் நணணுவாம். அ

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

அங்க மான தணங்கினு மேமபடு
மங்கை யாகப் படைத்து மகளெனப்

பங்க யாதனன் வெள்குறப் பார்த்தருள்
பொங்கு ஞானசம் பந்தனைப் போற்றுவாம். ௯

## திருநாவுக்கரசுநாயனர்.

மருக்கு லாவு மறைவனத் தொன்றிய
திருக்க பாடந் திறந்தசொல் வேந்தனை
யருட்கு லாவு மறிவினை மூடிய
விருட்க பாடந் திறக்கவு மேத்துவாம். ௧0

## சுந்தரமூர்த்திநாயனர்.

கன்று காமங் கழன்றிலர் தம்முரு
வென்று மோர்வரி தென்றிருப் போன்றனை
யன்று தூதுவ னாக வரிவைபாற்
சென்று வாவென்ற தீரனை வாழ்த்துவாம். ௧௧

## மாணிக்கவாசகசுவாமிகள்.

இன்ப மாணிக்க வாசக னென்னுமோா
மன்பெ ரும்பெய ரியாரும் வழங்குறத்
தன்பெ யர்க்கொடை யோடு தரித்தபே
ரன்பன் றன்னை யகத்து ளிருத்துவாம். ௧௨

## அவையடக்கம்.

### மேற்படி வேறு.

மூதறி வாளரு மறிவின் மூகரு
மோதுறு நடுநிலை யோருஞ் சொற்பொருட்
டீதுரைப் பதற்கொரு செயலுங் கண்டிலே
னுதலி னென்கவிக் கழிவின் றாகுமால். ௧௩

## நூல்வந்தவழி.

### கலிநிலைத்துறை.

காவி நேர்விழி மங்கைபங் கினனிசைக் காந்த
மேவு மாசனற் குமாரசங் கிதையில் விரித்த
நாவில் காளிகா காண்டமென் கடற்புகழ் தன்னிற்
கூவ நீர்மையுட் கொண்டியான் கூறுவன் றமிழால். கஎ

## கடவுள் வாழ்த்து முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஎ.

---

முதலாவது

# நைமிசாரணியச்சருக்கம்.

### கலிநிலைத்துறை.

சீத வம்புலா மலர்க்கொடி நானிலந் திகழும்
பாத வம்புத லாதிய வளமெலாம் பயின்ற
தாத வம்பணி மழையொலிக் குடைந்திடா தமர்ந்து
மாத வம்புரி வோர்க்கிட நைமிச வனமே. க

பொன்னு லாமலர்க் கற்பகா டவிநிழற் போக
மின்ன லாமென வெறுத்துந்த வனத்திடை யின்ப
மன்ன யான்புக வருளென வீசனை மகவா
னுன்னி வேண்டுவ னெனிலதன் சிறப்பெவ ருரைப்போர் ௨

வந்த தேயுண வாகிமற் றாணுறு மறுத்துச்
சந்த யோகிகள் போன்றுபோ கிகளுறத் தமது
புந்தி போம்விரி வொடுக்கியே பொறிப்பண மடக்கு
முந்து போகிகள் போன்றியோ கிகளுறு முதிர்கான். ௩

எலியும் பாம்புமங் கதமுமஞ் ஞையுடிள மயிலு
கலியுங் கோம்பியு மொருத்தலு மடங்கலு நவியும்
புலியுந் தாம்பெறு பகையொரீஇப் புணருமவ் வனத்தின்
மெலியும் பாவமு மறமுமே பகையன்றி விரவா. ௪

ஆதி மாலயன் மனத்தெழு மகந்தையை யடக்க
மீது லாமழன் மயநெடுந் தம்பமிக் குயர்ந்த
சோதி மாமர முகிலதிற் சூழ்தரு தூமந்
நீதி லாவகி மணிசித றியபொறிச் சிவணும். ௫

கரண நான்கையுங் கடந்தமுக் கட்பெருங் கடவுள்
சரண வாரிசம் பற்றெனை வடைந்ததா பதர்க்குத்
தருண வேள்வியிற் பகைஞர்சா தித்திடப படாத
வரண மாயது நலந்தரு நைமிசா ரணியம். ௬

போ சோகமே யெனக்கொடு பிண்டிவின் மதவேள்
வீர வாளியாய் மலர்ந்துதுன் பங்கனே விளைத்த
கோர பாவமற் றபபெயர் மெய்பெறக் குளிர்ந்து
வார மாதவர் சோகநீத் திடமலர் வழங்கும். ௭

அருந்த வம்பயின் றைம்புலக் குறும்பினை யடர்த்துத்
திருந்து நன்முனி வரர்வனத் தொருதனித் திகிரி
மரந்த யங்குவெண் குடைநிகர் மதிதரு தும்பர்
பொருந்து கின்றழிக் காம்பெனும் பெயரினைப புதுக்கும். ௮

கலிவிருத்தம்.

நெட்டிலை கொண்டு நிமிர்ந்தெழு தாழை
கிட்டி யிணைந்துறு கின்றன தோகைப்
புட்டனை யொக்கு மிசைக்கதிர்ப் போது
நட்டிவர் செவ்வயி னம்பியை யொக்கும். ௯

எரிபுரை கின்ற விளந்தளிர் மாவி
னருகுற நீணிற மார்தரு புன்னை
மருவுதல் செஞ்சடை வள்ளன் மருங்கு
தருமம் வளர்ப்பவ டங்குத லொக்கும். ௧௦

ஒன்றினொ டொன்றிழை யொண்கழை தம்மில்
வன்றழல் வந்து வளர்ந்தெழ மீது
சென்றமர் மந்தி திடுக்கிட விண்ணின்
மன்ற னெடுந்தரு வின்மிசை வாவும். ௧௧

பாசிலை கொண்டுயர் பாதவ மென்பூ
மாசறு மையன் மருங்கி லுகுத்தல்
கேசவ னன்பு கிடைத்தவர் மீது
வீசுறு மொய்ம்மலர் மாரியின் மேவும். ௧௨

## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இத்தகை நலம்பெற் றுள்ள வெழிறரு வனத்தின் மேய
மெய்த்தவர் புலன்க ளைந்தும் விரவுறு மனமு மீட்டு
முத்தலை யெஃக மேந்து முதற்பெருங் கடவு டன்பா
லுய்த்தவ ருலக வாழ்வை யொருபொரு ளாகக் கொள்ளார். ௧௩

உலகினர் செல்வ நந்த லுரைப்பொரு ளிரண்டுங் கோட
லிலகுவிண் மதியங் காட்ட வென்றுமோர் தகைத்தாய்ச் சேறல்
விலகுதஞ் செல்வ மெங்கள் விழுப்பொரு ளாய வண்ண
லலகில்செஞ் சோதிப் பின்ன லணிமதி யுணர்த்த வாழ்வார். ௧௪

அன்புகொண் டருஞ்சி வத்தோ டயர்ந்தனு பவித்தி ருக்கு
மின்பமு முத்தி யன்றென் றிகந்துறத் துடைய மேலோர்
துன்பமிக் கெய்தி மின்னிற் றொலைந்துபோஞ் சிற்றின் பத்திற்
றன்பரி வறத்து றத்தல் சாற்றவேண் டுவது முண்டோ. ௧௫

சேயரி நெடுங்கட் செவ்வாய்ச் சிறு நுதற் கரிய கூந்தல்
வேயமர் வலயப் பொற்றோள் வெற்புறழ் குவவுக் கொங்கை
யாயிழை மகளிர் நேயத் தணையினு மவரை யீன்ற
தாயெனக் கருது நீரார் தபனிய மோட்டிற் காண்பார். கசு

பற்றிக லிலாத ஞானப் பண்பினர் நட்டார்ப் பேண
மற்றவர்ச் செறுக்க வுன்னில் வல்லமெய்த் தவத்தின் மேலோர்
முற்றுறு மின்ப துன்ப முன்புள தொடர்பு டற்கென்
றற்றமின் மகிழ்ச்சி வாட்ட மகன்றநற் றுணிவின் மிக்கார். கஎ

கண்டிகைக் கலனு நீற்றுக் களபமும் பொலிந்த யாக்கை
மண்டிதர் சடிலக் கற்றை மவுலியர் நிறைந்த தெண்ணீர்க்
குண்டிகை தண்டு தாங்கு கையினர் குன்ற வில்லி
புண்டரீ கத்தாட் கன்பு பொருந்திய மனத்தர் மாதோ. கஅ

கணபுன லொளிப்ப நெஞ்சங் கரைந்துக மயிர்பொ டிப்பத்
தண்புன றரித்த வேணித் தம்பிரான் பூசை செய்வார்
பண்பயின் மறைக ளைன்கின் பயத்தவா மஞ்செ ழுத்து
நண்புடன் பகரு கின்ற நாவர்முக் குற்றந் தீர்ந்தார். ககூ

வேதன்மா றமையு மன்னூர் வியன்பதந் தமையுங் கொள்ளா
ராதிகா யகனெம் மீச னருளினு லவர்தஞ் செய்கை
யாதுமோர் திரணந் தன்னை யியற்றிட நிறுவ வல்லா
ரோதுறு துதிநிந் தைக்க ணுவகையும் வெறுப்பு மில்லார். உ௦

ஆதர வின்சொற் றூய்மை யருணெறி யொழுக்க மெய்ம்மை
மேதக வுடையர் தீமை விரகம்பொய் யாசை கோபங்
காதர விலர்வே தாந்தக் கருத்துணர் பெரியர் செம்பொற்
பூதர வில்லி தானம் புகுந்திறைஞ் சுதற்கு நேயர். உக

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இப்பெரு முனிவர் தம்முண்முன் பொருநா ளிருந்தவக் காசி
பன் வசிட்டன், றுப்புறழ் சடிலக் கௌதமன் பாரத் துவசன்

கண் ணுவன்சவு னகனே, மெய்ட புலத் தியனற் சனகனு ரதன்
வான் மீகன்சா தாதப ஞநி, யொபபில ரோகர் குழுமியவ்
வனத்தி னொருபுடை வந்துவீற் றிருந்தார். உ௨

இருந்தவர் சனன சாகரங் கடத்தற் கிணையறும் பரசிவ கதி
யிற், பொருந்தினாக் கன்றி யரிதெனத தமது புரசுகொண்
டனைவரு மருதான், வருந்திற முயல்வ தொர்நெறி யென்னு
மற்றதை யாய்ந்தன ருசாவ, வருந்ததி கொழுநன் முதுகுறை
வதனு லடிகள்கேண் மின்களென் றறைவான். உ௩

தவப்பெருமை.

கலிவிருத்தம்.

எவ்வகைப் பொருள்களு மீய வல்லது
செவ்விய தவமதே தெரியின் வேறிலை
யிவ்வுல கினிலஃ தியற்று கின்றமே
யுவ்வுட லெடுத்தபே றுறுதி யென்பவே. உ௪

தவத்தினி லமர்புரி சமனை வெல்லலாந்
தவததினி லெழுகட றமையு முண்ணலாந்
தவத்தினில வடவரை களைந்து தாங்கலாந்
தவத்திஂனி லனலமுந தரிக்க லாகுமே. உ௫

நன்றிகொ டவத்திலம் பூத நல்கவுந்
துன்றிய வுயிர்த்தொகை தோற்று விப்பவு
மன்றிய வுலகுயி ரடவு நண்ணினர்க்
கொன்றருள் புரியவு மொருங்கி னெய்துமால். உ௬

அண்டமும் பொருள்களு மடங்கு பேருருக்
கொண்டிட வனுவெனக் குறுக வாழ்புனல்
விணடலன் மிசைச்செல வினிதி னாதுற
வொண்டவ மன்றியா துதவ வல்லதே. உ௭

பொன்றணி மார்பகப் புனித னாதியை
நின்றுழி தவத்தினா னினைந்த ழைத்திட
லன்றியு மவர்க்கரி தாய வெள்ளியங்
குன்றிறை சரணமுங் குறுக வாகுமால். ௨௮

ஆதலி னொப்புயர் வகன்று தன்னைநேர்
மாதவ மேசெயும் வழக்க மாமென
வோதினன் வசிட்டனங் குணர்த்த நின்றசா
தாதப னினையன சாற்றன் மேயினான். ௨௯

## தருமம்.

### கலிநிலைத்துறை.

தரும மேயிணை யில்பொரு டமையிடைத் தகைசா
லொருமை யின்பினை யுதவிவின் னுலகினு முடன்போ
யருமை யின்பமுய்த் தந்தகற் செறுமெனி லறமே
யிருமை யுந்துணை யாகுவ தன்றிமற் றில்லை. ௩௦

புகழுங் கல்வியுஞ் செல்வமும் வீரமும் பொலிவு
மங்கலமுங் கோலமு மொழுக்கமும் விழுப்பமும் வழங்கி
யிகழும் பாவமும் பழியுநீத் தரனுமை யிடத்திற்
றிகழும் பூதனா யவனருள் செய்யவுஞ் செய்யும். ௩௧

ஏற்றின் மேல்வரு மெந்தைதன் னெழிலுரு வறமா
மாற்றி வன்னதே யாற்றுக வென்றவ னறைய
நீற்றின் மேனியிற் கண்டிகை மாலைக ணிரம்ப
வீற்றி ருந்திடுங் கவுதம னினையன விளம்பும். ௩௨

## தானம்.

மனைக டோறுமுற் றிரந்திடு கபாலியுண் மகிழ
வனக மால்விடை யூர்ந்துவந் தெளிதினி லருளக்

கனைக ருங்கட லுலகினிற் செய்வது கருதின்
வினைக டீர்ந்திடு தானமே யன்றிவே றுளதோ. ௩௩

அரிய வாகிய கலைகன்யா வையும்பயி லறிஞர்
பெரிய மாதவ ருயர்தரு குலத்திடைப் பிறந்தோ
ருரிய தானியைப் புகழ்ந்தன ருறுவரவ் வுளவோ
தரிய லார்களு முறவுசெய் தவன்புடை சார்வார். ௩௪

சூழும் வான்முகி லெனப்பயன் றூக்குறு தளிப்போன்
பாழி மாபுகழ்ப் படலைபோய்ப் பரந்திடு முலகீ
ரேழு மாமயன் மான்முத லிமையவர் தமிற்றும்
வாழு மேம்பத மனையென வாக்குற மலைவார். ௩௫

இகத்தி னன்கொடைப் பெருமையை யறிந்துளோ ரில்லென்
றகத்தி னுமமு முறைசெயா ரவரரி தாகத்
தொகுத்த வோர்பொரு ளல்குவ ரென்பதென் றுணிந்து
மிகுத்த வாவியுங் கொடுப்பரால் வேண்டுமுன் விரும்பி. ௩௬

புவியி லின்கொடை யில்லவன் றேற்றத்தின் பொலிவு
கவிர்ம லர்ந்திடற் கொப்பெனக் கழறுவ ரதனு
லவிர்பெ ரும்புகழ்க் கொடையதே யதிகமென் றறைந்தான்
சவித ருஞ்சடைக் கௌதமன் காசிபன் சாற்றும். ௩௭

வாய்மை.

உவமந் தீர்ந்திடு வாய்மையொன் றேயுறி னுலகிற்
றவமுந் தானமு மொருங்குறச் செய்தலிற் றலையாய்ப்
பவம கன்றுநான் மறைமுடி வாகிய பரம
சிவன ரும்பதம பெறும்படி யுயர்த்திடுந் தெரியின். ௩௮

இரவி வாண்மதி யுதித்தொடுங் குதலொலி யியங்கல்
பரவை தானிக வாதுறல் பயோதரம் பொழிதல்

கருவி ஞூடுவர் தமர்தல்பின் ரேற்றுதல் காயத்
தருவ மாமுயிர் நிற்குதல் வாய்மைபி னன்றே. ௩௯

மன்ன ஞகியிவ் வுலகெலாம் புரந்திட வரினு
மின்ன ருழுந் துடலம்விட் டிறந்திட வரினும்
பன்னும் வாய்மையிற் பிறழ்ந்திடா தொழிகவிப பவம்போய்
மின்னு லாஞ்சடை யெம்பிரான் பதமபுக வேண்டின். ௪௦

என்று காசிப முனிவரன் வாய்மையி னியல்பை
யொன்ற வேவிரித் தருந்தவர் தங்களோ டுரைப்ப
வன்று சார்ந்துறும் பரத்துவ சபபெய ரறிஞன்
குன்று போலுயர் குணத்தினீர் கேண்மெனக் கூறும். ௪௧

## யாகம்.

விண்ணு ளோர்தமக் கவியுண மகிழ்தர விளைத்து
மண்ணி னுருயிர்க் கெழிலிகொண் டுணவினை வழங்கி
யெண்ணி லெவ்வுல கிற்குமின் பீந்துநற் றுனம்
புண்ணி யந்தவம் வளர்த்தலான் யாகமே பொருளாம். ௪௨

## கலிவிருத்தம்.

இரதி கொண்க னெழிலுரு வட்டவன்
பெரிது முண்மகிழ் பெற்றிடச் செய்வது
சுருதி சொன்மக மென்றவன் சொற்றிடக்
கருதி மற்றென்று கண்ணுவன் கூறுவான். ௪௩

## மக்கட்பேறு.

இல்லொ ழுக்க மியைந்து பிதிர்க்கட
னெல்லும் வண்ண முஞற்றி மரபுளோர்
செல்லும் வெந்நிர யத்துயர் சிந்துவான்
வல்ல மக்கட் பெறற்கினை மற்றிலை. ௪௪

மெத்து கின்ற விழுமிய சீர்த்தியோ
டெய்தத லின்றி யிருமையின் புந்தரும்
புத்தி ரற்பெறும் புண்ணிய வாழ்க்கைதா
னதத வத்தினு மாற்றச சிறந்ததே. சரு

என்று நன்மகப பேற்றை யினிதெனக்
கன்று நற்றவக் கண்ணுவன் சொற்றிடக்
கொன்றை யஞ்சடைக கூத்தனைப போற்றியே
ரொனறு மெய்த்துரு வாச னுரைசெய்வான். சசு

## துறவு.

உறவு தந்தைதா யொண்டொடி மாதரார்
சிறுவர் வண்புவி செல்வம் பெரும்புகழ்
பிறவி னும்படு மாசை பிரிநதமெய்த்
துறவி னல்லது துன்ப மகலுமோ. சஎ

## மேப்படி வேறு.

ஈட்டுறுங் காலயி னேமஞ் செய்வுழிக்
கூட்டலிற் றுயரினைக் குறுகுஞ் சுற்றமும்
வாட்டிடும் பகைஞராம் வகைசெய் வித்தலின்
வேட்டிடும் வெறுக்கையை வெறுக்கை யின்பமே. சஅ

கொடுங்கனன் மதுவிடங் குறுகி னுண்டிடிற்
சுடுங்கருத் தழித்திடுந் தொலைவு செய்யுமாற்
கடுந்துயர்க் காமமோ கருதி னன்னசெய்
திடுமெபினுந் தொடர்ந்துவெந் நிரயத் திட்டிடும். சகூ

ஆதலிற் பெண்மயக் காதி நீங்கியே
தீதறத் துறந்திடு மரிய செய்கையே
யேதக்க கதியினில் விடுமென் றோதினன்
மாதவத் துயர்துரு வாச மாமுனி. ருo

இனையன வீற்றுவீற் றியம்பி மாதவர்
வினையறு நன்னெறி தெரியும் வேலையி
னனையவர் தவமுரு வாகி நண்ணல்போற்
றுனியிற வாயிடைச் சூதன் றோன்றினான். ருக

சூதமுனிவர் வருதல்.

கண்டிகை வடமுரங் கவின நீற்றொளிர்
புண்டர நுதன்மிசைப் பொலிய வங்கையிற்
றண்டொடு கமண்டலந் தாங்கி வந்திட
வண்டவர் சூதனல் வரவு கண்டனர். ருஉ

பொருக்கென வெதிர்கொடு போற்றிக் கொண்டுசென்
றுருக்கிள ராதன முதவி யையனி
யிருக்கென வாயிடை யிருத்தி மாதவ
ரருக்கிய முதலன வளித்துக் கூறுவார். ருங

சூதரைக்கேட்டல்.

துய்யமெய்க் கதிபெறுஞ் சூழ்ச்சி யாய்ந்தியா
மையமுற் றிருந்துழி யடிசில் வேட்கையான்
மையலுற் றழுங்குவோர் மாட்டு மூரல்கொண்
டொய்யெனத் தரவரு பவரி னுற்றனை. ருச

தொல்லையம் புராணநூற் றொகுதி யாவையும்
வல்லநன் முனிவநின் வாயி னுய்ந்தன
நல்லவர் தாம்பெறு நலத்த கல்வியுஞ்
செல்வமும் யாவருஞ் சிறப்பிற் பெற்றவாம். ருரு

வாதரா யணமுனி வரனை யொத்தமெய்ப்
போதநா யகவருட் பொழியுஞ் செம்முகச்
சூதமா தவவினைத் தொடர்பு போய்ச்சிவன்
பாததா மரைபெறும் பரிசு கூறென்றார். ருசு

### சூதர் விடையளித்தல்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

என்றலு முவகை நெஞ்சத் தெழுந்திடச் சூத னீர்வே
றொன்றொரு பொருளு முன்னு தலப்புறு முத்தி யெய்தக்
கன்றிலை ரதனு லும்பாற் கண்ணுத லருள்ப திந்த
நின்றமை யடைந்தி யானு முய்ந்தன னென்று சொல்வான்.

அரியதாம் பிச்சை மூவா றலைமறை நான்கா றங்கங்
கருமஞா னங்கள் சொன்னூன் மிருதிகாந் தருவம் வின்னூல்
பரதம்வா கடம்பு ராணம் பகருநன் னியாய மென்ன
விரிதரு மிவற்றுட் சீர்சால் புராணமே மேல தாகும். ௫௮

பன்னுமப் புராண மீரொன் பானெனும் பாகு பாட்டான்
முன்னுறு தலைமைக் கேற்ப முக்கணெம் பிராற்கீ ரைந்து
சென்னிகர்ப் பவற்கு நான்கு திசைமுகற் கிரண்டு செங்கேழ்
துன்னுறு கனலி யென்பேர்ச் சுடர்களுக் கொவ்வொன் றாமே.

அனையவற் றதிக மெந்தை யமலமாக் கதையீ ரைந்து
னனிசிறப் பவற்றுட் காந்த மதனினு ணலத்த தம்மா
தனிவரு சனற்கு மார சங்கிதை யதனுட் சால
வினியது காளி காண்ட மென்பர்மூ தறிவின் மேலோர். ௬௰

அன்னதில் வியாத னெங்கோ னருளினாற் றமியேன் கேட்பத்
தன்னிக ரிலாத முத்தி சார்ந்திடற் கேது தன்னை
முன்னமங் குரைத்தா னன்றேன் மொழிந்தவா றுமக்கி யானும்
பன்னுவ னுடம்பெ டுத்த பயன்பெற முனிவர் கேண்மின். ௬௧

இச்சிறைப் பவங்க ணீங்கி யிணையிலா முத்தி யெய்தன்
மெய்ச்சிவ ஞானத் தன்றி வேறுள கருமத் தாகா
தச்சிவ ஞானம் பெற்றோ ரயனது கற்ப வீற்றிற்
சச்சிதா னந்த முத்தி சார்குவ ரென்ப மாதோ. ௬௨

பிறைமுடிக் கின்ற முக்கட் பிரான்றிருத் தலங்க டம்பி
லறமுடிப் பவர்த்து ரந்தோ ரறிந்துமஞ் ஞான பாவத்
துறைமுடிக் கிற்போ ரேனுந் தரிசெலா மௌிதி னீற்று
மறைமுடிக் கரிய ஞான மன்னிமெய்க் கதியிற் சேர்வார். ருரு

வலியுக மலமெய்ஞ் ஞான மருவிட வேண்டிற் சார்ந்த
புலியுக ளத்தாள் போற்றப் பொதுநடம் புரிவோன் றுனங்
கலியுக மதனிற் சாலக் கசிந்துற வேண்டும் பாம்பி
னெலியுக ணைமி சப்பே ரிருந்தவ வனத்தீ ரென்றான். ருசு

சூதமா முனிவ னின்ன சொற்றிட வுவகை பூத்துத்
தீதிலா முனிவ முத்தி சிவனிட மிக்கு மென்றாய்
வாதரா யணன்ம லர்த்தாண் மருவுமா ணாக்கர் தம்மு [வார்.
ளோதியா லுயர்ந்தோய் சொல்வ தொன்றுள தென்று சொல்

தண்ணிலா மலர்ந்த வேணித் தாணுவு மூமையுந் தங்கள்
கண்ணுலா மக்க ளோடுங் கயிலைபோ லிருப்ப தாகி
யெண்ணிலா வமரர் வேள்வி யிறையயன் முராரி யென்று
முண்ணிலா வுவகை யோடு முவர்த்தொழு தமர்வ தாகி. ருசு

அளப்பரு மனந்த கோடி யமலமெய்த் தலங்க டோறுங்
கொளப்படு பயன்கண் முற்று மௌிதினிற் கொடுப்ப தேயாய்த்
தளப்பது மத்து மேலோ னந்திலு நந்தா தாகி
யுளப்படு போக முத்தி யொருங்குற வுதவுஞ் சீர்த்தாய். ருஎ

கங்கையா திகளின் மிக்க காமரு புனித தீர்த்தந்
தங்குவ தாகி யுன்னிற் சாற்றிடில் வினவிற் செங்கேழ்ப்
பங்கயன் மாயோ னெம்மான் பதந்தர வல்ல தாகி
யிங்கொரு தலத்தை யைய வியம்புதி யெங்கட் சென்றார். ருஅ

என்றவ ருரைத்த லோடு மெழுந்தபே ருவகை பொங்கக்
குன்றவிற் கோலத் தெம்மான் கூவரங் கருதி யுள்ளங்

கன்றுளு மன்னை நெஞ்சிற் கரைந்துக மயிர்பொ டிப்ப
மென்றுளி விழிய ரும்ப விதிரவிதிர்த் திணைய சொல்வான். சுசு

அருந்தவ முனிக ணீவி ரறைந்தன முழுதும் பெற்ற
பெருந்தல முளதொன் றம்ம வதனது பெருமை தன்னைப்
பரந்திடு முகங்கள் கோடி பஃறலை யரவப் புத்தே
ளிருந்துரைப் பினும டங்கா தியான்சிறி தறிந்த சொல்கேன்.

நைமிசாரணியச்சருக்கம் முற்றிற்று.

ஆக - திருவிருத்தம்-அசு.

---

இரண்டாவது

# திருத்தலச்சருக்கம்.

—:o:—

## நாட்டுச்சிறப்பு.

### கலிவிருத்தம்.

பண்டுள முத்தளை பறிய மெய்க்கதி
கண்டிட வனைவருங் கனக மேருகோ
தண்டமண் டிதருறு தலத்தைச் சூழ்தரு
தொண்டைநன் னாட்டணி தொகுத்துக் கூறுவாம்.

### மழை வளம்.

### கலிநிலைத்துறை.

வாய்த்த கார்புனற் சாடியின் வெண்படாம் வயங்கத்
தோய்த்து வான்மகள் கருமைகூர் துகில்தர விரித்துப்

போர்த்த தாமென மிளிர்தரு தவளவண் புயல்க
ளீர்த்த வாரிதி படிந்துகார் நிறமொடு பரந்த. உ

விண்ணு லாவிய புழைக்கைகம்போன் முகிலின மேவிக்
கண்ணு லாவிய சூல்வளை நித்திலங் கரையிற்
றண்ணு லாவிய வலையெறி சலதிநீர் முகந்து
பண்ணு லாவிய மதகரி போன்மென வந்த. ௩

## கலிவிருத்தம்.

சிந்து ரந்திருத் தென்கயி லாயம்வா
ழெந்தை தன்முடிக் கீர்ம்புன லாட்டல்போ
னந்தி யம்பெரு நாகச் சிகரிமேல்
வந்து நின்று மழைமுகில் பெய்தவே. ௪

கோடு கொண்டுயர் குன்றினு நின்றுநீர்
மாடு துன்று மணியொ டிழிந்திட
லாடு மங்கத மண்ணன் முடியைவிட்
டோடு கின்ற வியல்பினை யொத்ததே. ௫

கடிய மன்னர் கவர்ந்துகொண் டேகியே
விடின்வி ரைந்துதம் வீழ்நகர் செல்பவர்
படிய தென்னப் பயோதரம் பெய்புன
னெடிய மைக்கட னேடி நடந்ததே. ௬

## பாலாற்றின் வளம்.

காரடைந்துசா ராவி னமுதினைச்
சீர டைந்த சிலம்பிற் பொழிதலு
மோர டைந்தபா லாறென் றொருபெரும்
பேர டைந்து புவியிற் பெயர்ந்ததே. ௭

மெலியர் மேவும் [illegible]யர்சிறை நீக்குபு
வலியர் வந்[illegible] டேகுதன் மானவே

யொலிகொ ணீத்தமொண் கோடுடைத் தொல்லையிற்
பொலியும் வாவிநன் னீர்கொடு போகுமால். ௮

வான மேய வலிகெழு கோளரா
வான வீர்ங்கதி ரென்னவங் காந்திடக்
கான மோடிக் கடுந்திரை யாலெடுத்
தேன மாமருப் பெற்றுமங் நீத்தமே. ௯

சலயி ரும்புனற் றொண்டைநன் னாட்டினி
னிலவ ளங்க ணிரப்புவ தன்றியும்
புலனி லங்கு புதுமணி யாதிய
மலைவ ளங்களுந் தந்திட வந்ததே. ௧0

குங்கு மங்கலந் தோர்புறங் கூர்ந்தனை
தங்கி நின்றுறுந் தாதளைந் தோர்புறம்
பொங்கு தண்புனல் போதுவ தொண்மலை
மங்கை பாதி மணந்தவர்ப் போன்றதே. ௧௧

வில்லி ருந்திரை வின்னாண் குறுக்கிடு
வல்லி யொண்கணை செவ்வியின் வந்ததா
னல்லி நன்முகை யாக்கொடு வேலையோ
டொல்லும் வெஞ்சமர்க் குற்றிடல் போன்றதே. ௧௨

பெண்ணை சாய்த்துப் பெருகிக்கா வேரியி
னண்ணி யோதிம நன்குற வைகைசேர்ந்
தெண்ணு கம்பை யியைந்து மணித்திரண்
மண்ணி யேகும் வளங்கெழு பாலியே. ௧௩

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சிலம்படி மருவிச் சந்தத் திலகமுன் னேற்றி யிட்டுப் [ர
பொலங்கொடி யிடைசூழ் காஞ்சி பொருந்திமென் னுகின்மே லா

மிலங்குற வளைகள் கைசேர்ந் திரத்தினப் பணிதாங் காவுற்
பலம்பயி லளக மோடும் பாலியா மடந்தை போந்தாள். கச

சேட்டிள வாளை தாக்கத் தெங்கிள நீர்மார்த் தாண்டன்
பூட்டுவெம் பரித்தேர் காறும் விசையினிற் போதத் தெண்ணீர்
வேட்டவ ணிருந்த பாகன் விரைவினிற் பற்றி யுண்ணு
மூட்டுமூ ழெங்குற் றுலு மனைவர்க்கு மூட்டி டாதோ. கரு

துருக்கமு நறிய சந்துஞ் சுடர்கெழு மணியு முத்து
மருக்கிளா மலருந் தாங்கி மதமுமிழ் கரிமேற் கொண்டு
பெருக்கமுற் றளவின் மாக்கள் பரவப்பே ரியாற்று வேந்து [ல்.
பொருக்கெனக் கடலோர் காத மெதிர்புகுந் தழைப்பப் போமா

நண்ணிய புறத்து மாசோ டாடிய நரர்க்கு மற்றை
யுண்ணிகழ் மனத்த ழுக்கு மொருங்குடன் றீரும் வண்ண
மண்ணுறு மறிதது நண்ணு வகைபுரிந் தமல நல்கும்
புண்ணிய தீர்த்தம் பாலி யல்லது புவியின் யாதோ. கஎ

தன்னையா தரவிற் கண்டோர் தங்கட்கா தனமாய் நல்கப்
பொன்னிதழ்க் கமலப் போதும் பொருந்தியா நெர்க டாங்க
வநந்ல யளிபபச் சங்கு மடுத்துவந் துட்கொண் டோர்கள்
பன்னக மணிதற் கீயப் பரித்தொழு குறுமந் நீத்தம். கஅ

பொய்கையுங் கிடங்குங் காவும் புகுந்துலாம் பாலி நீத்தஞ்
செய்களின் மள்ள ரார்ப்பச் சிரமொரா யிரம்பெற் றீசன்
வைகுமொண் கயிலை நண்ணி வலம்புரி முழக்குங் கம்பன்
கைகளி னிமிரும் பாங்கர்க் கால்களி னிவந்து செல்லும். கக

## உழுதொழில் முதலியன.

தேஞ்சிலம் பெழுந்த பாலித் தெண்புனல் பரவ மள்ளர்
தாஞ்சிலம் பியமோ டார்த்துத் தலைத்தலைக் குழமிச் செய்க்க

ஞுஞ்சிலம் பகடு பூட்டி கல்லெழின் மாதர் தங்காற்
பூஞ்சிலம் பெனச்சால் கீறிப் புடைபாக் குழுவா ரன்றே. உ0

அந்தக னிவரு மூர்தி யன்னவெம் பகட்டேர் பூட்டி
யுந்தியங் குரப்பி மள்ள ருழும்பணை யெகினஞ் சங்கைத்
தந்திடு மண்ட மென்னச் சடக்கென வெடுத்து வான்போய்
நங்கெனை விடுப்ப வீழ்வ களிர்மதி தவறிற் றெருக்கும். உக

சுரும்பின மிரியல் போகத் தொத்திதழ்க் கமலச் செப்பு
ணிரம்புகட் கைம்மடுத்து நிறையவுண் டெழுந்து மள்ளர்
வரும்புன றேக்கி யான்ற வயலுழு தளைந்த சேறு
பரம்படித் திழுது செய்து பறித்தநா றெங்கு நட்டார். உஉ

## களைகட்டல்.

களைகளை விப்ப மள்ளர் கருதித்தம் மாதர்ப் பாரா
விளையமிர் தன்னீர் நுங்கள் விழியிதழ் வதன மோடு
முளரியொண் குமுத நீல மூரணிகிற் கின்ற வென்ன
வளைகலித் திடவே ரோடு மற்றவை களைதல் செய்வார். உங

## கலிவிருத்தம்.

முற்றிடு களிர்மதி முகத்து ழத்திய
ருற்றிட வயலினெம் முறையிற் கண்களான்
மற்றெனம யிகலினேர் வருத லென்னென
வெற்றிடு மறிக்கிட வெழுந்த சேல்களே. உச

முண்டக நறைமலர் மொய்த்த பாங்கரி
லொண்டொடி மார்திரு வுருவ மெண்ணில
கொண்டவை தொறுமரீஇக் குதித்து நின்றென
மண்டுறு பெரும்புனல் வயற்க ணிற்பரால். உரு

### பயிரின் விளைவு.

அலைபுனற் றண்பணை யகத்துச் செந்நெலோ
ரிலைபுடை வளைவுற வீர்ம்ப சுங்கதிர்
நிலைபெற வெழுந்துமே னிமிர்ந்து தோன்றுவ
கொலைமத கரியினங் குசங்கள் போன்றவே. உகூ

உண்ணிய வந்துறு நாரை யோடமே
னண்ணிய வாளைபாய் நலந்த பண்ணையிற்
பண்ணிய பயிர்பெரும் பாலி நாட்டுளோர்
புண்ணியந் தெரிவுற விளைந்த பொற்பினால். உஎ

### நெல்லரிதல் முதலியன.

மேனிமிர் பைஞ்சுருள் விரிதத சாலிகள்
பானிறை தருங்கதிர் பழுத்த கண்ணுறீஇந்
கூனிரும் பிணைக்கரங் கொண்ட ரிந்தபரா
வானக டிரிஞ்சுபோர் வகுப்பர் மள்ளர்கள். உஅ

ஏர்க்கதிர் வாள்கொடே யீர்வர் வீக்கிமெய்
வேர்க்கவங் கெடுத்துராய் வீழ்த்தி யெற்றுவர்
சூர்க்கரும் பகட்டினூற் றுவைப்பித் தார்ப்பராற்
போர்க்களம் புகுந்துபோர் புரிநன் மள்ளரே. உகூ

வேறுறும் பலாலநீத் துலவை மேவுழி
மாறரும் பதடிகண் மாற்றி நெற்குவா
லாறிஞெண் றரையருக் களித்து மற்றவைங்
கூறுநல் லறங்களிற் குலவச் செய்வரால். ௩0

### தடாகங்கள்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பிரிந்தமட வாரளகங் குழைக்காது விழியதரம் பிறங்கு மூரல்,
பொருந்துகள முலைபாணி யுந்திமுழந் தாள்கணைக்கால் புறந்

தூள் வாவி, பாந்திடுசை வலய்வள்ளை கயலாம்பற் றாளமணி புணிலங் கண்ணி, விரிந்தமரை சுழியலவன் வரால்கமட மிளை ஞருளம் விருப்பக் காட்டும். ருக

வானமெழு நிறைமதியந் தண்டகசாட் டரிவையர்தம் வதனம் போலா, துானமுட னலமரவிப் பதுமமா மலர்மலர்ந்தே யொப்ப விங்ஙன், ஞனமர்வ தென்னுக்கென் றழுக்காறு மனத்தடையத் தடத்த வாவித், தேனவிழு மிதழ்க்கமலச் செழும்போதின் றன தழலைகச் சிதைக்கு மன்றே. ருஉ

கலிவிருத்தம்.

தண்ணம் பாசடை துன்றுபு சார்ந்துள
கண்ண கன்புனற் காமரு பைந்தடம்
வண்ண வொண்குமு தங்கண் மலர்ந்தன
விண்ணின் வந்தெழு மின்றிரள் போன்றவே. ருரு

வாடு கின்ற மருங்குல் வருத்துபூண்
மூடு கின்ற முகிண்முலை மாதரார்
பாடு கின்ற ஞிமிறு பரந்தெழு
வாடு கின்றன வம்புய வாவியே. ருச

நீராடல்.

கலிநிலைத்துறை.

வாவி யம்புனல் குடையுமெல் லியர்மதர் மழைக்கண்
காவி யென்றிதழ் குமுதமென் றுனலங் கமலப
பூவ தென்றிருட் குழலினை மென்றுபல் பொறிவண்
டாவல் கொண்டுவந் தணைதரப் பொருக்கென வாழ்வார். ருரு

கோட்டி ரும்புனற் றடத்தினின் மூழ்கியே குடங்லகை
காட்டி நின்றிரிந் தோடிய வோதிமங் காணு

வேட்டி லங்கிய கமலமென் றதனிடை யிவரப்
பேட்டி னங்கணெஞ் சமுங்குற வனிதையர் பிடிப்பார். ௩௬

குடைந்து வாவிநீர் படியுமோர் குளிர்மதி முகத்தி
யடைந்து தாமரை முகத்தியை யலைக்குமொண் மயிலா
மடந்தை யோரர வல்குலைப் பிடிக்கும்வா ரணம்போ
னடந்த கோதையை மடங்கலா மருங்குலா ணலியும். ௩௭

## நகரச்சிறப்பு.

இன்ன வாகிய வளங்கெழு தொண்டைநா டேமந்
தன்னி லாமொளிர் மதாணியா மற்றுள தலங்கண்
மன்ன ஞாங்கரிற் சூழ்தர வழுத்திய மணியாக்
கொன்னு லாநடு நாயக மாயது கூவம். ௩௮

வம்பு மாமத யானைக ளிரண்டொரு வயிரக்
கம்ப மேவுறக் கட்டுமை யறங்களைக் காட்டுஞ்
செம்பொன் மாமதிற் காஞ்சிதென் றிக்கினிற் றிகழ
விம்பர் மேயது தனக்கிணை யிலாதவக் கூவம். ௩௯

### கோபுரம் முதலியன.

தேங்கு சோதிமா நவமணி பொன்கொடு செய்த
வோங்கு கோபுர மாடமா ளிகையொளிர் வேரம்
பாங்கு சூழ்மதின் மண்டபந் தெற்றிகள் பலவு
மீங்கு வாழ்தரு மிந்திர னகரென விலங்கும். ௪௦

### செய்குன்று முதலியன.

சோதி பெற்றவொன் பானெனும் மணிகளுந் துவன்றி
மேத கப்பெருஞ் செய்குன்று பற்பல விளங்கல்
பாத லத்தரா விறைசிரம் பரித்தபன் மகுடம்
பூத லத்துமேற் புறப்படத் தோன்றுவ போலும். ௪௧

திங்கள் வாணுத லரிவையர் நடுநிலை செறியத்
துங்க மாகிய மரகதச் சிகரிக டோன்றல்
பங்க யாதனப் பொறிபல மார்பகம் பயில
மங்குல் வான்முக டளவுநீண் முராரிகண் மானும். சஉ

தெண்ணி லாவொளிர் மேனிலச் சேக்கையின் மாதர்
நண்ணி நாயகர் தங்கலை நெகிழ்த்திட நாணி
மண்ணி வாள்விடு பதுமரா கபபணி மறைத்து
வெண்ணி லாவிருள் பட்டிட நீலணி விரிப்பார். சங

தருக்கு மங்கலக் கடைத்தலை தொறுமணி தழைப்ப
நிரைக்கு மொண்கழை யரம்பைபூ சதமிவை நிகழ்த
லரக்கு மெல்லிதழ் மாதர்தோ டொடைகளத் தழகை
யிரக்கும் வண்ணம்வந் தேகடை காக்குமா றேய்க்கும். சச

ஓதி மஞ்சின கரத்தய னிறுவியே யுட்போ
யாதி யங்கழல் பணிந்துமீண் டிடுமுனங் கடைந்த
மாதர் நன்னடை விழைந்துபின் சென்றிட வந்து
போத னங்கது கண்டிலன் றேடியே போகும். சரு

மூன்ன னங்கன்மாட் டெய்துபூண் முலையிணுட் கண்ட
மன்னு மைந்தர்தங் காதல்கூர் மகளிரை நோக்கி
யென்னை நம்மெதிர் தமியளாய் நேர்ந்தவ ளார்கொ
லென்ன வங்கவ ரூடுவர் விழைந்தன ரென்று. சசா

மருவு மாடவ ரெழின்மிகு வடிவினை நோக்கிப்
பொருவின் மாரவே டனதுளம் பொறுமலே வெள்கி
யுருவ மாயிவர் கண்முன முற்றிடா தியாமுன்
னருவ மாயது நன்றெனத் தேறியே யகல்வான். சஎ

உள்ள மாதரங் கூரவின் சொற்புகன் றுதவும்
வள்ள லாகிய கூவமா நகருறை மாந்தர்த்

தெள்ளு நீர்மைகண் டைடந்தருத் தேனுவொண் சிந்துப்
பள்ள மார்தரு கருமுகி லினம்பயப் படுமால். ௪௮

## யாகசாலை.

மோக சாகரங் கடந்துநூற் கரைகண்ட முனிவர்
யாக சாலையி னாய்புகைப் படலைக ளெழுந்து
பாக சாதனன் பதம்பெறு பசும்பொன்மா ளிகைப்பான்
மேக சாலங்கண் மேருவைச் சூழ்ந்தென மேவும். ௪௯

## தலவிசேடம்.

இனைய தாகிய கூவமாந் தனிநக ரிடத்து
முனிவர் வானவர் சூழ்தர முப்புர முடிப்பான்
புனித னேகுறிக் கரிமுகன் புகுந்துகூ வரத்தைத்
தனியு லாங்கரத் தொடித்தனன் செலவினை தடுத்தான்.

ஆன காலையி னமரர்தங் துயர்கெட வாண்டு
ஞான நாயகன் றிரிபுரம் பொடிபட நகைத்து
வான நாடவர் வாழ்வுபெற் றுய்ந்திட வழங்கிக்
கூனன் மேருவிற் பிடித்தமர்க் கோலமாய் நின்றான். ௫௧

நின்ற வாதிகூ வரந்தனை யொடித்திடு நிலையா
லன்று கூவரக் கினனெனும் பிள்ளையோ டமரிற்
சென்ற காலுடன் வயிரவா காரையாந் தேவி
யொன்ற மேருகோ தண்டமண் டிதமென வுறைந்தான்.()

## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

காங்கெயன் வடுசென் றக்கற் காதிகூர் மாண்டன் காரி
யோங்குறு காலச் செந்தீ யுருத்திர னுட கேசன்
பூங்கம லத்தன் மாயோன் புரந்தான் முனிவர் விண்ணோர்
தாங்களு மிறைவற் போற்றித் தங்கினர் கூவ மூதூர். ௫௩

என்றுமிக் கூவ மேய வெந்தைதன் கலைக டம்மி
லொன்றினை யாயி ரங்கூ றிட்டவற் றொன்ற தாக
மனறலங் கயிலை மன்று மாங்கமர் மற்று ளோருந்
துன்றிய தமது தானந் துன்றுவ தற்றே யாகும். ௫௪

அந்நக ரத்தின் வந்த வமரர்க ணிமைத்துக் கால்க
ளிந்நில வரைபயிற் சேர்ந்தி யிலங்கும்போ லவை கொண்டு
முன்னுறு முகங்க ணான்கு முறையினந் தணர்கண் மன்னர்
தொன்னிதி வணிக ராய சூத்திர ரென்ன வாழ்வார். ௫௫

அறந்தலை நிற்ற லாற்பே ரறிவினாற் கொடையா லன்பான்
மறந்தரு கொலைக ளாதி மாற்றலால் வாய்மைச் சொல்லா
னிறைந்தவிக் கலியு கத்து நிலைத்தவிர்க் கூவ மூதூர்ச்
சிறந்தவே ளாள ராயினோர் தேவரென் றறிய லாமால். ௫௬

தளங்கமழ் கமல வாசச் சதுர்முகன் கற்ப வீற்றிற்
றுளங்கிட வுலக மெல்லாந் தொலைக்குமப் பிரள யத்தும்
வளங்கெழு விற்கோ லத்தெம் வள்ளலூர்க் கிறுதி யின்றால்
விளங்கிய கூவ நீரை வெள்ளங்கொண் டகலு மோதான். ௫௭

கயிலைகே தாரங் காசி கச்சிதென் மதுரை சோண
சயிலமா ரூர்கா ளத்தி தடம்பணைத் தில்லை யாதி
யியலுறு தானந் தோறு மிருந்திறை பகர்வ தெல்லாம்
பயிலுமா தவர்வாழ் கூவப் பதிபெறும் புகழே யம்மா. ௫௮

தக்கநற் காசி யாதி தலங்களி னிழைத்த தீமை
முக்கணெம் பெருமா னேய முழுதுறுங் கூவத் தெல்லை
புக்கவக் கணமே தீரும் போற்றுமந் நகரிற் செய்த
மிக்கவெம் பவம வற்றால் விலக்கிடப் படாதா லென்றும். ௫௯

நடைவலம் வரலி ருத்த னற்சுகா தனம்வ ணக்கங்
கிடைமொழி துதித்தல் கேட்டல் கேள்வியுன் னுதறியான

மடைதுயில் சமாதி செய்கை யரன்றொழி னோக்கல் கொன்றைச்
சடையனை நாட லாகுந் தனைநிகர் கூவத் தன்றே. ௩0

சீருறு மிணையில் கூவச் செழுநக ரிடத்து மேவி
யோரணு வளவி யற்று மோரற மென்மே லோங்கி
மேருவின் வளரு மன்ன மேருவிற் செய்த தீமை
நேரணு வதனி னெய்தாய் நீறுபட் டழியு மாதோ. ௩௧

## கலிவிருத்தம்.

மைந்தரை யன்னையை மாதரை யாவைத்
தந்தையை யந்தணர் தம்மை வதைத்த
வந்தமில் பாதக ராயினு மெல்லை
வந்திடி னந்நகர் வண்கதி நல்கும். ௩௨

பன்றி யயங்கள் பசாயுத நாய்மா
வன்றில் கரங்கொடி யங்கத மாதி
கொன்றை மிலைந்தவர் கூவ புரத்தே
யொன்றின யாவையு மொண்கதி நண்ணும். ௩௩

அருத்தி மிகுந்திட வப்பதி யின்பே
றுரைத்தவர் கெஞ்சுற வுன்னின ரங்ஙன்
கருத்தனின் வந்து கலந்து பிறந்தார்
மரித்தவர் மெய்க்கதி மன்னுவ ரன்றே. ௩௪

அந்நக ரத்தி னயற்பதி யாரோர்
கன்ன விருப்பி னயன்சத கற்ப
மன்னுவர் மெய்ச்சிவ லோக வளத்தே
யென்னி னதற்கிணை யாதுரை செய்வாம். ௩௫

## மூர்த்தி விசேடம்.

ஆயிர கோடி யயன்றிரு மாறூன்
மேயினர் பூசை விளைத்தனர் கூவத்

தூயனை யேவழி பாடு தொடங்கி
யேயின விந்திர ருக்கள வின்றே. ௬௫

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அண்டர் சித்த ரியக்கர் கின்ன ராழ்பி லத்துறை நாகர்வின்
மண்டி தற்கிட ஞகி வைகிய கூவ மாநகர் சூழ்தர
வெண்டி சைக்கணும் வந்த மைத்தவர் பூசை செய்த விலிங்கமோ
கண்ட வர்க்குயர் புத்தி முத்தி யளித்தி ருப்ப கணிப்பில. ௬௭

பன்ன ரும்புகழ் மேய கூவ புரத்தி னிற்குட பாலினிற்
கின்ன ரம்புரை கொங்கை மேனகை கெண்டை யங்க ணுருப்பசி
முன்ன ரம்பைய ரிளமை நல்லெழின் முற்று ருதரம் பேசனு
மென்னவொண் சிவலிங்கமொன் றையியற்றியேவழிபட்டனர்.

அந்த மெய்ச்சிவ லிங்கம் வேண்டுநர் வேண்டி யாங்கு வழங்கியே
சுந்த ரத்துறு மால தன்குண திசையின் முன்பு தொடங்கிய
பந்த மற்றிட முனிவர் பூசை பயின்ற கண்ணுவ லிங்கமுற்
றிந்தி ரத்திரு வந்து கண்டவர் பெற்றி டும்படி யீயுமே. ௬௯

## தீர்த்தவிசேடம்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

செய்பொனிதழ்க் கொன்றைபுனை விற்கோலத் தெம்பெரு
மான் றிருமுன் றாக, வம்பவளச் சடைக்கங்கை தனிற்புனித
தீர்த்தமொன் றுண் டறையக்கேண்மி, னும்பருமங் கதின்மூழ்கி
மனககளங்க மொழித்திடுவ ருயர்ந்த விற்கோ, னம்புபடிற்
பிழைக்குமோ வினையனைத்து மக்கணமே யகன்று போமால். ()

அத்தகைய தீர்த்தமிவ ணவதரித்த வகையவுணர் புரங்கண்
மாயச், சுத்தனடற் புரவிநெடுங் கொடியணித்தேர் மிசையமரர்
சூழ்ந்து போற்ற, வித்தலகின் றிடுங்காலை யிரதகூ வரத்தையிப

முகத்தெம் பெம்மான், கைத்தலங்கொண் டிறுத்தவிடத் தெழுந்
ததூஉம் பவமாசு கழுவு நீராய். ௭௧

ஆதலினங் கதற்கரிய திருநாம மச்சிறுகே ணியதா மென்றே,
யோதுவாங் கதன்பெருமை யுமையொருபா லுடையபிரா
னுரைப்ப தல்லாற், போதமிலென் புந்தியினாற் புகலவெளி
தோவதனைப் புகழ்ந்து போற்றிற், றீதகலு மெனும்பொருட்
டாற் றமியேனு மறிந்தபடி செப்பு வேனால். ௭௨

வந்ததனி லிருநான்கு பகன்மூழ்கின் வரன்முறையா லொவ்
வோர் வைகற், கந்தமறும் பவமேபோமபுண் ணியம்வளருமகபதித
னாய காந, முந்துபிர சாபதிதன் றனமய வுறுதான முகுந்
தன் றன, மெந்தையுமை யொருபாக னிருந்தான முதலியவை
யெய்து மன்றே. ௭௩

செங்கதிர்வெண் கதிர்நாளட் டமியயன முவாவாதி தினங்க
ணண்ணி யங்கதனி லாடுநர்க ளருப்புதல்வ ரரசாட்சி யாக்க
மெய்தித், தங்கியிருங் கதியடைவ ரிறற்றோய்ந்து போட்பறவை
சார்ந்த வாயிப, பொங்குபுனற் படிந்தவரும் வினைதீர்ந்து மெய்க்
கதியிற் புகுவ ரன்றே. ௭௪

தீர்த்தமுல குளவெவையு மப்புனித தீர்த்தத்துக் கொவ்வா
வெல்லா, மூர்த்திகளும் விற்கோல மூர்த்திதனக் கிணையல்ல
முந்நீர் சூழ்ந்த, பார்த்திகழு மருந்தலங்க ளனப்பகரப பட்ட
வெலாம் பவன மூன்றும், போர்த்தபெரும் புகழ்படைத்த கூவ
மா நகரதனைப் போன்றி டாவே. ௭௫

எண்ணிறந்த வுகங்கடவம் பயின்றதனால் விழிநுதலி னிமை
க்கு மீச, னுண்ணிறைந்த கருணையினா லிலகுகுரு பானருளா
லொழிவில் சீர்த்திப், பண்ணிறைந்த கூவநகர்ப் பெருமைசிறி
தறிந்துரைத்தேன் பவங்க டீரக், கண்ணிறைந்த மலபாகம் வர
நீவி ரதுவினவக் காதல் கொண்டீர். ௭௬

என்றினைய சூதமுனி புகன்றிடலு மிருந்தவர்க ளுவகை யெய்தி, யின்றெமது விழிசிறப்ப நினைக்காணும் பேறுடையே முலகி னெல்லா, நன்றியையு முடையேம்வெம் பவப்பிணிக்கு மருந்தாகி நணுகுங் கூவஞ், சென்றுதொழு மரும்பயனும் பெற்றனமென் றுரைத்திதனைச் செப்புகின்றார். ௭௭

அருந்தவநீ முனம்புகன்ற திரிபுரத்தி னியல்பெவன்கொ லதிப ராகி, யிருந்தவர்யா ரவர்நாம மேதமரர் குழுவோடு மிறைவன் சாட, வருந்திறம்யா தைங்காத்துத் தனிக்கடவு ளமலனிவர் வையத் தாழி, பொருந்துறுமா றொடித்ததென் னுக் குரைத்தியெனச் சூதமுனி புகல்வ தானான். ௭௮

திருத்தலச்சருக்கம் முற்றிற்று.

ஆ. - திருவிருத்தம்-௧௬௮.

---

மூன்றாவது

## திரிபுரதகனச்சருக்கம்.

—(*)—

மேற்படி வேறு.

தாலமேற் புகழ்வைத் துள்ள தாரகன் சிறாராய் வித்துன்
மாலியே தார காக்கன் வயக்கம லாக்க னென்ன
வேலுலாந் தடக்கை வென்றி வீரர்கண் மூவர் பாவ
மூலகா ரணம தாய முக்குற்றம் போலுண் டானார். ௧

பேருக மனேக மெண்ணில் பெரும்புவி யண்ட மாண்ட
தாருக னுயிர்கூற் றண்ணச் சட்டகங் கடைவாய் பெய்நெய்த்
தோருக வயிலிற் செவ்வே டொலைத்தபின் மூவ ரும்பங்
கேருக விறையை நோக்கிக் கெடலருந் தவமு யன்றார். ௨

துய்த்தலற் றளவில் காலந் துயரொடு நோற்று மேனி
யெய்த்தவர்க் கருள வன்ன முடனிருங் கரகத் தெண்ணீர்
கைத்தலந் தன்னிற் கொண்டு கமலபீ டிகையி னேயம்
வைத்தமர்ந் துலக மாக்கும் வள்ளன்முன் வந்து நின்றான் ௫

நின்றலு மதனைக் காணா நிலமுறப் பணிந்தெழுந்து
வன்றிற லவுணர் போற்ற மான்மக னுவகை யெய்தி
யென்றனை நினைந்து நோற்ற தேதுளம் விரும்பி நீவிர்
நன்றுற மொழிமி னென்ன வஞ்சலி நவிற்றிச் சொல்வார். ௬

மூவுல கத்து மொன்ற மூவெயி லளிக்க வேண்டு
மூவரு மவணு றைந்து முடிவிலா வுகங்க ளாண்டு
மேவலர்ச் செகுக்க வேண்டும் பத்துநூ றாண்டிற் கோர்கான்
மேவுற வெயில்கண் மூன்றுங் கூடவும் வேண்டு மன்றே.

இன்னமு மொன்றுண் டைய வெந்தமக் கிறுதி நாளுண்
டென்னினு மொருவ னேநின் றெளிதினி லாட லேபோற்
றன்றொரு கணையா லெம்மை யொருங்குறத் தடிவ தல்லாற்
பின்றொருசெயலான் வெல்லாப்பெருமையும்வேண்டுமென்றார்.

அன்னவர் மொழியைக் கேளா வம்புய னற்றா கென்று
தன்னருள் புரிந்து போனான் றயித்தியர் நிற்ப வங்கு
னுன்னத மகற்சி நூறி யோசனை யாமூன் றிஞ்சி
பொன்னயம் வெள்ளி தன்னாற் பொற்புட னான வன்றே.

ஓதிம னாணை தன்னா லுயர்வினுக் கேற்ற வாறு
மேதினி தனில யத்து மிளிர்மதி லந்த ரத்துச்
சோதிகொள் வெள்ளி யிஞ்சி துறக்கத்தா டகத்தி னாய
மூதெயி லுறவ வற்றை மூவரு முறையிற் கொண்டார். ௮

கொண்டவ ரேவ வாங்குக் கோபுரங் கோயி றெற்றி
மண்டப மவுண வெள்ள மருவிடந் துரக சாலை

விண்டொடு சேவ கம்பொன் வீதியா வணஞ்செய் குன்று
தண்டலை வாவி யாதி தந்தனன் மயனென் கின்றான். ௯

அவ்வள மனைத்து நோக்கி யவுணர்க ளுவகை பூத்துச்
செவ்விது நங்கட் கிந்தச் செழும்புர மெனவி ருப்ப
வெவ்வமில் கலைக டேர்ந்த விருந்தவ மயனென் றுள்ளோன்
றெவ்வடு புயவ ராகளோ ருறுதியைத் தெருட்டு கின்றான். ௧௦

கலிவிருத்தம்.

செல்வமும் பதாதியுஞ் செறுநர் தங்களை
வெல்வதும் வீரமும் புகழு மேன்மையுங்
கல்வியும் புதல்வருங் கதியும் வேண்டுந
ரெல்வரு மிலிங்கபூ சனையி யற்றுவார். ௧௧

அல்லலும் பழிகளும் பகையு மச்சமுஞ்
செல்லலும் பிணிகளுஞ் செயிரு நிந்தைகள்
சொல்லலு மிடியும்வெஞ் சோக மோகங்கள்
புல்லலு மிலிங்கபூ சனையிற் போகுமால். ௧௨

அங்கையி னடங்குறி லிலிங்கத் தாட்டியே
யெங்கணு முடையபச் சிலையொன் றிட்டுமோல்
பங்கய னடிதொழும் பரனைப் பூசியா
மங்குறு பவர்கடம் மடமென் சொல்லுவாம். ௧௩

எப்திவாழ் வொடுஞ்சில ரிருப்பக் கண்டுமுன்
செய்தபூ சாபல மென்னச் செப்புவார்
மெய்தவ விலிங்கபூ சனைவி ரும்பியே
செய்திடா தழன்றிடுஞ் செய்கை யென்சொல்வாம். ௧௪

இருள்புரி பவமகன் றின்ப மெய்திட
வருள்புரி யிலிங்கபூ சனையை யாற்றிடா

மருள்புரி மனத்தினோர் மருவுந் தீயுடல்
சுருள்புரி சுணங்கன்வாற் றோற்றம் போலுமால். ௧௫

பரசிவ லிங்கமெய் வடிவிற் பட்டிட
விரைமல ரொன்றறி யாமல் வீசிய
நராகலை யிந்திர ருடங் கொண்டுபோய்ச்
சுராதொழு வனுதினந் துறக்க மேவுவார். ௧௬

வீழ்ந்தது யலர்ந்தது மிறுதிறு தான்விழப்
போழ்ந்தது பழையது புலர்ந்த தேமபிர
சூழ்ந்தது கலைநதொரு தூய பூமனம்
வாழ்ந்தான முடியிடின மரித்து நிதநிடார். ௧௭

பொலககடி மலாகளாற் சிவலைப பூசியா
யலககயி றெறிதரு மறலி தன்னையுங
கலககமி லறிவன்மார்க் கணடன வென்றுமுன்
விலககரும் விதியையும் விலககி னனரோ. ௧௮

வேண்டிய பொருளொலாம் வேண்டி யாங்குறக்
காணடகு நீறுடற் புனைநது கண்டிகை
பூணடிலிங் கார்ச்சனை புரிமி னென்றன
னெண்டரு மயனெனு மிலையில் சூழ்ச்சியான். ௧௯

அன்னவ னறைநதசொல லவுணத் தீயர்கேட்
டெனனரு மிலிஙகபூ சனையு ஞற்றிடு
நன்னல மடைநதனர் நஞ்சு கான்றிடும்
பன்னக மணியையும் பரிக்கு மாறுபோல். ௨௰

அன்னதின் பின்னரவ் வவுணர் மாதிர
மன்னரை யமரரை மற்று ளோர்தமைத
துன்னிய வலியினுற் கேடு சூழ்தொறுத்
தினனலுற் றிடுப்பித்துத் தேவல் கொண்டனர். ௨௧

கான்றிடு மெரிவிழிக் கடிய மூவருந்
தோன்றிடு முயிரெலாந் துயரின் மூழ்குற
மூன்றெனு முலகங்கண் முற்றும் வெற்றிகொண்
டான்றதம் மாணையே நிறுவி யாண்டனர். உ௨

புரந்தர னவுணர்செய் புன்மை யாற்றிடா
தரந்தையின் விரைந்தயி ராணி யைக்கொடு
வருந்திமை யோரொடு மருவி யோருவிற்
கரந்தன னிருந்தனன் கணிப்பில் காலமே. உ௩

சிறந்திடு மிந்திரன் றிருவும் பொன்றியே
மறைந்துதன் மனையொடு வறியன் போய்மலை
யுறைந்தன னென்றிடி னொருங்கு முற்றவுந்
துறந்திடு மின்பமே துன்ப மில்லதே. உ௪

வெங்கொடி வருத்துற வெருவிக் கூகைக
டங்கள்வன் காலம்பார்த் தொளித்துத் தங்கல்போற்
சிங்குற வவுணரைச் செறுக்கு நாடொறிந்
தங்குழ மமரர்க ளரையற் கோதுவார். உ௫

பொய்வகை யவுணர்கள் புரியும் வெந்துய
ரெவ்வகை யகலுமென் றிதயத் தெண்ணிநீ
யவ்வகை முயன்றிலை வறித மர்ந்தனை
யுய்வகை யடியரே முஞற்ற வல்லமோ. உ௬

என்றிமை யவர்பரிந் தியம்ப விந்திரன்
பொன்றிகழ் சரோருகப் பொகுட்டு வள்ளல்பாற்
சென்றுநந் துயரெலாந் தீர்த்தி யையநீ
யென்றுநாம் வேண்டுதும் வம்மி னென்றனன். உ௭

கலிநிலைத்துறை.

அம்மொழி துன்பங் கூறிமை யோர்கேட் டார்வத்தா
லெம்மிடர் போயிற் றின்றுட னென்ன வெழுந்தெய்த

முமமதி லோர்கட் கஞ்சி யொளித்தே முகிலூருஞ்
செம்ம லறுங்கம லத்திறை தன்னுழி சென்றுற்றான். ௨௮

உற்றவ னும்ப ருடன்சர ணத்தி லுறத்தாழூஉ
நற்றுதி யோடு நவிந்தவ ணிற்ப நறுங்கஞ்சப்
பொற்றவி சண்ண றெரிந்து முகங்கள் புலர்ந்துள்ளீர்
சொற்றிடு நெஞ்சி லடுத்தக லாதுறு துன்பென்றான். ௨௯

## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

என்றலு மகவான் சொல்வா னிறைவநின் னருளி னேன்மை
யன்றுறு மவுண ரெம்மை யலைப்பவைந் துள்ள மாழ்கி
மின்றிகழ் முகில்கண் டஞ்சும் வியன்சிறைக்குயிலிற்பொன்னங்
குன்றிடை யின்று காறுங் குறுகினேங் கரந்து மன்னோ. ௩௰

துன்னிய வசுரர் தம்மைத் தொலைத்தினி யெமைப்பு ரப்பான்
பன்னுதி மெனவந் துற்றேம் பாரதி யுடைய நீயே
யின்னலங் கடல்க டத்தி னன்றியா ரியற்ற வல்லார்
நின்னருள் புரிதி யென்னச் சதுர்முக னிகழ்த்து கின்றான்.

புரத்தினென் றவுணர்மிக்க பொருவலி யெம்மா னீக்குந்
தரத்ததன் றடைகண் மூய தடத்தலர்ந் திலங்கு கின்ற
விரைத்ததண் குவளை யன்ன விழியுடற் கடவு ளுந்தங்
கருத்துவெந் துயர மெல்லாங் களைகுவன் கமலக் கண்ணன்.

என்றய னிந்தி ராதி யிமையவர்க் கொண்டு மால்பாற்
சென்றடி வணங்கி யன்னோர் திருவிழுந் தவுணர் தம்மால்
வன்றுய ருழக்கு மாறு மனமுளைந் தியம்பித் தீய
புன்றொழி லசுரர்ச் சாடிப் புரந்தருள் புனித வென்றான். ௩௩

நாரண னதனைக் கேளா நவிலும்பற் றலர்க டம்மைப்
போரினி லுபசத் துக்கள் பொருதழித் திடுவ ரென்ன
வாரண முரைத்த றன்றா லனையரை விடுத்து மூன்று
வீரரு மடியச் செய்தும் விரையவென் றிதனைச் செய்வான். ௩௪

மனத்தினி லுபசத் துக்கள் வருகவென் றன்ன மாயோ
னினைத்தன னென்ன வன்னோர் நேர்ந்தனர் நிற்ப நீவிர்
சினதெயி லவுணர் தம்மைச் செற்றுவா னவர்க ளின்ன
லனைத்தையு மகற்று மென்றான் படியளந் தளிக்கு மண்ணல்.

அன்னவ ரதனைக் கேளாச் செல்லுது மவுணர்ச் சாட
வென்னலு மகிழ்ந்து தன்பா லிருங்கணந் தனிலெண் ணில்லார்
துன்னிய வனிக மாகத் தூண்டினன் சென்மி னென்னப
பன்னக சயனன் பொற்றாள் பணிந்தனர் போயி னாரால். ௩௬

தண்டுவேல் வயிர வொள்வாள் சரம்பொழி சாப மாழி
பிண்டிபா லங்கள் சூலம் பேரெழுக் கணிச்சி யாதி
கொண்டபா ணிகளோ டண்டங் குலுங்கவார்த் தெழுந்து வேக
சண்டமா ருதம்போ னேர்ந்து சமர்த்தொழில் புரியச் சென்றார்.

பேரெயின் மீதி னேமிப் பிரான்விடு தானை நீத்தம்
வாரிதி தன்னை நாடி வருநதி போலச் செல்ல
வேருற கடலெ திர்த்தா லென்னவாண் டமருஞ் செங்கட்
காருட லவுணர் கேட்டுக் கதுமெனச் சமரி னேர்ந்தார். ௩௮

வில்லுமிழ் சரமுந் தண்டும் வேல்களு மழுவும் வாளுங்
கல்லுற ழெழுவுந் தாளுங் கரங்களுந் தலையுஞ் சிந்தச்
செல்லுமிழ் முகிலி னின்று சிந்தின ரவண ரன்ன
மல்லலம் படைக ளார்த்து மற்றவர் தாமு மார்த்தார். ௩௯

இத்தகை யுடன்று வெம்போ ரிருதிறத் தவரு மாற்ற
மத்தவெங் களிறு போலு மறவருக் குலக முண்ட
வித்தகன் விடுத்த சேனை வென்னிட வதனைக் காணு
வதைதலை நின்ற வானோ ரலக்கணுற் றோடி வந்தார். ௪௦

வந்தவ ருயங்கி மாயோன் மலரடித் தலத்து வீழ்ந்து
சுந்தர வரவிற் றுஞ்சுந் தோன்றலீ விடுபடப் போனார்

வெந்திற லவுண ரோடும் போர்த்தொழில் விளைத்து வன்மை
சிந்தின ரிரியல் போனார் செயுஞ்செய லினியா தென்றார். ௪௧

மாயவன் வினவி யுள்ள மாழ்கிவெய் துயிர்த்து வன்கட்
டீயவர் சிவலிங் கத்தை யருச்சனை செயலால் யாவ
ராயினும் வெல்லற் கொண்ணா வெனநினைந் தழுங்கி நிற்குஞ்
சேயுயர் விசும்பி ருக்குந் தேவரை நோக்கிச் சொல்வான். ௪௨

## கலிநிலைத்துறை.

பன்ன கத்திரு லடுஞ்சின விலங்கினாற் பசாசாற்
றுன்ன வக்கிர கங்களாற் பிணிகளின் றொடர்பான்
மன்ன ரிற்கொடி யோர்களாற் கரவரான் மருவு
மின்னன் மெய்ச்சிவ லிங்கபூ சனையினோர்க் கியையா. ௪௩

பாவ கோடிகள் பயின்றிடு பதகரே யெனினுந்
தேவ தேவனைச் சிவலிங்கத் தருச்சனை செய்வோர்
தாவின் மாதவப் புண்ணிய ரேயவர் தம்பான்
மேவு வானல னந்தகன் றனதுளம் வெருவி. ௪௪

ஆத லாலெயின் மூன்றுடை யவுணர்தா மனைப்
புரி சாதனம் புனைந்துபூ சனைசெயு மளவும்
யாது மோர்செய லான்முடி வெய்தில ரியாமோர்
போத சூழ்ச்சியி னவருச் சனைவிடப் புரிதும். ௪௫

ஈங்கு நம்மனத் துயர்சுரர் காளென நிகழ்த்தி
யோங்கு மாமர கதக்கிரி யொன்றிரு சுடரும்
பாங்கு வைத்தெனக் குருமணி யாழிவெண் பணிலந்
தாங்கு மாயவ னாதற் கினையன சாற்றும். ௪௬

## கலிவிருத்தம்.

அற்புடை மகிணர்தம் மாவி யாகிய
கற்புடை மங்கையர் கருதிற் பல்வகைப்

பொற்புடை யுலகெலாம் பொன்று மாறுமாம்
வற்புடை முனிவரின் வலிய ரன்னரே. ௪௭

கணவரைத் தொழப்படுங் கடவு ளென்றுளும்
பணவரா வல்குலார் பணித்த தொன்மையான்
மணமலர்த் தவிசயன் மகிழ்ந்தி ழைத்தலோ
வினையிலெங் கருத்தரு மிறையுஞ் செய்யுமால். ௪௮

புனிதமெய்க் கற்பறாப் பொருவின் மாதரார்
மனமகிழ் வுற்றிடின் வராத நன்றிலை
சினமுறப் பெற்றிடிற் றீங்கு மன்னதே
யனையவர் தன்மையா ரறியக் கூறுவார். ௪௯

மிடியினர் குணமிலர் விருத்தர் நோயினர்
வடிவில ருறுப்பிலர் வஞ்சர் மூடர்வெங்
கொடியவ ராயினுங் கொழுநர் தம்மிடை
மடிவில ரன்புகற் புடைய மாதரே. ௫௰

இத்திறங் கற்பின ரெயில்கண் மூன்றுடைக்
குத்திரக் கொடியவர்க் குறாகு மாதரா
ரத்திறத் தினுமடற் கரிய ரன்னகற்
பெத்திறத் தினுமொழித் தெய்தென் றேவினான். ௫௧

நாரண னிவைசொல நார தப்பெய
ராரண முனிவர னரும்பு ணர்ப்பினால்
வாரண மனையவர் மாதர் கற்பெலாங்
காரண வகற்றுவன் கடிதென் றேகினான். ௫௨

## எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

முனிசென் றதற்பி னிமையோர் தவன்று மவையுற்ற மாயை
முதல்வன், றனியங் கெழுந்து புரவாணர் தங்கள் சிவலிங்க
பூசை தவிரும், வினையொன் றிழைப்ப லெனவே நினைந்து

மறைசட்கு வேறு தருநூன், மனமொன்றும் வண்ண முறை செய்து புத்த வடிவோடு கொண்டு வருவான். ௫௩

மறமொன்று கின்ற வரணங்க டம்மின் வருமம்பு யக்க ணிறைவன், றிறமொன்று புத்த னருகன் றயங்கு சினனென்ன வங்கணடையா, வறமென்று வஞ்ச மதிநூன் மருட்டி யறைகின்ற காலை யவுணர், நிறமொன்று பூதி மணியோ டிலிங்க நிலைவிட்ட கன்ற னரரோ. ௫௪

விதியென்று மாயன் வினயத் துரைத்த வெறும்வஞ்ச நூலின் விதியைக், கதியென்று கொண்டு மனமா லடைந்து கதியற்ற தீய கயவர், நிதியென்று கொண்ட திருநீ றிழந்த நிலைபா முடம்பு நிலவு, மதிநின்று சென்று மறைகா லிருண்டு வளமற்ற கங்குல் புரையும். ௫௫

புரமொன்று தீயர் மடமாத ராரு முனம்வந்து புக்க முனிவன், விரகங் கலந்து மிகுதிட்ப நெஞ்சி னிகழும் படிக்கு வினயர், தருகின்ற சொல்லின் மயல்செய்ய வும்பர் தமபுண்ணி யத்தின் வலியின், றிரமொன்று கற்பு நிலைபோ யகன்று தெறுகாம மூற்று மெலிய. ௫௬

## கலிவிருத்தம்.

இனிமாய் குவர்தா னவரின் ஞெடெனு
முனிமா தவனுர் வமுகிழ்க் கவரா
நனிமா யையினு யிடைநண் ணியவா
றுனிமா கருவப் பவுரைத் தனரால். ௫௭

அக்கா லையினு ரணனுஞ் சரண
முக்கால் வலம்வந் துமுடிக் கணியா
நக்கா டுவர்பா டுவர்நம் பகைனு
ருக்கா ரெனவுண் மகிழும் பரெலாம். ௫௮

அம்மா சருவப் பரிகண் டருளி
நம்மா குலமுற் றையுறா திடவெம்
பெம்மா ஞெடுபே சுறும்வம் மினெனு
வெம்மான் மலையெய் துவன்யா வரொடும். ருக

அந்நா ரணன்வா னவரா குலமென்
றன்று யகனெண் சரணந் தொழுது
சொன்னு லஃதின் றுதொலைப் பனெனு
வுன்று வரும்வெற் பணியோ தியிடின். சுO

மேற்படி வேறு.

பண்டு தற்கம் பரித்த பரமனை
மண்டு தன்றலை வைப்பத் தவத்தினுல்
விண்ட லந்தொட வெண்மதி பேருருக்
கொண்டெ ழுந்தென நின்றதக் குன்றமே. சுக

வருண மிக்கபால் வாரிதி சிற்கன
புரண னுக்குமோர் பொற்றவி சாவுனித்
திரண மொத்த திருவன லாமையாற்
பரிண மித்தெழும் பண்பன தவ்வரை. சுஉ

இத்தி றத்தி னிலங்கு கயிலையாம்
வித்த கத்தனி வெற்புழி யிந்திரை
யத்த னும்பர் குழுவொடு மஞ்சலிக்
கைத்த லந்தலை காட்டின னேகினுன். சுரு

எண்ணி கந்தவி ருங்கண மேத்துற
வண்ண னந்திரு நந்தி யமர்ந்தருள்
வண்ண வொண்கடை வந்தவ னைத்தொழாக்
கண்ண னின்றிது கட்டுரைக் கின்றனன். சுச

சென்று தெய்வ சிகாமணிக் கிங்ஙன்யா
மொன்றும் வண்ண முரைத்தரு ளையநீ

யென்று கண்ண னியம்ப வருளியே
நன்று நின்மெனப் போயின னந்தியே. ௬௫

அளவி லொண்புவ னந்திபர் பல்கண
மளவி னன்முனி வோர்நிறை வாமவை
யளவில் சோதி யவிர்மணிப பீடம்வா
ழளவில் பேரரு ளாளிமுன் னெய்தினான். ௬௬

எந்தை தாண்முன் னிறைஞ்சி மலரய
னிந்தி ராதி யிமையவர் சுற்றமால்
வாது னான்மணி வாய்தலி னென்றலு
நந்தி கூவுதி யென்றன னையகன். ௬௭

இறையி னிற்கடை யெய்தி யுமைப்பா
லுறவ ழைத்தியென் றோதினன் வம்மெனச்
சிறையி டுத்ததென் னீரென வோடினார்
நிறை மகிழ்ச்சி நெடியவ னாதியோர். ௬௮

மின்று லாஞ்சடை வித்தக னெற்பெறு
மன்னை யோடு மமர்ந்த வவைக்களந்
தன்னி னேகிமுன் சாயும் பணைமா
மென்ன வேபணிந் தன்பி னெழுந்தனர். ௬௯

கூர்ந்த வன்பிற் குவித்தகை யுச்சிகொண்
டோர்ந்த சொற்றளர் வுற்று மனனெக
வார்ந்த கட்புனன் மார்பு நிரம்பமெய்
சோர்ந்து நின்று துதித்திடன் மேயினார். ௭௦

## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நிறைந்தநின் றொல்லை யுண்மை நிலைதிரி வின்றி யாங்கள்
பிறந்திறந் திடுதே தீர்ப்பான் பேரரு ளுருவு கொண்டிங்
குறைந்தநின் கருணை போற்றி யுயிர்க்குட லளித்தி யக்கிச்
செறிந்தமுன் வினைய ருத்தித் தீர்த்திடும் பரிவு போற்றி. ௭௧

உலகுயி ரின்பந் துய்ப்ப வுனதுபே ரருளை மாதென்
றிலகுற விடத்தி ருத்தி யிருந்திடுங் கருணை போற்றி
விலகியல் லின்பஞ் சில்லோர் விடுக்கவும் வுருவ கன்ற
வலகினல் லருள்கொண் டுற்ற வமலவக் கருணை போற்றி. ௭௨

ஐம்பெரும் பூத மாதி யாயதத் துவசா லங்க
டம்பெரு கறிவொ டுக்குந் தனியிருண் மலம்வே றுக
நம்பநின் னருளி னின்ற நற்றவர் தம்மின் வேறு
யிம்பரி னறிந்து கூடா திருந்தவா றிருப்போய் போற்றி. ௭௩

அருவுநல் லுருவு மற்றை யருவுரு வதுவு மாகப்
பரவுமொன் பதிற்றுப் பேதப பகுதியுஞ் சத்தி யைந்தின்
விரிவுமன் றுய வன்றன் மேனிலை தமதே யாகப்
பொருவரு மன்பர்க் காக்கும் பொருவிடைப் பாக போற்றி. ௭௪

இனையன பகர்ந்து போற்ற வெங்கணு யகன்மு ராரி
தனையருள் கொண்டு நோக்கிச் சததள கமலக் கோயின்
வனிதையங் குவட்டுக் கொங்கை முகடுழும் வயிரத் தோளாய்
துனியுறு மமர ரோடும் வந்ததென் சொன்னீ யென்றான். ௭௫

என்றலுங் திகிரிப் புத்தே ளியம்புவ னைய விண்ணோர்
வன்றிற லெயில்கண் மூன்றும் மலரயன் றரப்பெற் றுள்ள
புன்றொழி லவுண ரின்னல் புரியநொந் தரைய னோடு
மின்றள வெல்லை காணு விருந்துயர்க் கடலி னாழ்ந்தார். ௭௬

கருணையங் கடலே விண்ணோர் கலங்களுர் விடுத்து நின்பொற்
சரணபங் கயங்கட் கேவல் சந்தத மியற்றும் வண்ண
மாணவெங் கொடியோ ராற்ற லழித்தருள் புரிதி யென்ன
வருணகுங் குமப்பு யத்து மாயவன் வழங்கி நின்றான். ௭௭

படைக்கல மைந்து பெற்றோன் பகர்ந்திவை நிற்கு மெல்லை
தொடைக்கலன் பயிலும் பொற்றோட் சதமகன் சுரர்களோடு

புடைக்கலஞ் சுழலுங் காகம் போன்றனந் தமியே முன்ற
னடைக்கலங் கருணை செய்யென் றமலநா யகற்ப ணிந்தான்.

வானுளோர் மனத்து மிக்க வன்றுய ரகற்ற வுன்னி
ஞானநா யகன கைத்து நாமெழுந் தருளி வந்து
மானவே லவுணர் தம்மை மாய்க்குது மதற்கு நம்பா
லானபோர்க் கருவி யில்லென் றறைந்தன னருளின் மாதோ.

கண்ணுத லுரைத்த தன்மை கடவுளர் கேட்டு வப்பா
லெண்ணரு முலக மெல்லா மிமைப்பினிற் படைத்த ளித்து
நண்ணுற வொடுக்கு மண்ண னவின்றதோ ராட லென்னப்
பண்ணமை தங்க டச்சற் பார்த்திது பகர லுற்றார். ௮0

பெருந்தகைக் கேற்ற வையம் பெருமிதம் பெறச்செய் யென்ன
விரைந்துநற் புவிதே ராழி யிருசுடர் வேதம் வாமா
னருந்திறற் கமலன் பாகன் மேருவில் லனந்த னாரி
சரந்தழல் சசிமா லாகச் சமைத்தனன் றெய்வத் தச்சன். ௮௧

விண்ணவ ரவைகண் டார்வ மிக்கெழு மனத்த ராகி
யண்ணலை வணங்கி நின்ற னருளினு மிவைகொண் டாதிப்
பண்ணவ வமல முக்கட் பராபர வெமைய ணக்கு
நண்ணலர் தமைமு ருக்கி நங்களைப் புரத்தி யென்றார். ௮௨

சங்கர னதுகேட் டெங்க டாயுட னெழுந்து துன்றி
யங்குறு மனைவ ருஞ்சூழ்ந் தன்பினிற் சயச வென்னப்
பங்கய வடிம ணிப்பொற் பாதுகை மிசையி ருத்திப்
பொங்கொளி விரிக்குங் கோயிற் புறத்தெழுந் தருளி னானால்.

ஆண்டுறு திகிரிப் பொற்றே ரணிநலந் திருக்கண் சாத்தி
யேண்டரு மலைமா தோடு மிவர்ந்துகூர்ங் கணையு மற்றை
மாண்டரு தனுவுஞ் செங்கேழ் மரைமலர்க் கரங்கள் பற்றிக்
காண்டரு மழகெ றிப்ப நின்றனன் கருணை வள்ளல். ௮௪

மருவலாங் குவளை வென்று வண்கயன் மருட்டி நீள்கா
துருவவோ டரித்த டங்க ணுமைமணம் புணருங் கோமான்
பொருவிறேருள் கண்டு மிக்க பொலிவுபெற் றிருந்த மேரு
வருவிறு ணடைந்து சால வன்றலை வளைந்த தம்மா. ௮௫

தன்மனை யிரத மாகத் தன்மகன் வலவ னாகத்
தன்மகன் பேர னோடு தனக்குமைத் துனன்கா லாகத்
தன்மல ரணைநா ணாகத் தானெடும் பகழி யானோன்
றன்மன மிடங்கொண் டுற்ற சங்கரன் றனக்கு மாயன். ௮௬

இளங்கதிர் விரிக்குங் கோடி யிரவியோ ருருவங் கொண்டு
வளங்கெழு மிரத மொன்றின் வந்தென நிற்க வையன்
களங்கமி லமரர் கண்கள் களிப்பக்கண் டுவகை யெய்தி
யுளங்கவ லொருவி விண்ணின் றொண்மலர் மாரி தூர்த்தார்.

பாடினர் பரமன் சீர்த்தி பாதபங் கயங்கள் சென்னி
சூடின ரெழுந்து துள்ளித் தொடைபுடைத் தனர்து ணங்கை
யாடினர் துகிலெ றிந்து பற்றின ராசை தோறு
மோடின ருவகை யென்னு முததியிற் படிந்த விண்ணோர். ௮௮

மன்னுதன் னிலைபி ரிந்த மயிரென விகழ்வி லாதென்
றன்னைநன் புனித மாக்கிச் சகம்புகழ் சிறப்ப ளித்தான்
மின்னுசெஞ் சடையோ னென்னு மிகுமுவப் பெய்தி யாட
லென்னநின் றிரும ருங்கு மிரட்டினர் கவரி பல்லோர். ௮௯

மாசுணம் பலவ ளப்பில் வண்கதிர் கவ்வி யெங்க
ளீசன தருநா கங்கட் கீந்திட நீட்டி வாங்கி
மோசம திழைக்க லுற்ற முறைமையெம் மருங்கு நின்று
வீசின ரெண்ணி லார்சண் மிளிருமொட் டால வட்டம். ௯0

திங்களா யிரமொ ருங்கு சேர்ந்தென வாய்க டோறுஞ்
சங்கமா யிரம்வைத் தார்த்தான் சயங்கெழு பானு கம்பன்

பொங்கொலி முழவம் பேரி பொருவில் சச்சரித டாரி
யெங்கணு மெண்ணி லோர்க ளிரட்டின ரிடிக ளேபோல். கக

அறிவுரு வானோன் வந்தா னன்பினிற் றிகழ்வோன் வந்தான்
பிறவிவே ரறுப்போன் வந்தான் பேரருண் மூர்த்தி வந்தான்
குறைவிலா னந்த ஞானக் கூத்துடை யாளி வந்தான்
கறையுலா மிடற்றோன் வந்தா னென்றெழுங் காக ளங்கள். கஉ

நஞ்சுகு மெயிற்றுப் பேழ்வாய் நாகம தணிந்த வெங்கோன்
வெஞ்சமர் புரியச் செல்வன் மேருவிற் பிடித்தென் றிட்ட
கஞ்சுகங் கிழிய வீங்கக் கல்லுறழ் குவவுத் திண்டோ
ளெஞ்சுகு முவகை விம்மப் பாரிட நீத்தஞ் சூழ்ந்த. கங

வெள்ளிவெண் கொடுவாண் மாறி வைத்தென விளங்கும் பல்ல
பள்ளவெம் பிலனி கர்த்த வாயின பருப்ப தத்தி
னுள்ளுறு முழைக ளன்ன வுட்டுளைப் பெருந்துண் டத்த
மெள்ளவின் சொற்பு விக்கண் விழுமிடி போலச் சொல்வ. கச

மண்டல வாடி யென்ன வயங்கெரி சிதறுங் கண்ண
வொண்டழ னிமிர்ந்தெ ழுந்த தொத்தகுஞ் சியின விந்த
வண்டமு கிடினு மாற்று வகட்டின குறுகுந் தாள
பண்டுள பூத மைந்தும படைத்தளித் தழிக்க வல்ல. கரு

அத்தனென் றன்னை நீயே யவுணரைக் கொல்லெ னானோ
வித்திர டனிலெற் கின்றி யார்க்கமர் கிடைக்கு மோவென்
னெத்தவ ரடநான் பார்த்து வறிதுறு குவனோ வென்று
தத்தமி னினைந்து வாடுந் தன்மைய பூத முற்றும். கசு

விண்ணக நிறைந்த வாதி விதியக நிறைந்த மாயோன்
கண்ணக நிறைந்த வோதைக் கடலக நிறைந்த பாழி
மண்ணக நிறைந்த மேவி வரையக நிறைந்த வெங்கும்
பண்ணக நிறைந்த வோசைப் பரிசினிற் பனக ணங்கள். கஎ

குதிப்பன வயிரத் திண்டோள் கொட்டுவ தம்மைத் தாமே
துதிப்பன வமர்வேட் டண்ணற் றொழுவன தங்க ளாற்றன்
மதிப்பன வரைக ளேந்து தாங்குவ வாரி யுட்க
வதிர்ப்பன மகிழ்வ வாகி யடற்கணஞ் சென்ற வம்மா. ௯௮

கற்புயங் கொட்டி யண்ட கடாகமு மதிர வார்த்து
வற்புறும் பூத வெள்ளம் வந்திட வும்ப ரெண்ணில்
பொற்புறு கவிகை யோங்கிப் புணரிக ளேழு மார்ப்பப்
பற்பல மதியெ ழுந்த பரிசென நிகழ்ந்த மாதோ. ௯௯

பொன்னுல கிகழு மென்னைப் பொருவனென் றகிலம் போவ
தென்னநாண் கெள்சென் றேற வெதிர்த்தது மலைத லொப்பத்
துன்னுறு மமரர் தம்பொற் சுண்ணம்வந் துடன்க லப்ப
மின்னுறுங் கொடிய டித்து விலக்குவ போல வாடும். ௧௦௦

கலிநிலைத்துறை.

இந்த வாறெழும் பூதவெள் ளங்களி னிடையே
யந்தி வானிற மனையவ ளாழியந் தடந்தேர்
கந்த வாரிசப் பண்ணவன் றென்றிசைக் கடவ
வந்த வானவ ரனைவருந் துவன்றுற வந்தான். ௧௦௧

பூத நாயகன் கயிலையம் பொருப்புவிட் டலகில்
காத மோரிமைப் பொழுதினிற் கடந்துவந் தருளிச்
சீத வார்பொழிற் கூவமென் றிருநக ரடைந்தான்
பாத தாமரை வணங்கிவிண் ணவர்குழாம் பரவ. ௧௦௨

அங்கப் போதினிற் கடமெனுந் திருவரு ளுருக
துங்கப் போதக முகபபிரா னிதழியந் தொடையோன்
றங்கப் போதிர தத்தினேர் தன்புழைக் கரத்தாற்
சிங்கப் போயொடித் திட்டனன் றிடுக்கிட வெவரும். ௧௦௩

பொருக்கெ னச்சின விடையுருக் கொண்டிடை புகுந்தா
னிளைக்கு நற்கொடி வையம்வென் றூங்கின னெடும்பாம்

பரைக்க சைத்தவ னன்பினி னிகரிலா தமரர்
வருக்க முற்றும்வந் திறைஞ்சுபொற் பதாம்புய மாயன். க0ச

தந்தை யுற்றரு ளிரதகூ வரத்தினைத் தனயன்
வந்தி றுத்தலு மிமையவர் மனம்பதைத் தின்னன்
முந்தை யிற்பதின் மடங்குறீஇ முகத்தறைந் தழலுற்
றெந்த மொட்டலர் செயலெனத் திசைதொறு மிரிந்தார். க0ரு

அருளு லாந்திரு முகங்களோ ராறுமொள் ளலங்கல்
புரளு மார்பமும் புயங்களு மருமறைப பொருளாய்த்
தெருளு லாம்பத மலருங்கொண் டெனதுளந் திகழ்வான்
வெருளு லாமனத் திரியல்போம் விண்ணவர்க் கண்டான். க0சு

நின்மி னின்மினீ ரஞ்சலிர் நிகழுமென் றந்தை
பொன்மி ளிர்ந்திடு தேரினு ரொடித்தவர் புலவீ
ரென்முன் வந்திடுங் கரிமுகத் தண்ணலவ் வெயில்சேர்
வன்ம னம்பெறு மவரல வம்மினென் றழைத்தான். க0எ

மீண்டு வானவர் குகன்புடை யடைந்தினி வெம்போ
ராண்ட நாயகன் புரிவதெவ் வாறென வையம்
பூண்டு நின்றனர் நம்மிறை புதல்வன்முன் றனையாம்
வேண்டி வந்திர தம்புகா மையிவி து விளைத்தான். க0அ

என்று ளங்கொடு மலைமக ளீன்றருள் யானைக்
கன்றை வந்தனை செய்கிலார் முயறருங் கருமம்
பொன்று மென்பது காட்டிடக் கூவமா புரத்தி
லன்ற வன்கழல் கனிமுதல் கொண்டருச் சித்தான். க0கூ

பின்பு விண்ணவர் மனத்துயர் பெயர்ந்திடத் தனது
முன்பு முப்மதில் வந்தற முன்னினன் முதல்வ
னன்பு கொண்டொரு நூறியோ சனையகன் மதில்க
டுன்பு பெற்றிட வனைவருந் துண்ணென வடைந்த. கக0

கரிக ளோடுமா ருதந்தனின் விரைந்துபாய் கவனப்
பரிக ளோடும்விண் முகடுழும் படுமணி யிரதக்
கிரிக ளோடும்வெங் கனலினுங் கிளர்சினக் கழற்கா
லரிக ளோடும்வந் தமர்செய்வான் சமைந்தன ரவுணர். ௧௧௧

கண்டு மற்றது விண்ணவர் கலக்கமுற் றுயர்கோ
தண்டம் வைத்தலைச் சுடுசர மிடம்வலத் தடக்கை
கொண்டு நிற்பவற் குறுகிநல் வேலையீ தடுதற்
கெண்ட யித்தியர்ச் சமர்புரிந் தட்டரு ளென்றார். ௧௧௨

என்று விண்ணவ ரியம்பிய தெம்பிரான் வினவி
நன்றி னங்கையை நோக்கின னகைக்கவந் நகையி
னின்று வன்றழற் கொழுந்தொரு நிமிடத்திற் பாதி
சென்றொ டுங்குமுன் புரங்களிற் சென்றுபற் றியதே. ௧௧௩

பகவன் வாய்மலர் வைத்திருந் துமிழ்ந்தெனப் பற்றித்
திகுதி கென்றெரிந் தெழுமழற் கொழுந்துசே ணளப்பத்
தகுவர் மென்புழு வெனப்பதை பதைத்துயிர் தலைந்தார்
நிகரி னீறுபட் டிடாவுட னீறுபட் டனவே. ௧௧௪

தேரெ ரிந்தன புரவிக ளெரிந்தன செழுங்கைக்
காரெ ரிந்தன சிகரமு மெரிந்தன கழகச்
சாரெ ரிந்தன பொழிலின மெரிந்தன தருவ
ரூரெ ரிந்தன வெரிந்தன வடங்கலு மொருங்கு. ௧௧௫

திருத்த மொன்றெயின் மூன்றுநெக் குருகுபு சிதைந்த
கருத்த ரென்றவ ணுறையுமுக் கயவரு மடைந்த
வரத்தி னின்றனர் மரித்திடா தளிவர மலர்ந்து
விரைத்த தண்பணை யிழந்துறும் வெறியபா தவம்போல். ௧௧௬

பகைஞ ரொன்றுமுப் புரங்களிற் செஞ்சடைப் பகவ
னகையி னின்றுசென் றுற்றதீ யிடத்தெழு நறிய

புகைப ரந்தகல் விசும்பிட மடங்கலும் போர்த்து
முகில்க ளென்றிடப் பட்டுநின் றனவின்று மொழியின். ௧௧௭

நெறித்த குஞ்சியந் தானவ ரெயில்களி னிமல
னெறித்த வெண்ணிலா நகையினின் றெழுந்தபே ரெரிசென்
றுறைத்து வெள்ளிமா மதில்களைத் துருகுழிச் சிதறித்
தெறித்த போலும்விண் ணிடைச்செழுந் திங்களு முடுவும்.

பரிந்து தற்பதங் குறுகினர் பழையதீ வினைபோ
லெரிந்து முப்புரம் பொடிபட விறந்திடா துயிர்கொண்
டிருந்த வபபெருங் கொடியரை யெம்பிரான் கண்டு
பொருந்து பொற்சிலை வாங்கினன் சிலீமுகம் பூட்டி. ௧௧௯

குனித்த பொற்சிலை வலிகெழுங் குணவுரு வணையி
னுனித்த வப்புருக் கொண்டுநிற் கின்றனோ னரிக்குத்
தனித்த பொற்றிரு வாசிகை போன்றொளி தழைத்த
தினித்த சொற்கொடி யிடத்தினன் மலர்க்கர மிசைந்து. ௧௨0

பொருவிற் கொண்டிடு நெடுநுதிப் பகழியைப் புனிதன்
விரைவிற் சென்றவ ருயிர்குடித் திடுகென விடுத்தான்
மருவிக் குன்றெனை நின்றிடு மூவர்மார் பினும்பட்
டுருவிச் சென்றதப் புறத்தினி னொருகணப் பொழுதின். ௧௨௧

மீண்டு சங்கரன் வலக்கர மடைந்தது விசிக
மாண்டு புங்கமுன் பட்டபோ தவுணர்க ளலறிச்
சேண்டொ டும்படி துள்ளிவீழ்ந் துணர்வுகள் சிதைந்து
மாண்டு போயின ரிமையவர் மனத்துயர் மாள. ௧௨௨

அம்பு பட்டிடு மசுரர்கண் மார்பகப் புழையிற்
செம்பு னற்புறம் பெருக்கெடுத் திரைந்தலை திரைத்துக்
கம்ப முற்றெழுந் தோடின களேபர மலைப்பாற்
சம்பு பற்பல வாண்டிற்குண் டிரையெனச் சார்ந்த. ௧௨௩

திருந்து தேவரும் பணிசெயத் திரிபுவ னமுமாண்
டிருந்த மூவெயி லரக்கரு மிறந்துசெய் கடன்கள்
புரிந்து காணவு மொருவரற் றிகலனைய் புரட்டி
யருந்த வேகிடங் தனரெனின் வாழ்வுவப பறிவோ. கஉச

கதம்ப டைத்தபூ தர்க்கமர் கொடாதரன் கடிது
மதம்ப டைத்தவர்ச் சாடிய தோதனம் வறியர்க்
கிதம்ப டைத்திடு குவமெனக் கொண்டுபோ யிற்பாற்
பதம்ப டைக்கிலம் போமெனப் பகர்ந்ததொத் ததுவே. கஉரு

மருளை யொத்தன முப்புர மப்புர மருவு
மிருளை யொத்தன ரவுணரவ் விருளினை யிரிக்கு
மருளை யொத்தனன் முகுந்தனவ் வருளினை யுடைய
பொருளை யொத்தன னப்பொரு ளாகிய புராரி. கஉசா

செப்பு ரம்பதித் தன்னமா துமைமுலை திளைக்குந்
துப்பு ரம்பெறு பராபரன் றூநகைக் கணையான்
முப்பு ரம்பொடி பட்டது முதல்வர்தம் முயிர்போ
யப்பு ரம்பொடி பட்டதுங் கண்டன ரமரர். கஉஎ

## கலிவிருத்தம்.

ஆர்த்தனர் முகிலின மஞ்சப் பூமழை
தூர்த்தனர் மகிழ்ச்சியிற் றுணங்கை யாடிமெய்
வேர்த்தன ரருகுபோய் வெய்யர் மெய்களைப்
பார்த்தனர் குதித்தனர் பரமற் பாடினார். கஉஅ

சரமொடு குனிசிலை தாங்கி நின்றிடு
மொருவன தடிமல ருச்சி சூடினா
கரையறு முவகையங் கடலி னாழ்ந்தனர்
பரவினர் கடவுளர் பகர்தன் மேயினார். கஉகூ

இந்நக ரதனிடை யிறைவ நின்மலர்ப்
பொன்னடி யருச்சனை புரிந்து வாழ்வுற

நின்னருள் புரிகென நிகழ்த்த வாயிடை
மன்னிய விலிங்கநல் வடிவ மாயினேன். ௧௯௦

ஆதலு மனமகிழ்ந் தமர ரிந்திரன்
மாதவ னயன்முனி வரர்கண் மஞ்சனம்
போதொடு சுடர்நறும் புகைகொண் டர்ச்சியா
வீதுட லெடுத்தபே றெனநின் றேத்தினார். ௧௯௧

குலவுறு மரியவிற் கோலங் கொண்டுமுன்
னிலகுற நின்றதா லிலிங்க மாகியு
நலமரு ளுமைவிற் கோல நாதனென்
றுலகின ருரைசெய வமல னுற்றனன். ௧௯௨

ஐங்கரக் கடவுள்வே லரசன் மாலயன்
புங்கவர்க் கிறையவன் புவன நாயகர்
துங்கமெய்த் தவர்முதற் றவன்றி ளோரெலா
மெங்களுக் குறுமிட மிஃதென் றுற்றனர். ௧௯௩

எழிறரு முமையொடு மெங்க ளையக
னொழிவற நிரந்தர முற்ற தன்மையாற்
பொழிறிகழ் கூவமா புரத்திற் கெங்களு
மொழிதரு பெயரவி முத்த மாகுமால். ௧௯௪

அலங்குறு மிரதகூ வரத்தை யாயிடை
வலங்கிளர் கிம்புரிக் கோட்டு மாமுக
னிலங்குறு புழைக்கரத் திறுத்த தன்மையா
னலங்கிளர் கூவர நாமம் பெற்றதே. ௧௯௫

ஓவிலொண் பதிநடுக் கூவ மொப்பவே
மூவுல கங்களு முன்னி வந்தரோ
காவிலின் பெய்துறு தன்மை யாலெழிற்
கூவமென் றொருபெயர் கொண்ட தந்நகர். ௧௯௬

மேலைநா ளிழைத்ததீ வினைகட் கெஞ்சலிற்
கோலநா யகன்றிருக் கூவ முள்குத
லாலநா கங்களுக் கரும்புள் வேந்தினைத்
தாலமே னினைக்குறுந் தன்மை போலுமால். ௧௩௭

என்றிவை பற்பல வியம்பி வண்டுமுங்
கொன்றையஞ் சடையினோன் கூவ மாநகர்ச்
சென்றடைந் தருங்கதி சேர்மி னென்றனன்
வன்றிறற் புலனெறி மறித்த சூதனே. ௧௩௮

திரிபுரதகனச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௦௨.

---

நான்காவது

## சந்தானகிரி சந்தானச் சருக்கம்.

---

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சூதமுனி வரன்புகன்ற மொழிவினவி யுலகமய றாக்கு மே
ன்மை, மாதவரொஞ் சுவகைபெறீஇக் கூவபுரத் தியல்கேட்ப
வளரு மெங்கள், காதலமை யுற்றதிலை புராணமுனி யின்றுமு
ளங் கருணை கூர, வோதுகவென் றுரைத்தனரவ் வுரைக்குமகக்
களித்திதனை யுரைப்ப தானான். ௧

அன்றுவிறற் கொடுமெதில்க டழலெழப்புன் முறுவல்புரிந் தசு
ரர்ச் சாடித், தென்றிசைக்கூ வாநகரி னரசிங்கந் தொழத்தேவ
சிங்கம் வாழ்நாட், டென்றுதுயர்க் கடனீந்தி யார்வநெடுங் கடற்

படிந்த சுரரை நோக்கிப், பொன்றிகழ்நற் கமலமலர்த் தவிசின் வீற் றிருக்குமிறை புகலு கின்றான். ௨

வண்டுகிளைத் தொழுகுநறை மதுப்பருகி யிசைகூரு மலர்மந் தாரத், தண்டெரியற் புலவிர்மிக வல்லவனிம் மாயவனித் தலத் திற் சூழ்ச்சி, கொண்டுபகைப் பினர்கரவாட் போக்கிவதைப் பதுபோலக் கொடியர் நீறு, கண்டிகைமெய்ச் சிவனுருவ மகற் றியரன் கணையாகிக் கடிந்திட் டானால். ௩

ஆதலினு லமலசிவ லிங்கபூ சனைபுரிவோ ரறிவி கந்த, பாத கரோ யெனினுமழி கிலரென்று மவ்விதிலரிப் படியின் வல்ல, மாதவர்க ளெனினுமழி குவரென்று மறிந்தனமான் மனம்வி ழைந்து, நீதிகொடு பரமசிவ பூசைபுரி வோர்பெருமை நிகழ்த் தர் பாற்றே. ௪

இம்மைமறு மைப்பயனு மறையின்முடி தெருட்டுறுபே ரின்ப வீடு, மெய்ம்மைபெறத் தாவல்ல தச்சிவபூ சனையன்றி வேறு முண்டோ, செம்மைமனத் திலிங்கபூ சனைபுரியா தருங்கதியிற் செறியக் காத, நம்மனம்வைத் திடல்சிறகி லொருசிறுபுட் பறக் கவிழை தகைமை போலும். ௫

திரையெறியுஞ் சடைக்கங்கைத் துளிதெறிப்ப நனைந்தகு ளிர் சிறுவெண் டிங்கள், கரமலரி னிருந்தெழுசெங் கனற்கொ ழுந்திற் காய்ந்தொழிக்குங் கடவு டன்னைப், பரமனென வுணர் கிலா தளியனுமவ் வரியுமாய்ப் பயின்ற தீமை, பொருவில்புக ழ்க் கூவபுரத் திலிங்கபூ சனைபுரிந்து போக்கி யுய்ந்தேம். ௬

பூதிமணிக் கலன்புனைந்து சிவலிங்க பூசனையைப் புரிந்தி டாதோர், பாதகரிற் பாதகரெங் கட்கவர்கள் புறமானோர் பகரி லென்று, மாதலிற்புங் கவர்நீவிர் சிவலிங்க பூசனையை யகன்றி டாது, காதலிற்செய் திடுதிரெனப் புகன்றனனு ரணமனைத்துங் கலை ரகண் டோனே. ௭

*அண்டராய னுரைத்தமொழி வினவிமன மகிழ்ந்தவன்மெல் லடியிற் றாழ்ந்து, கொண்டறவழ் மணிமாடக் கூவபுரத் திலிங்க வுருக் குலவச் செய்தே, மண்டுமெனத் தன்பின்வழி பட்டனரச் சிவலிங்க வடிவந் தோறும், புண்டரிக வதட்டிருவிற் கோலநா யகனின்று புரப்பன் மாதோ.* ௮

*இத்தகைய வினையிறிருக் கூவபுரத் தெவரேனு மெய்தி னம்ம, சுத்தபர ஞானமடைந் தரியசிவா னந்தசுகந் துய்ப்பர் விண்ணோர், மெய்த்ததவ மொருகோடி புரிந்துநர வுருவாகி விமல னல்கு, மத்தலனி லவதரித்து வாழ்வரெனி னதன்பெரு மை யளக்கற் பாற்றே.* ௯

*தன்னைமனத் தமைத்தவர்க்கு மலமகற்றுஞ் சந்தான கிரிசந் தான, னென்னுமருட் குரவனெழிற் கூவமா நகரினிடை யிருக் கின் றோர்கட், குன்னருநற் கருணையினி லுபதேசித் திடவுலகி னெறிவி லின்ப, மன்னிமனக் களிப்பொடிருந் தழிவில்பா கதியடைவின் மருவு வாரால்.* ௧௦

*என்றினைய சூதமுனி யினையிறிருக் கூவபுரத் தியல்பு கூற மன்றன்மலர்க் கரங்குவியா வருந்தவரெஞ் செவிக்கமுதம் வழ ங்க வந்தோய், கொன்றைமலர்த் தொடைபுனையுஞ் சடாமகுடத் தண்ணன்மகிழ் கூவ மூதா, ரொன்றுமவர்க் கருள்புரியுங் குர வன்யா ரியம்புகென வுரைப்ப தானன்.* ௧௧

### மேற்படி வேறு.

*முன்னமோர் காலத் தாதி முகுந்தனு மயனும் பின்றாழ்*
*பின்னன்மா தவருஞ் செம்பொற் பிறழ்முடிச் சுரரு மீசன்*
*றன்னதாஞ் சத்தி பாதஞ் சார்தலா னுடல்வெ றுப்புற்*
*றன்னரு ஞானா னந்த முறுவதற் குவகை யுற்றார்.* ௧௨

*உற்றவர் கயிலை நண்ணி யுமையொரு பாகற் போற்றிச்*
*சிற்றறி வுடையேம் புன்மைச் சிறையுடற் பொறைத ணந்து*

பற்றறி வுருவ மாகப் பதிபசு பாசத் தன்மை
முற்றுமெங் கட்கு ணர்த்தி முதல்வனீ புரத்தி யென்றார். கங

என்றவ ரியம்ப வெங்கோ னெல்லையில் கருணை யெய்தி
நன்றெனக் கயிலை சூழ்ந்த நாற்பெருங் கிரிக டம்மு
ளன்றரி தனக்குச் சீர்சா லாமர்த்த கிரியி னுச்சி
யொன்றிநற் குரவ னாகி யுண்மையை யுணர்த்து கின்றான். கச

ஆதியு நடுவு மீறு மருவமு முருவு மாகும்
பேதமு மளவு மின்றிப் பேரறி வுருவமாகி
வேதமு முணர்வு மெட்டா விமலமாய் நிறைவ தாகிச்
சாதலும் பிறப்பு மற்றோர் தன்மையாம் பதியின் றன்மை. கரு

மூலமா மலத்தா லன்றே மூயபே ரறிவ தாகிச்
சீலமா யைபினாற் றோன்றுஞ் சிற்றறி வுடைய தாகி
மேலைநாள் வினையாற் றோற்றம் விளிவுடைத் தாகி வானம்
போலவே யடுத்த தாகிப் புணர்வது பசுவின் றன்மை. கசு

ஆதியன் றாகி யொன்றா யளப்பருஞ் சத்தி யாகி
யோதரும் பலவா மாவி புணர்வெலாந் தடுப்ப தாகிப்
பேதமி லருஞ்சிற் சத்தி பிறழ்தரு முயிர்க்கு நீங்கிப்
போதுமத் தன்மைத் தாகும் புகலிரு ளாண வந்தான். கஎ

சுத்தமோ டசுத்த மூலப் பகுதியென் றொடர்பு பெற்றுத்
தத்துவ மைந்தோ டேழு தகுமிரு பத்து நான்கா
யித்தகை யிற்பி றேரம் போக்கியம் போக மென்ன
முத்தகைக் காண்ட மாக வுதவிடும் மாயை நிற்கும். கஅ

மனமொழி மெய்யி யற்ற வருவதா யறம்பா வங்க
ளனவிரு வகைத்தாய்ச் சஞ்சி தாதிமூன் றியல்பாய்ப் புத்தி
தனிலுறு நிலைய தாகித் தகையிற்றுய்த் தொழிப்ப தாகி
வினையெனும் பேர்பெற் றொத்து விடுமிருங் கன்ம மன்றே.

என்றமுப் பொருளின் றன்மை யியம்பியிம் மலங்க ளெல்லா
முன்றனக் கயலென் றோர்விக் தொழித்தறி வுருவ மாகி
நின்றநிற் பாரென் றுன்மா நிலையினை யுணர்த்தி மீது
வன்றனை யாகி நின்ற மல்குதன் னருளைக் காட்டி. ௨0

சென்றபுல் குறுவ தன்றிச் சேர்ந்துநிற் பதுவு மன்றி
யொன்றிரண் டென்ப தன்றி யுணர்வுசுட் டொழிந்து நீயா
யென்றுநின் றிடுமென் றன்னை யிருந்தவா காண்டி யென்று
துன்றுதன் னிலைசொல் லாத சொல்லினு லுபதே சித்தான். ௨௧

இன்னவா றயற்குப் புட்ப கிரியிடை யிருடி கட்கு
மன்னுவா னளவு கோள கிரியிடை வான வர்க்குந்
தன்னைநேர் கின்ற பொற்பிற் சந்தான கிரியி னண்ணி
முன்னைவான் பொருள்கண் மூன்று மொழிந்தனன் குரவ னாகி.

அப்பெருங் கிரியி னுமத் தடுத்ததா ரியற்கு நாமஞ்
செப்பருங் கூவத் துள்ளோர் தேவரா தலின வர்க்குத்
தப்பில்பே ரருளி னுசான் சந்தான கிரிசந் தான
னிப்பெருங் குரவ னங்க ணென்றும்வீற் றிருப்பன் யாதோ. ௨௩

கொத்தல ரிதழி யெம்மான் குருவுரு வாகி நேயம்
வைத்துப தேசஞ் செய்யும் வளங்கெழு கூவ மூதூர்க் [ன்
கொத்ததென் றயன்மற் றொன்றை யொப்புரை செயலா காதெ
றத்தலத் தியல்பு முற்று மறைந்தனன் சூத னன்றே. ௨௪

சந்தானகிரி சந்தானச்சருக்கம் முற்றிற்று.

ஆ - திருவிருத்தம் - ௬௨௯.

ஐந்தாவது

# அடிமுடிதேடியசருக்கம்.

கலிநிலைத்துறை.

சூத னியம்ப மகிழ்ந்தற வோரரி தொல்வேத
னாதி யகம்பர மென்றுத மிற்பகை யாருமென்
றோதினை பின்பர னைப்பர மென்றவ ரோர்வுற்ற
வேதுவெ னிங்கதி யம்புக வென்ன வியம்புற்றான். ௧

மேனாண் மண்டு பிரளயம் வந்து விரவுங்காற்
கானார் கஞ்சன் றுஞ்சுறு மவ்வழி கண்ணுற்றே
யானா வின்பத் தந்தணர் கைவைத் தங்கத்தின்
மானா மங்கைக் காவிய னாய்துயின் மாறென்றார். ௨

என்றலும் வேத னெழுந்து களிப்போ டெறிநீரிற்
சென்றல வாநின் றனனது போதிற் றிகழ்வாக
மொன்றுறு மேகந் தங்குத லேபோ லுததிக்கண்
மென்றுயின் மேவுங் கண்ணபி ரானை விழியுற்றான். ௩

மாலான் மாலை மால வடித்தே மணிநீரின்
பாலா நீயா ரென்று வினாவப் பதியாகு
மேலா நாரா யணனா னென்று விரைந்தோதி
யேலா தாகு மகந்தைகொ டங்க ணெழுந்தானால். ௪

மாய னுரைத்தெழு கின்றமை கண்டே மலர்வேத
னீயல நற்பரம் யானென வோதிமு னின்றானா
லாயிடை யச்சுதன் மிக்கெழு கோபத் தவனாகிப்
போயயன் விற்பொலி மார்பி னெதிர்ந்து புடைத்தானால். ௫

முண்டக வேதனு நெய்சொரி தீயின் முனிவுற்றே
யண்டக டாக முடைந்ததெ னும்படி யங்கையான்

விண்டுவின் மார்பெதி ரெற்றின னித்திறம் வெம்போர்கண்
மண்டிரு வோர்க டமக்கும் விளைந்தன வந்தம்மா. சு

குற்றுவர் மார்பு குழிந்திட நின்று குதிக்தோடி
யெற்றுவ ராடக வெற்பொடு மைம்மலை யெய்திச்சூழ்
வுற்றது போல வுடன்சுழல் வாருட லுக்கபம்போய்ப்
பற்றுவர் கீழ்மே லாக விழுந்து பதைபபார்கள். எ

கட்டி யெடுத்து விழுத்தி யிடக்கை கழுத் தாடே
யிட்டு வலத்தி னழுத்தி யுரத்தி னிடிக்கொபப
முட்டி பிடித்த கரத்தொடு குத்துவர் முட்டுற்றே
வட்டணை சுற்றுவ ரித்திற முற்றினர் மற்போரே. அ

கலிவிருத்தம்.

மருவோகைகொண் முனிவோருடன் வரும்வானவர் கண்டே
பொருவோர்களி னிவர்போலறி யோமென்று புகழ்ந்தார்
விரைவோடுபி னுருமேறெனும் வெடிசொல்லின ராகி
யிருவோர்களு முறைவாள்களை யுருவிக்கொ டெதிர்ந்தார். கூ

மின்னுமெனெ வெதிர்வீசிய மிளர்வாளொளி யல்லா
லின்னாரிவ ரிவனூற்றன ரெனவேதமை யிமையா
வந்நாகரு மறியாவகை யறைகின்ற வொலிக்கு
முன்னுடிக றங்காமென முறைவட்டணை வந்தார். கo

வரையேகுவ ரமராபதி நகரேகுவர் மலையுந்
திரையேகுவர் பிலமேகுவர் திசையேகுவ ரென்றூழ்
தரையேகுவர் விடையாளியை யறியாது சமழ்ந்தே
புரையேகொடு சனனந்தொறு முழல்கின்றவர் புரைய. கக

தாணுடுவர் கரநாடுவர் தலைநாடுவர் மலருந்
தோணுடுவர் களநாடுவர் தொடைநாடுவர் சுடரும்
பூணுடுறு முரனுடுவர் வயிறுடுவர் பொலிபும்
வாணுடுறு விழிநாடுவ ரிவ்வாறு மலைந்தார். கஉ

கலிநிலைத்துறை.

கொந்து லாமலர் முடியண்ட கோளகை கடப்ப
வந்து பாதல முழுவது மலர்ப்பத மிகப்ப
வந்த வேலையி னிருவர்தம் மகந்தையு மறுப்பா
னெந்தை யாயிடை யழல்வடி விலிங்கமா யெழுந்தான். ௧௩

ஆதி மாலய னன்பகத் திருளற வமைத்த
தீதின் மாமணி விளக்கெனத் திகழ்வதவ் விலிங்க
மேதை யாமவ ரகத்திரு ளொருசிறு விளக்கின்
சோதி போக்குமோ வப்பெருஞ் சோதியே யல்லான். ௧௪

அங்கு வந்தெழு மருட்கனற் றாணுவை யயன்மாற்
றங்கள் வெஞ்சமர் தணந்தனர் நோக்கியித் தாணு
விங்கு வந்ததென் னென்றனர் தாணுவென் றறியார்
கங்க ரன்றனை யவன்கணு லன்றியார் காண்பார். ௧௫

மண்டு வெஞ்சமர் தணந்தினி யிருவரு மலர்வு
கொண்ட வங்கியி னடிமுடி பார்ப்பமக் குறிமுன்
கண்ட வன்பர மெனத்தமி லியைந்தனர் களிகூர்
வண்டு மூங்கம லாதனக் கடவுளு மாலும். ௧௬

ஏன மாயரி மலரய னெகினமாய்ப் பிலமும்
வானு மேகுபு மனமொழி தனிலுமே மருவா
ஞான நாயக னடிமுடி விழிகொடு நாடப்
போன மூதறி வுடைமையி னினைந்துபோ யினரால். ௧௭

குன்று போல்வரு மும்மதக் கோட்டுவா ரணத்தை
யன்று வாய்குடர் சொரிந்திட வேமிதித் தழுத்திக்
கொன்ற தாண்மல ரென்றறி யாததைக் குறுகிக்
கன்றி யோர்சிறு பன்றிகீழ்ப் பட்டது கடிதின். ௧௮

முளைத்த வெண்பிறை யெனுமுடக் கோடுதேய் வுறமண்
கிளைத்து வெம்பில மனைத்தையு மிகந்துமிக் கேழ

விளைத்த சன்றிவான் றொடையையுங் கடந்ததி லின்பம்
விளைத்த வெந்தைதாள் விலங்குறப் பட்டதோ விளம்பீர். ககூ

வருந்தி மெய்யிருங் கேழலி னுருவுகொண் மாயன்
றிருந்து நாங்குறி கண்டில மலரயன் சென்று
பொருந்து பொன்முடி கண்டுறிற் புகல்வதென் னெனுநா
ணருந்து நெஞ்சொடு மொருவகைப் புவியின்மீண் டடைந்தான்.

விண்ணி னேகிய வியன்சிறை யோதிமம் விரைந்தே
யண்ணன் மாமுடிக் கங்கையின் றுறைபடிந் தாடக்
கண்ணி யேகுத லெனச்செழுங் கதிரிட முதலா
வெண்ணும் யாவையும் பாந்திவர்ந் திகந்துபோ யினதால். உக

விண்டு காண்குவ னடியினை முடியினை விரைந்து
கண்டு நாமினை யாகுவ மெனவயன் கருத்திற்
கொண்டு தேவமா வருடமோ ராயிரங் குலவு
மண்ட மேறியு மடைந்தில னமலன்மார் பளவும். உஉ

சிறகு நொந்திளைத் திடுதலா னப்புறஞ் சேணிற்
குறுகு கின்றதன் செயலொழிந் தெகினுருக் கொண்டோ
னிறுகு திண்புயத் தரிசெய லென்கொலோ வென்று
மறுகு நெஞ்சொடு மீண்டுவந் தடைந்தனன் மண்ணில். உங

இட்ட தங்குறி கண்டுதாம் பரமென விச்சைப்
பட்ட னேகநாட் படாதபா டெல்லாம் பட்டா
ரிட்ட மொன்றில ரெம்பிரா னடிமுடி யிணைப்பூப்
பட்ட கண்ணினர் காண்பரோ வெத்தனை படினும். உச

வந்து கூடியங் கிருவரு மனத்தெழு மகந்தை
சிந்தி வாண்முகம் புலர்ந்துநின் றிடுதலாற் சிந்தை
தந்தி டுங்குறி காண்கிலா தமைத்தமி லறிந்தே
யுந்து கின்றநா ணிருவரு மொத்தலி றொழிந்தார். உரு

எங்க ணாயக னருள்சிறி துறுதலி னினையோர்
தங்க ணாகிய மயக்கொழிந் தற்புதத் தாணு
நங்க ணாயக னாகியே நயக்கரு ணெற்றிச்
செங்க ணேறுறு முருவமோ வென்றுசிந் தித்தார். ௨௬

ஆன காலையின் மணியிடத் தாடுறு மொளிபோன்
ஞான நாயக னழனெயந் தாணுவி னடுவண்
மானு மாமழு வுந்திகழ் கரமுமொண் மார்புந்
தூநி லாநகை வதனமுந் தோன்றுற நின்றான். ௨௭

நின்ற காலையின் மிடற்றணி நீலமு முரத்திற்
றன்று மாலிகைத் தலைகளுங் கண்டுளந் துணுக்குற்
றொன்று நாணுட னச்சமு மொருங்கெழ வயன்மால்
சென்று நாயகன் றிருவடி சிரம்பட விழுந்தார். ௨௮

எழுதி ரஞ்சலி ரென்றுமை நாயக னியம்பத்
தொழுத கையொடு மெழுந்துநின் றறிந்தவா துதித்தே
யிழுதை யேமுனைப் பரமென வறிந்திடா தியற்றும்
பழுது தீர்த்தரு ளென்றிடப் பராபரன் பகரும். ௨௯

நும்மை நாம்படைத் திருதொழி னுங்களுக் குதவ
வெம்மை நீரென வுமதறி வொன்றியும் வேறாய்க்
கொம்மை மாமுலை யுமையொடு வடிவுகொண் டிருக்கு
மெம்மை நீர்மறந் துமைமதித் தயர்புரிந் திளைத்தீர். ௩௰

நீவிர் நம்மையே பரமென நினைந்திடா தமர்செய்
பாவ நந்தி நம் பதநிலை பண்டுபோ லடைய
வாவல் கொண்டுநம் வடிவமா மிலிங்கநன் கமைத்துக்
கூவ நண்ணியர்ச் சியுமெனப் புகன்றினுங் கூறும். ௩௧

நீறு கண்டிகை புனைந்துநந் திகழ்வடி வெண்ணக்
கூறி லிங்கபூ சனைபுரி குணத்தரை நாமாத்

தேறு கின்றவ ரொழிவில்பே ரின்பமெய்த் தேவர்
வேறு கண்டவர் வெந்துயர் விடாததி நரகர். ௫௨

கலைகள் யாவையு முணர்ந்தவ ராயினுங் கருதி
யிலகு நாமகி ழிலிங்கபூ சனைதனை யியற்று
நிலைய ரொன்றையு முணர்கிலா ரஃதுடை நெறிய
ருலகி னொன்றையு முணர்கில ரேனுமுற் றுணர்ந்தோர். ௫௩

நரரி னீசரே யாயினு நல்லிலிங் கத்திற்
பரிவி னுனையைப் பூசனை புரிகுவர் பகரிற்
சுரரின் மேலவ ரஃதிலர் சுரர்களிற் சிறந்த
வரர்க ளாயினும் புலையரே மெய்ம்மையிம் மாற்றம். ௫௪

மகிழ்ந்தி லிங்கபூ சனைசெய்வோ னெக்குலம் வரினும்
புகழ்ந்த வன்றனை நாமென வந்தனை புரிவோர்
திகழ்ந்த நம்பதம் பெறுகுவ ரவன்குலஞ் சிந்தித்
திகழ்ந்த புன்மைய னீசனாய் நரகில்வீழ்ந் திகவான். ௫௫

என்று கூறியத் தாணுவின் மறைந்தன னிறைவ
னின்ற மாலய னுவகைபூத் தண்ணல்சொன் னினைந்து
சென்று கூவமா நகரிடைச் சிவலிங்க மமைத்து
மன்றன் மாமலர் மஞ்சனங் கொடுவழி பட்டார். ௫௬

வினைக ளீர்ப்பது புனிதன்மெய்ஞ் ஞானமே விளைப்ப
தனக னேயமோ டிருப்பதக் கூவமா தலினாற்
கனவி லாயினு மிந்நகர் கடக்கொணா தென்றங்
கினிய மேருவிற் கோலநா யகற்றொழு திருந்தார். ௫௭

மாலு நான்முகக் கடவுளும் வழிபடு மெழில்விற்
கோல நாயகர்க் கண்டிடிற் பன்னிரு கோடி
மூல மாமிலிங் கங்களை முறைமையிற் சென்று
சீல மோடுகண் டுறுபல னக்கணஞ் செறியும். ௫௮

அருவிப் பூதர மெனவரு மதகரி யட்ட
திருவிற் கோலநா யகன்பெயர் பலவுள செப்பிற்
கருவிற் போக்குறு மிருவினை களையுமக் கணத்தின்
விரைவிற் போககுவ வவற்றினிற் சிலபெயர் விளம்பின். ௬௧

## எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இரக்ககர் தியாக ரிசைச்சசுரதார ரெழின்மிக வளர்சடைக் கூத்தர, ரருட்சகநாத ரஞ்சனுபகண்ட ரருங்கிலானிக்கின ரோரேந், திருக்கறு புவனநாயகர் திரிபுரகன ரப்பிரதிட்டர், தெரித்திடு கூவநாத ரன்பர்க்குச்செந்நெல்வைததவ ரெனலாமால்.

இப்பெரும் பெயர்கள் பன்னிரண் டினையு மியம்புவோரிவற்றினு ளொருபேர், செபபரும் புதல்வற் கிடுபவர் புவியிற் சிதைவின்மெய்ப போகங்க டெய்தீத, யொடபருங் குளிர்வெண் டிங்கள்வண் கடுக்கை யுண்ணுலழுந் தினியதா தளைந்து, மெய்ப் பசும் பொன்னிற் றிகழ்சடா மவுலி விமலன தடியின்மேவுவரால். ௬௩

## கலிவிருத்தம்.

என்று கூவத் திறைவன் பெரும்புகழ்
துன்று மாசையிற் சூத முனிவர
னன்று மேவு நயிமிச மாவனத்
தொன்று மாதவர்க் கோதின னென்பவே. ௬௪

## அடிமுடிதேடியசருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௬௬௪.

ஆறாவது

# செந்நெல்வைத்தசருக்கம்.

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மறுவறு தவத்தின் முனிவரர் மிக்க மகிழ்ச்சியின் மறித்து
மச் சூத, னறுமலர்க் கமலத் திருவடி பரவி நங்களுக் கையவிற்
கோலச், சிறுநுதற் குமரி யிடத்தின்வைத் தவற்குச் செந்நெல்
வைத் தவனெனும் பெயரெம், முறைமையி னடுத்த துரைத்தி
யென் றியம்ப முனிவனன் றெனவது மொழிவான். க

முன்னரக் கூவ புரத்திடைக் காம முதலிய முக்குறும் பெறிந்
தோர், புன்னெறிப் படுமைம் புலன்களுந் தடுத்தோர் பொய்
யினை மெய்யினிற் கண்டோர், சென்னியிற் பிறைகொண்
டவன்றனக் கன்பு செறிந்தமை யடியர்கட் டிகழ்த்து, நன்னி
லைத் தரும சீலனு ரெனவோர் நாமவந் தணருள ராஞர். உ

உருவநல் லறமாக் கறைமிடற் றிறையன் புயிரென வந்ததே
யனையார், பொருவினன் னெறியின் வரும்பெருஞ் செல்வர்
புரமெரி படுத்தவிற் கோலத், தொருவன தடிமுப் பொழுதும்
வந் தனைசெய் தறுசுவை யடிசின்மா தவர்க்குப், பரிவொடு
மளித்து மிச்சில்கொண் டெமக்குப் பயனிது வெனவொழு
குறுநாள்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கோதினந் தருமசீலர் கொடைகண்டு நாணுட் கொண்டோ
மேதகு மவர்தம் மேன்மை விளக்கவோ வறிந்தி லேமா
லோதமுண் முகிலொ டுங்கிற் றுருபுடை யதனால் யாரும்
பேதுறு பசிநோய் கூரப் பெருமித மிழந்து ளைந்தார்.

வறியவக் காலம் போத மறவறந் தரும சீலர்
செறிபமெய்த் தவர்கட் கெல்லாஞ் செழுங்கறி யமுதி னோடு
நறியமென் புழுக்க லன்பா னற்சுவை யளித்த ளித்தந்
நெறியினிற் பெறும்பே றென்றே நிற்கநின் றிலது செல்வம்.

பழுகுதஞ் செல்வ மெல்லாம் பயன்றரு கதலி யாக
வழுகுதம் பெருகு கற்பி னளவலா தளவி லாம
லொழுகுநன் மனைவி யார்தம் முரியபொற் றாலி யாதி
முழுதும்விற் றடியார்க் கன்பான் முதிர்சுவை யமுத ளித்தார்.

மனையிலுள் ளனவ னைத்து மாண்மடச் செயலொன் றின்றி
யினியருந் தவர்கட் கந்தோ வென்செய்கே னெனத்து ளங்கி
யனையவர்க் கிரப்புற் றேனு மமுதமிட் டொழிந்த துண்பே
னெனமனந் துணிந்தவ் வாறு நெற்பலி யிரந்து செய்தார். ௭

இத்திற மொழுகு நாளி னின்மைமேன் மேல்வந் தெய்த
வெய்த்திடு பவர்க ளின்றி யெண்பகல் பலிக்கு பூன்றே
டத்தயர் வறிது மீண்டங் குடற்றும்வெம் பசிநோய் கூர
மைத்தடங் கண்மா தோடும் வருந்திமெய் தளர்ந்தி ருந்தார். ௮

கொழுநர்தம் மெய்வ ருத்தங் காண்டொறுங் குழைந்து நெஞ்சம்
விழிபொழி வெள்ள மோட வெய்துயிர்த் தென்செய் கோமென்
றெழுதுயர் மனத்தி னோங்க வில்லினுக் குரியார் செந்தீ [ணி.
மெழுகென வுருகி னைந்தார் வினைகொலோ விதுவென் றெண்

அன்பர்தா முடற ளர்ந்து மகந்தளர் வின்றிச் சென்று
முன்பென நதிநீர் மூழ்கி மொய்ம்மலர் புனல்கொண் டெய்திப்
பொன்புரை திருவிற் கோலப் புனிதனை வழிபட் டேத்திப
பின்புதன் மனையின் மெல்லப் பெயர்ந்துவந் திருந்தா ரெய்த்தே.

இம்முறை யந்த ணாள ரெண்டின முணவொன் றின்றித்
தம்முட றளர்ந்தெ[illegible]டையல்பா கனைப்பூ சித்தே

யம்மனை வருகு வார்மெய் யயர்ந்துவந் தருகு வீழ்ந்தார்
மைம்மலி குழலி னார்தம் மதிமுகத் தறைந்த ழுங்க. ௧௧

அவ்வமை யத்தி லீச னடியவ ரொருவர் யாண்டுந்
துவ்வரி தாக மேனி துவண்டுகண் ணுள்வி ழுந்து
செவ்விதழ் புலர்ந்து வாடுந் திருமுக மோடு முன்றில்
வெவ்விய பசியின் வந்தேன் வினையிலீ ரென்று சென்றார். ௧௨

தொண்டர்வந் துரைத்த மாற்றஞ் சுடுதழற் காய்ந்த வெவ்வேல்
புண்டுளை படப்புக் கென்னச் செவிப்புலம் புக்கு நெஞ்ச
முண்டிட வெழுந்து போகி யுரியநன் மனையா ரோடும்
வண்டவர் தமைவ ணங்கி யனையினுட் கொண்டு புக்கார். ௧௩

ஆதனத் திருத்தி மேனி யயர்வுகண் டழுங்கிக் கெட்டேன்
மாதிடத் தவர்தம் மன்பர் வருந்தவிவ் வாறு கண்டே
னேதினிச் செய்வே னென்று விளைவிழி யருவி பாய
மூதழற் படும ரக்கின் மும்மைநெஞ் சுருகி னைந்தார். ௧௪

அன்னைபங் குடையோ னன்ப ரயர்வுகண் டாற்ற லாகா
தின்னுமிந் நகர முற்று மிரந்துகாண் குவன்பு குந்து
செந்நெல்வந் திலதே லாவி தீர்ப்பனென் றில்விற் கோதித்
தன்னிக ரிலாதா ரன்பு தரும்வலி கொண்டு சென்றார். ௧௫

நனையவி ழிதழி யார்க்கு நல்லவ ரிளைத்தா ரென்ன
வினைவுறு மனத்தோ டங்கங் கிருந்திருந் தெழுந்து மெல்ல
மனைதொறும் பலிக்குப் புக்கார் வடிவுறு வருத்தஞ் சற்று
நினைகில ரன்பு பற்றாய் நின்றதந் தணருக் காவி. ௧௬

எம்மையா டிநவிற் கோலத் திறையவன் கருணை தன்னாற்
செம்மையா மனத்தார்க் கெய்தச் செந்நெலங் கிரண்டு நாழி
நம்மையா ளுடைய தொண்டர் நனிபெருஞ் செல்வ முன்னின்
மும்மையா யடைந்த [illegible] மீண்டார். ௧௭

அந்தணர் செல்ல நங்கை யருந்தவ ரயர்வு சாரு
வுந்தெழுந் துயர மோர்பான் மனத்தெழுந் தலைப்பக் கேள்வர்
தாந்தளர் வுண்ணின் றேனுங் தனிபெருந் துயர மோர்பான்
முந்துற வழுமி ரங்கு முலைமுகட் டெற்றி வீழும். ௧௮

இன்னலங் கடலின் மூழ்கி யெழுந்திடா தழுங்கு கின்றார்
செர்நெல்கொண் டந்தோ நங்க டிருந்தொண்டர் பசித்தா ரென்
றுன்னுறு துயர ராக்கத் துலைவுறூர் வருதல் கண்டு [று
மின்னென வெதிர்வ ணங்கி விரைந்துவாங் கினரச் செந்நெல்.

வாங்கிய செந்நெற் குத்தி யாதவர் பசிநோய் தீரப்
பாங்கொடு மமுத மாக்கிப் படைத்திட வேண்டு மென்ன
வோங்குறு மனத்தன் பாற்றம் முடற்றனர் வெண்ணு தம்பொற்
பூங்கொடியனையார் போனம் பொருக்கென வமைத்துப்பின்னர்.

திருந்திய கொழுநர்க் காயிற் றமுதெனச் செப்பி நம்பா
லருந்துயர் கெடவந் தாரை யமுதுசெய் விப்பீ ரென்ன
விருந்தினர் தமைவ ணங்கி யமுதுசெய் வித்த வேலை
மருந்தெதிர் பவரின் மிக்க மறையவர் மகிழ்ச்சி கொண்டார்.

மாதவ ரமுது செய்து மகிழ்ச்சிகொண் டெய்தப் பின்போ
யாதர வொடும்வ ணங்கி யவரருள் விடைகொண் டேகித்
தீதக லன்பின் மிக்கார் சேடித்த வமுதுண் பாக்குப்
போதுமவ் வமையந் தன்னிற் புகுந்தவர் பதமு ரைப்பாம். ௨௨

## கலிநிலைத்துறை.

அந்த ணாளர்தம் மன்பினை யுலகிடை யலர்த்த
நந்தி லாவருட் கூவநா யகனுள நாடித்
தந்த மாவுரி போர்த்ததன் றனியுரு மறைத்து
முந்து தொண்டர்க்ன் பேர்லொரு மூப்புரு வெடுத்தான். ௨௩

அன்று மேவிய காரைக்கா லம்மையே யம்மை
யென்ற வாசக மெய்பெற வவளுரு வென்னத்
துன்று மேனியிற் றசையொழிந் தென்பெலாந் தோன்ற
மன்று ளாடிய திருவடி மலாநடை தளர. ௨௪

பொருவி றன்னைவிற் கோலத்த னெனும்பெயர் புதுக்க
வருவ முள்வளைந் தொருகழைத் தண்டமூன் றூன்றித்
திருவி றைஞ்சுபொற் பையர வல்குலாள் சிரிபபத்
தரும சீலாதம் மனையிடைப புகுந்தனன் றலைவன். ௨௫

புகுந்தி ளைத்தன மொருபிடி போனக மிடிலோ
மிகுந்த புண்ணிய மும்மகனென விளம்பினன் விமலன்
பகர்ந்த வாசகங் கேட்டலும் பதமுண விருந்தார்
நுகர்ந்தி டாமுன மடியர்வந் ததுதவ நோன்மை. ௨௬

என்ற கங்களித் தெழுந்துபோ யெம்பிரா னிளைத்து
நின்ற வசந்லை கண்டுளம பொருதுநெக் குருகித்
துன்ற ருந்துயர் கூர்ந்திரு கண்கணீர் சொரியப
பொன்றி லன்பொடு வணங்கியுட் கொண்டிபுக் கனரால். ௨௭

## கலிவிருத்தம்.

ஐயனை யாதனத் திருத்தி யிங்குநா
முய்யவந் தவர்தமக் குள்ள போனகம்
பையர வல்குலாய் படைத்தி யென்னலு
மையலின் மங்கையர் மகிழ்வுற் றிட்டனர். ௨௮

இட்டலு மிறையவ னெண்டி ணங்கணீர்
பட்டினி யொடுமிகப் பரிந்து தொண்டுசெய்
நிட்டையின் வழுவுறு நங்க ணெஞ்சிடை
மட்டிலை யன்பென மறைந்து கூறுவான். ௨௯

கலிமிகு சிறுவிலைக் காலஞ் செல்வரை
மெலிவுறு நுமக்குநம் விளங்கு மாலயத்
துலைவற வனுதின மொருமணிக் குட
மலிவுறு செந்நென் முன் வைத்துங் கொண்மெனா. ௩0

அண்ணல்சொற் றிடவதை யந்த ணாளர்கேட்
டுண்ணெகிழ் வொடுகர முச்சி கூப்பியே
கண்ணிணை புனலுகக் கடைய னேனையு
மெண்ணிவந் தருளிய விறைவ னோவெனா. ௩க

ஆலயந் தனிலடைந் தன்பு வேண்டுவிற்
கோலவங் கணர்தமைக் குறுகித் தாழ்ந்தெழுங்
காலையி னங்கொரு கடநி ரப்புசெஞ்
சாலிகண் டுவந்தனர் தரும சீலரே. ௩உ

கொண்டுபோய் மனையினக் குடநி ரப்புநெல்
லண்டர்நா யகர்திரு வடிய ரெண்ணிலா
ருண்டிட நல்லமு துதவிச் சேடமுண்
டொண்டொடி யவரொடு முவப்புற் றாரரோ. ௩௩

இத்திற நாடொறு மிறைவ னாலயம்
வைத்தசெந் நெற்கொடு வருந்தொண் டர்க்கெலாந்
துய்த்திட வமுதறு சுவையொ டும்படைத்
தத்தமர் சிவனரும் பதத்தி லொன்றினார். ௩௪

## எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மறையவர் தமக்கிம் முறைமையிற் செந்நெல் வைத்தலா னரியயிற் கோலத், திறையவ னுலகிற் செந்நெல்வைத் தவனா மென்னுமெய்ப் பேரடைந் தனனா, லறையுமப் பெயரை மனம்விழைந் துரைப்போ ரழிவிலா மிக்கசீர்ச் செல்வ, நிறைபெருங் கல்வி பெருகுவர் பின்னு நிகரில்பே ரின்பவீ டடைவார். ௩௫

அந்தவிற் கோலத் திறைசெயும் வெள்ளி யடுக்கலிற் சந்திடா திருத்த, நந்துபொற் பொதுவி னரியாவா னந்த நடமிலங் குறு வட வனைத்தி, லுந்துநற் சண்ட தாண்டவங் கூவத் துலையுறு தருங்கமா தெனவே, வந்தவச் சத்தி யனுதினங் காண மகிழ்ந் திரக் சாநடம் புரிவன். ௩௬

சாற்றரும் பெருமைக் கூவமா நகரிற் றருக்கமா தாவெனும் பெயரான், போற்றுற நடஞ்செய் யெம்பிரா னுமம் போற்றுறு வளர்சடைக் கூத்தன், காற்றுணைக் கமல மொருபகற் சென்று கண்டவ ரளப்பருங் கல்வி, மாற்றருஞ் செல்வம் பெரும்புகழ் படைத்து மறுமையிற் சிவகதி யடைவார். ௩௭

எம்பிரா னடஞ்செய் கூவமா நகரி லிருப்பவர்க் கொருநாளை யளவு, செம்பொனீ குறிலொண் காசியா திகளாய்ச் சிறந்திடுந் தலங்களிற் சென்றே, யம்பொனு மிரநான் மறையவர்த் தேடி யளித்திடு பலனிகர்த் திடுமாற், றம்பிரா னடியார் காத்தலைத யளிக்குந் தனிப்பல னுரைப்பதற் கெளிதோ. ௩௮

கூவமா நகரிற் பிடியடங் கடிசில் கொடுத்திடி னந்தணர் தமக்குத், தேவர்மூ வருமுண் மகிழ்மக நூறு செய்பல னக்கணஞ் செறிவ, ரோவின்மா தவருக் கொருபக னிரம்ப வோதன மத்தலத் திடுவோர், பூவினோன் றிருமால் பதங்களோ வடைவார் புராரிதன் பதம்பெறு குவரால். ௩௯

மாதவர்க் கினிய கூவமா புரத்தோர் மடமமைத் துதவுவோர் தம்பாற், போதுறு மடம்விட் டின்பவீ டடைவர் பொன்றுறு பதங்களிற் புகுதா, ராதர வினிலோர் சிவனடி யவருக் கங்கையின் றுணைவிளை நிலமொன், றீதல்செய் பவரெக் காலமு மகலா திருப்பரொண் கயிலைமால் வரையில். ௪௦

அருந்தவர் தமக்குக் கூவமா நகரி லாடையொன் றளித்திடி லதனிற், றிருந்திழை யொன்றிற் கொருசதகோடி தேவராண்

டருஞ்சிவ லோகத், திருந்துபின் பரமன் றிருவடிக் கமல மெய் துவர் பெற்றமொன் றுதவிற், பொருந்துறு பலனிவ் வளவெ னக் கணித்துப் புகன்றிடற் கரிதரி தம்மா. சக

கொன்றையங் கண்ணி மிலைந்தவன் மகிழுங் கூவமா நகரிடத் தியற்று, மொன்றொரு தரும மனந்தகோ டிகளா யுலப்பறு பல ன்களை யுதவு, மென்றத னியல்பை முனிவா ருவப்ப வியம்பி னன் புலனெறி கடந்து, சென்றரும் பரமா னந்தவா ரிதியிற் றிளைத்திடுஞ் சூதனென் பவனே. சஉ

செந்நெல்வைத்தசருக்கம் முற்றிற்று.

ஆ - திருவிருத்தம் சகO.

---

ஏழாவது

## தாருகன்வதைச்சருக்கம்.

:o:

கலிவிருத்தம்.

சருக்கமி லறிவுடைச் சூத மாதவன்
றிருக்கிளர் கூவமா நகர்ச்சி றப்பெலா
முரைக்கவுண் மகிழ்ந்துகை யுச்சி கூப்பிமா
விரிக்குநன் முனிவா ரியம்பன் மேயினர்.

மூன்னநீ தருக்கமா தெனமொ ழிந்தவ
டன்னது தோற்றமென் றனிப்பொற் கூவமா
நன்னக ரிடைநட மாட வந்தவா
றென்னகொ லியம்பென விசைத்தன் மேயினன்

பேரறங் களுநிலை பெயரக் காமரோ
யாருத லெனநிக ழகிலம் யாவையுங்
கூரிடர் மூழ்குபு குலைய மேலைநாட்
டாருக னெனவொரு தகுவன் றோன்றினான். ௩

சேண்டொடு தனதுடற் சிந்து செய்புனற்
காண்டெளி முழுதுந்தற் கடுத்தெ ழுந்திட
வாண்டகை யோர்களா லழிவு றாதுற
மாண்டகு தவத்தினான் வரமப டைத்துளான். ௪

எண்டிசை யரையரை யெழுபி லத்தினில்
விண்டல மிசையுறு வேந்தர் தங்களை
மண்டுதன் சேனைகா வலாக வால்வயங்
கொண்டனு தினமுங்குற் றேவல் கொள்பவன். ௫

தறுகண்வெஞ் சினக்கொடுந் தாரு கன்றிசை
யுறுகரி தினந்தொறு மொரோவொன் றாகவே
குறுகிய தூதராற் கொணர்வித் தேறியோர்
மறுசென வுலகெலாம் பவனி வந்துளான். ௬

ஒள்ளொளி யிரவிதேர்க் கிள்ளை யொத்தவேழ்
கிள்ளைகண் மீதுமொண் கிண்கி ணிச்சரண்
பிள்ளையேழ் தினத்தினு மேற்றிப் பேரெழின்
ஞெள்ளலி னுலாவரு வித்து நீக்குவான். ௭

கொம்மெனப் புறவடி கொண்டொ ரொற்றினான்
மைம்மலி திரைக்கடல் வறப்ப வெற்றுவான்
செம்மக மேருவி னோடு சிற்சிலம்
பம்மனை யெனவெடுத் தாடு மாற்றலான். ௮

வானிதி நந்துதா மரைதன் வாவியிற்
பானிகழ் வளையொடு பதும மாகவே

யானிரை தனிற்பசு வாகத் தேனுவைங்
காநகர் மலர்ப்பொழி லாகக் கண்டுளான். கூ

வித்தக விடையினோன் வில்லிற் பொன்கவர்ந்
தத்தனு வளைவுற வசைத்த நாரியின்
மெத்தொளி மணிகொளா வியப்ப வாக்கிய
புத்தணி யவயவம் புனைந்த மாட்சியான். க0

மணங்கமழ் குழலர மகளிர்ப் பற்றிவந்
திணங்குறு தருவியர்க் கேவல் செய்வியா
வுணங்குறு சிறைபுரிந் துடன்ற ணக்கியே
யணங்கிய ரெனும்பெய ரவனிட் டானரோ. கக

மேயதன் றிகழவை விளங்க ராவிறை
மாயிருந் தலைகளை வனைந்த தம்பமா
மீயிலங் கொளிமணி யிருள்வி ழுங்குறு
மாயிருஞ் சுடர்களா யமர வைத்துளான். கஉ

ஒல்லையிற் பொழுதுணர்ந் தோலக் கத்துறு
மெல்லையிற் புகுந்திடா திருந்த தேவரைக்
கொல்லுலைக் கனல்விழிக் கொடிய தூதரான்
வல்லியிட் டருஞ்சிறைப் படுத்த வன்மையான். கங

கனவினு மவன்றனைக் காணி னிந்திரன்
மனநடு நடுங்கிவாய் குழறி வல்லையி
னனவினை யடைந்துபின் னடுங்கு நெஞ்சகத்
தினைவுற லொருபக லெலா மொழிந்திடான். கச

ஒருங்குல கங்களி னுயிர்க ளுக்கெல்லாம்
வருங்கொடு நோயென வரும வன்றனு
லருங்கட வுளருச் சனைய றங்கள்வான்
றருங்கலை நெறிமகந் தவம கன்றதே. கரு

அக்கொடுந் தயித்திய ருனை நிற்படா
வுக்குநெஞ் சிடர்ப்படுங் காலத் தோர்பகன்
மிக்கவிண் ணவரரி விரிஞ்ச னிந்திரன்
றொக்கொருங் கொருப்படு டாயிரா லண்டினார். கசு

தங்கள்வெந் துயருறத் தகுவ ருவியு
மங்கொருங் கழிபுநா ளடுத்த தாதலாற்
சங்கரன் றனையினிச் சரணென் றெய்திடின்
மங்குநந் துயரென மனந்து ணிந்தனர். கஎ

துணிந்தவர் கயிலையைத் தொழுதங் கெய்துபு
தணிந்தமெய்ம் மனனுடைத் தவத்தர் சென்னிமீ
தணிந்திடு நந்திதா ளரண டைந்துநேர்
பணிந்தன ரினையன பகர்தன் மேயினார். கஅ

தடுத்தசெங் கோலுடைத் தாருகன் றனை
லடுத்தவெந் துயருரைத் தகற்ற வந்தனம்
படைத்தமை யளித்திடும் பராப ரன்முனம்
விடுத்தரு ளையநீ யென்று வேண்டினார். ககூ

தன்னைநேர் கின்றவன் சைவ தேசிக
னென்னையா ளுடையநந் தீசன் செம்மென
மின்னுலாஞ் சடையினோன் வீற்றி ருந்துழித்
துன்னுவா னவரெலாந் தொழுது போயினார். உ0

வருணமா மணியொளிர் மண்ட பத்திடைத்
தருணவா ரணப்பகைத் தவிசின் மீமிசை
யருணகோ டிகதிரண் டமர்ந்த தென்னவாழ்
கருணைவா ரிதிதனைக் கண்டி றைஞ்சினார். உக

விழிப்புனற் றுளிப்பமெய் விதிர்ப்ப வாளெரி
யுழிப்படு மரக்கினெஞ் சுருகி வெந்துயர்ச்

சுழிப்படு மெனக்கருள் சுரக்கு மீசனை
மொழிபபயன் பெறத்திரு முன்னின ரேத்துவார். உஉ

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வானு திகளாய் நிகழ்வாய் சரண மறைமா முடிவின் பொரு
ளே சரண, மூனு ருயிரே சரணஞ் சரண முனைவா குணர்வே
சரணஞ் சரண, தேனா மொழிபங கினனே சரணஞ் சிவசங்
கரனே சரணஞ் சரண, மானு வமுதே சரணஞ் சரண மருளா
கரனே சரணஞ் சரணம். உங

மருவே மலரே சரணஞ் சரண மணியே யொளியே சரணஞ்
சரணந், திருவே பொருளே சரணஞ் சரண தேனே யமுதே
சரணஞ் சரண,மிரவே பகலே சரணஞ் சரண பெமையா ளுடை
யாய் சரணஞ் சரண, மருவே யுருவே சரணஞ் சரண மருளா
கரனே சரணஞ் சரணம். உச

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

என்றிவை புகன்று போற்றி யிணைமலர்க் கரங்கு வித்து
நின்றவர் தமைமென் சொன்றை நெடுஞ்சடைக சடவு ணோக்கிப்
பொன்றிகழ் மரைதீப பட்ட போன்முகம் புலர்ந்த வுங்கட்
கொன்றிநெஞ் சகன்றி டாத துயரமே துரைத்தி ரென்றான்.

பெருந்தகை யியம்ப மாயோ ன் பெயர்வின்றிப பொருள்கடோறு
மிருந்துட னியக்கு கின்ற வெந்தைநீ யெங்க ணெஞ்சி
னருந்துய ரறியாய் போல வினவிய தடியே முய்யப
பொருந்திய கருணை யென்று போற்றிநின் றுரைப்ப தானான்.

தாருக னென்ன வெய்ய தயித்திய னொருவன் றோன்றிப
பாரிடை முன்னை வேதம் பகர்மக மறத்தின் பேதஞ்
சீரிய தவங்க டானஞ் சிதைந்தன துன்ப மெய்தி
யாருயிர் தரித்தி ருந்தா ரமரரா கையினால் விண்ணோர். உ௫

சற்றுமுட் கருணை கொள்ளாத் தாருக னிழைத்த தீமை
யிற்றெனக் கிளக்க வெம்யான் முடிவுறு தெம்பி ரானே
மற்றினிப் புகல்வ தென்கொல் வலிகெழு மவன்ற னக்குன்
சிற்றடிக் கேவல் செய்யுஞ் செயலெனத் தினமுஞ் செய்தோம்.

அந்தவே லவுணன் றீமை யாற்றரி தெங்கட் குந்தன்
கந்தவா ரிசப்பொற் றாளே காப்பென வபயம் புக்கே
மெந்தைநீ யெம்மைத் துன்பக் கடலினின் றெடுத்தாட் கோடி
தந்தையே யன்றி வேறார் தனயர்த மின்னல் தீர்ப்பார். ௨௯

அச்சுத னெனுமென் றுமைத் தமரென் சுரர்க ளுமைத்
திச்சக மறிய நின்ற முதலெழுத் திகவா தொன்ற
நச்சினை மிடற்ற டக்கு நாதவந் நஞ்சிற் றீயன்
கைச்செமைத் தினமொ றுக்குங் கடுந்திறற் றாரு கன்றான். ௩௰

எம்முபி ரொழியா தென்று பிருந்திடர்ப் படவ ருத்து
மம்மற வினையட் டாட்கொள் ளஃதின்றே லடியே மெல்லா
மிம்மென விமைப்பின் மாள வெமைமுனம் புரக்க வைத்த
வெம்மைகொண் மணிமி டற்றின் விடத்தைவிட் டிடுதியையா.

என்றர வணையிற் றுஞ்சு மெழிலரி யியம்பக் கேட்டுப்
பின்றிகழ் சடிலக் கற்றைப் பெருந்தகை யருண்மீ தூர
வன்றிற லவுணன் றன்னை மாய்த்துவா னவர்க ணெஞ்சந்
துன்றுறு துயரனைத்துந் தொலைத்திட வுளங்கொண் டானால்.

வன்மனத் தவுணர் கோமான் வரத்தொடு வலியு முள்கிப்
பொன்மலைச் சிலைகு னித்துப் புரமெரி படுத்த வெம்மான்
சின்மயக் கிரிப யந்த தேவிதன் வதன நோக்கி
மென்மலர்க் கரந்த றுது மிடற்றிறு லத்து வைத்தான். ௩௩

வைத்தவக் கணத்தி னெண்டோண் மலைபினைத் தன்ன கொங்
மெய்த்தழற் கொழுந்து போலு மென்சிகை குழைதா வால[கை

மொத்தகட் பேழ்வாய் வாரி யுண்முகில் புரையு மேனிக்
கைத்தலக் கழுமுட் டுங்கக் காளிவந் துதித்தாண் மன்னோ. ௯௪

அண்டகோ ளகையிற் றாக்கி யணிமுடி வளைய மிக்க
வெண்டிசா முகத்தி னெல்லை யெண்புய மளப்பக் கண்கண்
மண்டுதீச் சொரியச் சூலம் வண்கையிற் றிரிய வூழிக்
கொண்டலா யிரமு ழங்குங் கொள்கையி னதிர்த்தெழுந்தாள்.

செந்தழ றனக்கு வெம்மை யியல்பெனச் சீற்ற மென்று
மந்தமில் குணமா யுள்ளா ளடைந்தவர்க் கருளுஞ் செய்வா
ளிந்தவண் டங்கள் கோடி யியற்றிட வெண்ணு நெஞ்சா
ளுந்துறு மாற்ற லாலெவ் வுலகினு முவமை யில்லாள். ௯௫

மைந்நக நடுவட் சூழ்ந்த மாலையின் செக்கர் போலத்
தன்னரை விரித்து டுத்த தயங்குசெந் துகிலின் பொற்பாள்
கொன்னுனை வடிகன் சூலக் கொடும்படை நிகர்த்த சூல
மன்னிய மலர்க்க ரத்தாண் மணிச்சிலம் பரற்றுந் தாளாள். ௯௭

ஞாலத்தி னுயிர்க ளெல்லா நடுங்குறக் கரத்திற் கொண்ட
சூலத்தி னுதியிற் குத்திச் சோரியுண் டிடக்கு றிப்பாள்
வேலைத்திண் டிரையிற் றோன்றி யுலகெலாம் விழுங்க வந்த
வாலத்தி னுதித்தா ளென்று லஃதவட் கடுத்த தன்றே. ௯௮

உன்னரு முதிர்சூன் மேக மொத்ததிர்த் தெழுந்த செங்கட்
கன்னியை யுமைகண் டேங்கிக் கைவிர னெரித்துச் சென்று
தன்னிக ரமலன் மார்பிற் பண்டுறு தன்ற ழும்பிற்
பொன்னவிர் சுணங்கு பூத்த முலைபடப் புல்லிக் கொண்டாள்.

அன்னவ ளெழுதல் கண்ட வச்சுத னெம்பி ரான்முன்
பின்னுரை செய்த வாறே பெருவிடத் தினையா தாக்கி
யிங்கிலை யெமைவ தைப்ப விடுத்தன னென்ன மாழ்கித்
தன்னக மருண்டு நின்றான் சதுர்முக னுடல்கம் பித்தான். ௱

இந்திரன் மனந்த ளர்ந்தா னெரியுடல் வெயர்த்தான் கொல்லு
மந்தக னுவு லர்ந்தா னிருதிமெய் யயர்ந்தா னேனைச்
சிந்துவி னிறைவெ ருண்டான் சமீரணன் றிகைத்தான் மூர்ச்சித்
துந்துறு குபேரன் வீழ்ந்தா னுயங்கியீ சான னின்றான். சக

ஏனைய வும்ப ரெல்லா மெழுந்தமா காளி கோர
மேனியை யெதிர்கண் டேங்கி விழிபுதைத் தனரவ் வேலைக்
கூனல்வெண் பிறைமி லைந்த குரிசிலோ டகில மீன்ற
ஞானநா யகியைத் தாழ்ந்து நவிலுமச் சூலி மாதோ. சஉ

## கலிவிருத்தம்.

பரம வென்னைப் படைத்தவ நானிவண்
புரியு மேவல் புகன்றரு ளென்னலு
னருளி னுற்றுவ னென்ன வரன்சுரர்
வெருவு நெஞ்ச மகிழ விளம்புவான். சங

தேவ ரென்றுஞ் செயத்தக வல்லதுற்
றேவல் செய்ய விடர்புரி தாருக
னுவி கொண்டவர்க் காக்க முதவுவான்
பாவை நின்னைப் படைத்தன மென்றரோ. சச

காரி பட்ட கடுந்தொழிற் றருகன்
சோரி பட்ட துகளுறு மனையவன்
மாரி பட்ட வடிவுகொண் டெற்றெழு
மூரி பட்ட முகின்முழ லைக் காளியே. சரு

சூலத் தாற்குத் துபுசொரி சோரிக
பாலத் தேற்றுப் பருகி யவனெடு
நீலத் தாக்கையை நீயே விழுங்குதி
யாலத் தூடுதித் தாயென் றறைந்தனன். சசா

குனித்த வார்சிலைக் குன்றினன் றம்மன
நனைத்த வாறு நிகழ்த்தின னுதலாற்
கனத்த வார்முலைக் காளி மகிழ்வுறீஇ
நுனித்தோர் மாற்ற நுவலுதன் மேயினாள். ௪எ

அண்டர் நாத வளியன் றனக்குநீ
யுண்ட லேபணி யாக வுதவினை
தொண்ட ராகநிற் சூழ்ந்திடு வோர்தமுட்
கொண்ட நின்னரு ளென்னிடைக் கூர்ந்ததே. ௪அ

ஐய நீயெம் பணித்தனை யன்னதே
செய்ய நான்கட வேனெனச் செப்பியே
கையின் மான்மழுக் கொண்ட கடவுடன்
றய்ய தாளைத் தொழுதுநின் றனளரோ. ௪௯

அன்ன காலை யனீகம தாகவே
கன்னி யோகினி வெள்ளங் கணிப்பில
மன்னு காளி வடிவி னுதித்தெழ
வென்னை யாளுடை யீச னினைந்தனன். ௫0

அக்கு மாரி யனைய வடிவொடு
கைக்க பாலங் கழுமுட் டிகழ்தர
மிக்க யோகினி வெள்ள மசனியே
ரொக்க வார்த்தவண் மெய்ந்நின் றுதித்ததே. ௫௧

எந்தை சென்னி யிளம்பிறை யொத்தபல்
கந்த ரத்திற் கடுவை நிகர்த்தமெய்
செந்த ளிர்க்கைச் செழுங்கனல் போன்றகண்
ணுந்து முத்தலை யோகினி கட்கரோ. ௫௨

### கலிநிலைத்துறை.

கண்ணு தற்பர மன்பினர்க் காளியை நோக்கி
யெண்ணி லித்திறல் யோகினி வெள்ளமோ டேகிப்

புண்ணி யப்பகைத் தாருக னாவியைப் போக்கிப்
பண்ண வர்க்கருள் செய்யென வேவினன் பணித்து. ௫௩

எம்பி ரானையு மகிலநா யகியையு மிறைஞ்சிக்
கும்ப மாமுலைத் தறுகண்யா மளைவிடை கொண்டு
செம்பொ னாலயப் புறத்துவந் தடைந்தனள் செறிந்த
வும்ப ராங்கது கண்டனர் மனபபய மொழிந்தார். ௫௪

தேறி னார்மன மெம்பிரான் றிருவருட் செயலைக்
கூறி னார்மகிழ்ந் தொருவர்மே லொருவர்தாங் குப்புற்
றேறி னார்கரங் கொட்டினார் பாடினா ரிருகான்
மாறி னார்சுழன் றாடினா ரான்புடை வந்தார். ௫௫

அந்த ணாவெம தாருயிர் போக்கவன் றதிர்த்து
வாத காளத்திற் காளியை வருவித்திங் கவளை
யெந்த மாவியை நிறவிடப் பணித்தனை யின்று
நுந்த மாருட் பெருமையா ரறிபவர் நுவலின். ௫௬

என்ன வீசன தருடுதித் திறைஞ்சபு விடைகொண்
டன்னை யாகிய யாமளை புடையின்வந் தடைந்து
மன்னும் வானவ ரனைவருந் தனித்தனி வணங்கித்
துன்னு மாமலர் மழையவண் முடிமிசைச் சொரிந்தார்.

சொரிந்த விண்ணவர் தங்கள்கம் பியற்கொடு சூல
மிருந்த கையுடை யாமளைக் கேற்றதோ ரிரதம்
விரைந்து நன்குற வாக்குவித் தளித்திதன் மீது
பொருந்தி நண்ணலற் செகுத்திடப் போதுதி யென்றா.

புகழ்ந்து நிற்பவவ் விரதத்தின் பொலிவினை நோக்கி
மகிழ்ந்து மற்றதைக் கடவவோர் யோகினி மாதைப்
பகர்ந்தி ருத்திபெண் டோளியா யிடையதிற் பாய்ந்தா
ணிகழ்ந்த நன்முனி வரர்சய சயவென நிகழ்த்த ௫௯

தலைவி யாகிய யாமளை யிவரவத் தடந்தேர்
வலவி பாரிடைத் தூண்டினள் காற்றென வலிதி
னிலவி மூவிலைப் படைகொடு யோகினி நீத்தஞ்
சுலவி வேலையி னெண்மடங் கார்த்தன சூழ்ந்து. கூ0

நிலத்தி னேகின வானகத் தேகின நிமிரா
தலத்தி னேகின முகிலிடத் தேகின தடத்த
புலத்தி னேகின கடலகத் தேகின பொருப்புக்
குலத்தி னேகின குமரிதன் பெண்படை குழூஉம். கூக

துடிய திர்ந்தன பதலைக ளதிர்ந்தன துளைச்சங்
கிடிய திர்ந்தன காகள மதிர்ந்தன விரலை
வெடிய திர்ந்தன முரசதிர்ந் தனபணி வேர்நின்
முடிய திர்ந்தன வதிர்ந்தன தரணியு முழக்கால் கூஉ

மிக்க யோகினிப் படைசெலப் பொடிவிசும் பிவர்த
லிக்கு மேவியெற் காலெலாடுந் தொடத்தகா தெனவே
புக்கு ளூர்முடி யிவர்ந்திமை யவரெனல் போக்கி
மக்கள் போற்புரி கிற்பனென் றேகுதன் மானும். கூங

கார்ம றைத்தன திசைகளை மறைத்தன கதிரின்
றேர்ம றைத்தன குலகிரி மறைத்தன திரைமுந்
நீர்ம றைத்தன வுடுக்கண மறைத்தன நெடுவா
னூர்ம றைத்தன மறைத்தன வுலகெலாம் பூழி. கூச

தொடுக்கு மாலையங் குவிமுலைச் சூலிதா ரணியை
யெடுக்கு நாகமெய் நெளித்தல மரவதிர்த் தெழுந்து
நடக்கும் யோகினி வெள்ளமோ டமரர்நன் னதிமட்
டடுக்கு மாமதிற் றிருக புரத்தய லடைந்தாள். கூரு

## கலிவிருத்தம்.

ஒற்ற ரன்ன துணர்ந்தன ரோடினர்
கொற்ற மன்னன் குருமணிப் பொற்றவி

சுற்ற பேரவை யுற்று வணங்குபு
முற்றும் வெஞ்சின மூண்டெழக் கூறுவார். ௬௬

ஐய நீவிண் ணவர்ப்பணி கோடலாற்
கையு லாம்படைக் காளி யெனவொரு
தையல் யோகினித் தானைக ளோடமர்
செய்ய விவ்வழிச் சேர்ந்தன ளென்றனர். ௬௭

அந்த வொற்ற ரறைந்திடு மவ்வுரை
சந்த னப்புயத் தாருகன் சீற்றமா
முந்து முட்சனன் மூண்டெழக் கூறிய
மந்தி ரத்தை நிகர்த்தது வந்தரோ. ௬௮

பன்னு மம்மொழி பாதி செவிபுகு
முன்னந் தீச்சின மூண்ட தவனகந்
துன்னு மம்புகை துண்டத் தெழுந்தன
வன்னி வெம்பொறி வாட்கண் சிதறின. ௬௯

மட்டில் வெஞ்சின வன்னி யறிவினைச்
சுட்ட திவ்வள விற்றொலை கின்றதோ
கிட்டி ஞெரையுங் கேளையுந் தன்னையு
மட்டி டுந்துணை யும்மவி யாததே. ௭௦

இதழ துக்கி யெயிறு கறித்தன
னுதன்மி சைச்செல நூக்கு புருவியாய்
மதர ரிக்கண் மலர விழித்தனன்
முதிர்சி னத்தினன் மீசை முறுக்கினான். ௭௧

பொன்றில் கற்பகப் புட்க ளெழக்கர
மொன்றொ டொன்றுறத் தாக்கி யுருமுவீழ்
கின்ற தென்ன நகைத்தனன் கேட்டசொன்
னன்று நன்றெனச் சீறி நவிலுவான். ௭௨

அடியொன் றாலுல கியாவு மளந்தயா
னெடியன் றானுமென் னேவலி னின்றிடும்
படியன் றாற்றுமென் பாலமர்க் கென்றபெண்
கொடியொன் றெய்திலென் கொற்றநன் றாகுமால். ௭௩

இந்தி ராதிக ளியாரையும் வென்றிடு
மந்த மேவரு மாற்றலுண் டென்னிடை
வந்து ளாளொரு மாதமர்க் கென்றுமிந்
நிந்தை தானுயிர் நீங்கினு நீங்குமோ. ௭௪

புவனம் யாவினும் போர்த்தொழில் வந்துசெய்
பவரி லாமையிற் றோட்பய னின்றியே
கவலு நெஞ்சினன் காரிகை யோடமர்
நவிலி லோர்பழி நண்ணின னாவனேல். ௭௫

என்னை வெல்லவிங் கேந்திழை யெய்தலான்
மின்னை வெல்ல வுரகமு மேவுமான்
மன்னை வெல்ல மலையும் வரும்புலி
தன்னை வெல்ல வுழைகளுஞ் சாருமால். ௭௬

கண்ணன் வேதன கடவுள ரிந்திர
னண்ணன் மாமுனி வோர்க ளபயமோர்
பெண்ணின் பாற்புகும் பெற்றிமை யாலவர்
நண்ணுறு மாண்மை நனிசிறந் திட்டதால். ௭௭

## மேற்படி வேறு.

இந்திரற் பிடித்தெடுத் தெற்றி வீழ்ப்பனோ
வந்தகற் பதைத்திட வடித்துக் கொல்வனோ
சந்திரற் கதிரொடு மெடுத்துத் தங்குபூம்
பந்தெனப் புடைப்பனோ படியிற் பாணியால். ௭௮

கனலியை விழுங்கியேழ் கடலு முண்பனோ
சினமற வமரரைப் பதத்திற் றேய்ப்பனோ
முனிவரர் குலமெலா முடிப்ப னோவென
வினையன பலபகர்ந் தெரியிற் சீறினான். எகூ

சீறிய தாருகத் தீயன் யாமளை
வீறிய வெனைத்தொழ மேவி னாள்கொலோ
மாறமர் புரிந்திட வந்து ளாள்கொலோ
கூறுதி ரொற்றினீர் குறிப்பென் னென்றனன் அ0

என்றலு மொற்றர்க ளிறைஞ்சி யையகேள்
வன்றிறல் யாமளை மறலி தன்னையும்
வென்றிகொள் படையொடும் பொருதல் வேண்டியே
யொன்றின ளையமின் றுண்மை யுண்மையே. அக

மாதென வுளங்கொளே லவளை மன்னநீ
யோதரு மசுரருஞ் சுரரு முட்கமுன்
மோதுறு திரைக்கடன் முகட்டெ ழுந்தவப்
பாதக நஞ்சமே படிவங் கொண்டதால். அஉ

உம்மென வவளுரப் பொலிகொல் கின்றதீ
வெம்மைகொ ணமனையும் வீட்டு மாயுதங்
கைம்மலை பரித்தவக் கண்ணற் கோர்தலைச்
சும்மைகொள் சுமையவ ளெடுத்த சூலமே. அங

## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இனையன வொற்றர் கூறு மெல்லையிற் கடைநாட் பொங்கிக்
கனைகட லுடைந்த தென்னக் காளிதன் றானை யார்க்கு
நளியொலி செவிப்பு லத்து நடந்தது தாரு கன்றன்
சினவெரிக் கிழுது மன்றிச் சமிதையுஞ் சொரிந்த தேபோல்.

ஆயது காலை தன்னி லழலினெண் மடங்கு சீறிச்
சேயிழை மகளிர்ப் பற்றிச் சிறைபுரிந் திடுவன் றாதீர்
போயென தனிக முற்றும் பொருக்கெனத் தருதி ரென்ன
வேயின னவரு நன்றென் றிறைஞ்சுபு விரைந்து சென்றார்.

சென்றபி னவுணர் செம்மல் செருத்தொழிற் கோலங் கொள்வா
கன்றியங் கெழுந்துட் போகிக் கதிரிளம் பரிதி நீலக் [ன்
குன்றின்வந் தெழுந்த தென்னக் குருமணி மகுட மொன்று
தன்றலை கவித்தான் யாருஞ் சயசயென் றெடுத்து வாழ்த்த.

கல்லென மிழற்றும் வீரக் கழலடித் தலத்தி லார்த்தான்
மல்லலங் கச்சு வீக்கி மருங்கினிற் சுரிகை சேர்த்தான்
புல்லுறு மங்கி மேனிப் புறந்தெரி யாது போர்த்தான்
வில்லுமிழ் சரம்பெய் தூணி வெரினிடைத் தூக்கி ஞால் அஎ

அங்கையிற் கோதை சேர்த்தா னணிவிரற் புட்டி லிட்டான்
கொங்கலர் தும்பை மாலை குருமணி மவுலி சூழ்ந்தான்
புங்கவப் படைய னைந்தம் பூசனை புரிந்தெ டுத்தான்
செங்கையிற் றெழுது மேருச் சிலைநிகர் சிலையுங் கொண்டான்

இம்முறை யமரின் கோல மெய்தியொள் ளிலைவேன் மன்னன்
கொம்மெனத் தனது கோயிற் புறத்தினிற் குறுகு முன்னந்
தெம்முனை முருக்குஞ் சேனை தாமுனஞ் சென்ற தூதர்
தம்மனந் தனில்வி ரைந்து தலைத்தலை பரவிச் சென்றார். அகூ

சென்றவ ரொட்ட கத்திற் செழுமுர செறிந்து நுங்கட்
கின்றொரு பெரும்போர் வந்து கிடைத்ததிங் கெழுக சேனை
யென்றலு மவுணர் வேழ மிரதமம் புரவி யென்னத்
துன்றுறு மனிக வெள்ளந் தொகையில வெழுந்த மாதோ. கூ0

போரெனச் செந்நெற் சூட்டுப் பெயரினைப் புகலுற் றாலு
மேருறு தடந்தோள் வீங்கி யெங்ஙனென் றெழுந்து துள்ளும்

வீரர்க ளவுணர் நாதர் வெஞ்சமர்க் கெழுமி னென்ன
வாருறு பணைமு ழக்க மகிழ்ச்சிகொள் வதையென் சொல்வாம்.

வீங்கினர் புயங்க ணெஞ்சம் விம்மின ரமரிற் றுன்ப
நீங்கின ரெழுவும் வாளு நேமியு மழுவும் வில்லுந்
தாங்கினர் பகைஞ ரெங்ஙன் சார்ந்தனர் காட்டு மென்ன
வோங்குறு மண்ட கூட முடைந்தென வார்த்துச் சூழ்ந்தார்.

இந்திரன் வயிரந் தன்னாற் சிறகர்முன் னீரப் பட்ட
வந்தமில் கிரிக ளெல்லா மனையவன் பகைஞ னென
நந்துறு மவுணன் றன்பா னட்புற நடந்த வென்னச்
சுந்தரத் திகிரிப் பொற்றேர் திசைதொறுஞ் சூழ்ந்த வம்மா. ௯௩

சோர்ந்துறு கற்பின் மாதர் துணிவுறு முள்ளம் வேறாய்ச்
சேர்ந்திடு கொழுந ரேவற் றிருந்துறச் செய்யு மாபோ
லூர்ந்திடு பாகர் தம்பா லுளத்திடை முனிவு கொண்டு
கூர்ந்தவர் குறித்தல் செய்யுங் கொடுமத மாக்கள் சூழ்ந்த. ௯௪

நிலத்திடைப் பாயுஞ் சென்று நெடுவிசும் பகட்டிற் பாயும்
பிலத்திடைப் பாயும் பாழிப் பெருங்கடன் முகட்டிற் பாயு
முலத்திடைப் பாயு ஞான வொருநெறி யோங்கு ருமற்
புலத்திடைப் பாயும் புல்லர் மனமெனப் புரவி யீட்டம். ௯௫

ஈண்டிய வனிக நான்கு மெழுந்தன வவுணர் கோமான்
காண்டலு முவகை பூத்துக் கவனவாம் புரவி கோடி
பூண்டுறு மிரத மொன்றிற் பொருக்கென வாவிப் புக்குத்
தூண்டுறு வலவற் பாரா வினையன சொல்வ தானான். ௯௬

பாகனீ நொடிப்பின் மாதின் படையெதிர் நமது பொற்றே
ரேகுற விடுத்தி யென்ன விறைஞ்சிநின் றைய வென்ன
மாகவாம் பரிக டம்மை மத்திகைத் தொழிலா லுந்திச்
சேகுலா முருளைத் திண்டேர்ச் செலுத்தினன் விரைந்து செல்ல

அடைப்பைகோ டிகங்க ளாஞ்சி யாலவட் டங்க ளொள்வா
ளெடுப்பவர் பலருஞ் சூழ விழிக்குறி காட்ட வந்து
படைப்புற மொய்க்கு மீக்க ளகற்றுறும் பரிசு போலப்
புடைப்பரி சனங்க ணின்று பொலியும்வெண் கவரி வீச. கஅ

தாருக மன்ன னேகுந் தன்மைகண் டனிக வெள்ளம்
வாரிதி யேழு முட்க வல்லிதி ஞர்த்தெ ழுந்து
சீருறு மனந்த னுமப் பணியிறை சென்னி மாற்றப்
பாரகம் போழ்பட் டேங்கப் படர்ந்தன திசைகண் முற்றும்.

படிமக ளசுர நீசப் பரிசனஞ் செய்த பாவ
முடிவுறக் கடவுட் கங்கை மூழ்குவான் படர்த லென்னக்
கொடியவெம் படைக ளார்த்துக் கொய்மென நடக்கு மேல்வைப்
பொடிவிசும் படங்க நுங்கி மீமிசைப் போயிற் றம்மா. க00

விண்ணெழும் பூழி மாலை வெண்குடை யடைந்தப் பாற்போய்க்
கண்ணகன் கதிரின் மேனிக கவினழி யாத வண்ண
நண்ணுபு தடுத்த வாழி நஞ்சுதா னருந்தி முக்கட்
பண்ணவ னமரர்க் காத்த பேரருட் பான்மை யேபோல். க0க

நீங்கிய நாணுப் பெற்று நிறையழி கணிகை மாதர்
தாங்களோ ருழியிற் கூடித் தத்தமின் மலைத லேபோற்
பூங்கழன் மிழற்றச் செல்லும் பொருநர்கைப் பற்ற விண்ணி
னோங்கியே கொடிக ளொன்றோ டொன்றுதாக் குற்ற வன்றே.

தழங்கின முரச மார்த்த தண்ணுமை கலித்த மொந்தை
முழங்கின படக மெல்லா மொய்ம்பினி னியவர் தாக்குஞ்
செழுங்கர விசைகட் கேற்பச் சிலம்பின புவனி மார்த்த
ரழுங்குர லோசை யேற்று மடக்கியன் றெழுத லேபோல். க0ரு

இவ்வகை யனிக மென்னு மிருங்கடல் விரைந்து சூழத்
தெவ்வடு குவவுத் திண்டோட் டிருகுளத் தவுணர் கோமான்

கொவ்வையங் கனிவாய்ச் செங்கட் குமரிதன் படைவந் தெய்து
மவ்வுழி யெதிர்சென் றேற்ற னமரர்க ணடுங்கி யேங்க. ௧0௪

மண்டுறு மவுண வெள்ள மலிந்தெதிர் வந்த தன்மை
கண்டனர் வடவை யேபோற் கனன்றியோ கினிகள் சூலந்
திண்டிற லோடு செங்கை விரல்களாற் றிரித்து மிக்க
வண்டகோ ளகைவெ டிப்ப வார்த்தெதிர் சென்று புக்கார். ௧0௫

கலிவிருத்தம்.

எழுக்களு முசலமு மிலைகொள் வேல்களு
மழுக்களும் வளைகளும் வாளும் வாளியுங்
கழுக்களு மலைகளுங் கதையுங் காளிகள்
குழுக்களு மவுணர்மேற் கொதித்து வீசினர். ௧0௬

தோமர மொளிறுவாள் சுரிகை முத்தலை
நேமிகள் சிலையுமிழ் நெடுஞ்சி லீமுக
நாமவேன் முதலின நஞ்சிற் றீயவர்
தாமும்யோ கினிகண்மேற் றருக்கி வீசினர். ௧0௭

கரங்களின் முசலமுங் கதையு நல்கியே
யுரங்கிளர் சொரிமத வொருத்த லுந்தினர்
மருங்குற வொளிறுகை வாள்வி திர்த்துவன்
றுரங்கரா சிகடமைத் தூண்டி யீண்டினர். ௧0௮

தார்கெழு தடம்புயத் தகுவ ராழியந்
தேர்களை முடுக்கியெண் டிசையுஞ் சூழ்ந்துகொண்
டேர்கிளர் கொடுமர மிமைப்பின் வாங்கிவிண்
கார்களின் மும்மைவெங் கணைகள் சிந்தினர். ௧0௯

விழுந்தன தலையுடல் வேறு வேறதா
யழுந்திட வரைகளி னூற்றிற் செம்புன

லெழுந்தன விருதிறத் தினுமெண் ணில்லவ
ருழுந்துருள் பொழுதினி லுலந்து போயினார். கக0

கண்டன ரவுணர்தங் களிப்பு மாற்றலு
மொண்டழ லெனவுள முருத்துப் பொங்கினா
ரண்டமு மிடிபட வதிர்த்து வல்லையின்
மண்டியோ கினிகடா மலைதன் மேயினார். ககக

பரியொடு பரிகளும் பனைக்கை மும்மதக்
கரியொடு கரிகளுங் கதிரு லாமணி
யிரதமொ டிரதமு மெடுத்து வீசினார்
சுரருள மகிழ்வொடு துணங்கை யாடவே. ககஉ

சிறந்திடு நெடுமணித் திகிரித் தேர்களை
யுறைந்தவ ரொடுமெடுத் தும்பர் வீசினார்
மறந்தரு பெருவலி மாரு தம்பறித்
தெறிந்திடு மேருவின் முடிக ளென்னவே. ககங

கொய்யுளை மாவும்வெண் கோட்டு வேழமு
மொய்யென வேயெடுத் துகைக்கின் றேருடன்
மையலில் சூரர மகளிர் வீசினார்
வெய்யவன் றேரொடு விலங்க விண்ணின்மேல். ககச

அருகுறு மவுணரை யடர்ந்து பற்றியே
கருகுறு மிடற்றினைக் கடித்துக் கொக்கிடைத்
திருகுறு கனியெனச் சுவைத்துச் செம்புனல்
பருகினர் முனிவொடு பசிசற் றாற்றினார். கக௫

பிடித்தனர் குருதிநீர் பிலிற்றக் கைகளா
லடித்தன ரவுணர்தம் மாக்கை யென்பெலா
மொடித்தனர் நகநிரை யுதிரத் தண்டினா
லிடித்தன ருயிரைவிண் ணேற்றி னாரரோ. கக௬

## மேற்படி வேறு.

வெருட்டின ருதைத்தனர் மிதித்தனர் துகைத்தார்
மருட்டின ரிடித்தனர் வளைத்தனர் செறுத்தார்
புரட்டின ரெடுத்தனர் புடைத்தனர் கறுத்தா
ருருட்டினர் தயித்திய ருயிர்க்கிட ரிழைத்தார். ௧௧எ

அடுத்தவ சுரக்குழு வெடுத்ததி ருறுங்கா
ரிடத்தினு நகத்தினு நிலத்தினு மெறிந்தார்
ரொடித்திடு வரைப்பினு ளொறுக்கின ரனந்தம்
படைத்தலை வரைப்பதை பதைத்திட வறைந்தே. ௧௧அ

இத்திறமி யோகினிக ளெங்கணு நெருங்கிக்
கொத்தசுர வெள்ளமயு தங்கடிது கொன்று
ரத்திற மனைத்துமொ ரடற்புய வமைச்ச
னெய்த்தழ லெனக்கனலு நெஞ்சமொடு கண்டான். ௧௧௯

கண்டவ னிலங்கிரத மங்கெதிர்க டாவி
விண்டுமக மேருவும் வெடித்திட வதிர்த்து
வண்டுபொழி கின்றதனி வார்சிலை வளைத்துக்
கொண்டொரு கணத்தினி லடைந்தடல் குறித்தான். ௧௨0

குறித்தவ னதிர்ப்பொடுமெய் கொண்டல்க ணிகர்ப்பப்
பிறைத்தலை நெடுஞ்சர மதிர்ப்பினொடு பெய்து
மறைத்தன னிருந்திசைகள் வஞ்சனிகள் சென்னி
யறுத்தன னுருட்டின னலக்கணுற விண்ணோர். ௧௨௧

கரத்தினை யறுத்தன கழற்றுணை யறுத்த
புரத்தினை யறுத்தன புயத்தினை யறுத்த
சிறத்தினை யறுத்தன செருக்கினை யறுத்த
வரத்தினை யறுத்தன வமைச்சன் விடுவாளி. ௧௨௨

### கலிநிலைத்துறை.

மண்டு மாரழற் கடவுளை வந்தலைக் கின்ற
சண்ட மாருத மெனப்புகுந் தமைச்சர்க டலைவன்
வண்டு மாமழை பொழிந்தியோ கினிகளை மலையக்
கண்டு தானையந் தலைவியுங் கொருத்தியுட் கனன்றாள். கஉ௩

அந்த யோகினி யசனியே றுக்கிட வதிர்த்தே
யிந்த நீசன துயிர்குடித் திடுவெனென் றிமைப்பின்
வந்து கூடியக் கடுந்திற லமைச்சனை வானத்
துந்து மாழியந் தேரொடு முடனெடுத் தெறிந்தாள். கஉச

வீர யோகினி யவனது வீரக்கு மகிழ்ந்தே
யேரு லாவுறு துறக்கமே லேவின ளென்னத்
தேரொ டேயெடுத் தெறிந்திடத் தினகரன் றிருத்தே
ரூரும் வானெறி கடந்துபோ யொல்லையின் மீண்டான். கஉரு

மீண்டு வீழ்பவன் மேலொரு பெருங்கதை விரைந்து
தூண்டி னாளதிர்ச் தவனது வுணர்ந்துதுண் ணெனவோர்
நீண்ட வாளெடுத் ததிர்த்திர தத்தினு நீங்கித்
தாண்டி வானிடைத் துணித்தவண் டரைதனிற் குதித்தான்.

இரதம் வீழ்ந்துநண் டுகளதா யிற்றதவ் வேலை
நிருதன் வான்கதை துணித்துமண் குதித்தவ ணிற்பக்
குருதி கால்விழிச் சூர்மகள் கண்டுளங் கொதித்துப்
பரிதி போலொளிர் கின்றவெம் பரிதியொன் றுய்த்தாள்.

உய்த்த வாழியம் மாயவன் னேமிபோ லுருத்து
மெத்து தீயுமிழ்ந் துறுசெயல் கண்டுவில் வளைத்துப்
பத்து நூறெனும் பகழிக டுரந்தது துணித்துத்
தத்து வார்திரைக் கடலென வார்த்தனன் றருக்கால். கஉஅ

திகிரி மாய்வுறக் கனன்றன டிகிரியொன் றொழியிற்
பகரு மாதியப் பெயர்த்தினை யொல்லையிற் பறித்து
நிகரில் வீரன்மே லெறிந்தன னஃதவ னீக்கா
னகல வாகுவி லேற்றன னார்த்தெதிர் புகுந்து. ௧௨௯

அந்த வெற்பவ னடற்புயந் தாக்கிமீண் டதிர்ந்து
வந்து பட்டவண் முலைத்தடத் திற்றது வறிதே
முந்து மற்றவர் புயமுலைக் குடைந்திடு முனிவா
னுந்த வுற்றவை யொடும்பொரு திறந்தவா றொப்ப. ௧௩௦

வெய்ய வொண்கிரி யிற்றலும் விரைந்துவில் வணங்கி
யையி ரண்டுவெம் பகழிக ளவனுத லழுத்திக்
கையில் வன்கதை யொன்றெடுத் திமைப்பினிற் கலந்து
பொய்யி லங்கவன் முடியிசை மோதினண் முடிந்தான். ௧௩௧

முன்னர் மெய்யொடும் விசும்பிடை யேற்றினண் முனிந்து
பின்னர் மந்திரக் கிழமையோன் றனையுடல் பிரித்து
மன்னு மும்பரின் மீண்டிடா தேற்றிட மகிழ்ந்து.
துன்னு புங்கவர் குரவையாட் டயர்ந்தனர் துள்ளி. ௧௩௨

ஆன காலையி னமைச்சனங் கிறந்தமை யறிந்து
தான மாநிக ரவுணர்கள் சிறியச் சண்டி
சேனை நாயகி மீதுபல் படைக்கலஞ் சிதறி
மீன வேலைகண் முழக்கமு மழுங்கமிக் கார்த்தார். ௧௩௩

அன்ன தன்மைகண் டியோகினி கடிதினோ ரடல்வாட்
டன்னை யங்கைகொண் டப்படை யனைத்தையுந் தடிந்து
பன்ன லின்சுவை பாற்றிடுஞ் சூறைமா ருதம்போன்
மன்னு வெந்தொழி லவுணருட் புகுந்தனண் மலைந்தாள். ௧௩௪

தாடு ணித்தன டலைகளைத் துணித்தனள் சயங்கூர்
தோடு ணித்தனள் கரங்களைத் துணித்தனள் சுடரும்

வாடு ணித்தனள் கொடுமரந் துணித்தனள் வயஞ்சொல்
சூடு ணித்தன ளிமைப்பினிற் கறங்கெனச் சுழன்று. ௧௩௫

சிலைக ளற்றன வுடம்பிடி யற்றன செழுமூ
விலைக ளற்றன நெடுங்கர மற்றன வெழிற்றேண்
மலைக ளற்றன துணைப்பத மற்றன வயவர்
தலைக ளற்றன தகுவியர் தாலியு மற்றார். ௧௩௬

குன்ற மெண்ணில போலவே களேபரங் குவிந்த
துன்று மோங்கலிற் றொடங்கியோ டாறெனச் சோரி
யொன்றி வீழ்பிணக் குவாலினு நின்றிழிந் தொலித்துச்
சென்று வேலைபுக் கனகருங் கடற்பெயர் தீர. ௧௩௭

படர்ந்த காகமு மெருவையும் வன்சிறைப் பருந்து
மடைந்த ஞாளியு மிகலனு மனைக்குறு நரியுங்
குடைந்து மூளையு நிணங்களுந் தின்றுபேய்க் கூத்தாய்க்
கிடந்த தெங்குமவ் விறலியோ கினிபொருங் களமே. ௧௩௮

பிறங்கல் போலுயர் பிணக்குவை யுண்டவெம் பேயின்
றிறங்க ளோர்பெரும் பேயர சென்றுசெங் களத்து
நிறங்கொண் மாமுடி கவித்திடுங் கவிகைக ணிழற்றுங்
கறங்கு பம்பையு மியம்புறுங் கவரிக ளிரட்டும். ௧௩௯

சோரி வாய்மடுத் துண்டுமென் னிணங்களைச் சுவைத்துப்
பேரி யாதிக ளத்துள வதிர்த்துவெம் பேய்கண்
மூரி வேலுடைக் காளியெம் மிடிகளை முடித்தாள்
போரின் மேவியென் றவடனைப் புகழ்ந்துநின் றாடும். ௧௪௦

நீங்கு போர்வையம் பணையினை நிறுவிவே ணிருத
ரோங்கு மூரல்க ளரிசியிற் பெய்துநீ ளுலக்கை
யாங்கு வேழவெண் மருப்புமொண் முசலமு மாகத்
தாங்கி மாவென விடித்தன தருக்குபெண் பேய்கள். ௧௪௧

மிக்க மென்றசை யிருந்திட வெற்றெலும் பதனைத்
தக்க தென்றுபுன் ஞமலிகள் கறித்தன தளர்ந்து
துக்க மொன்றமி றம்மனை துறந்துபோய்ப் பிறரில்
புக்கு வெந்துயர்க் கடற்படு மிழுதைகள் போல. கசஉ

இன்ன தன்மைய தாயசெங் களத்திடை யெடுத்த
மின்னல் வாளினு லியோகினி யவுணரை வீசிச்
சின்ன பின்னம தாகவே துணித்திடச் சிலர்தாம்
மென்ன ரித்தன ருயிரினைக் காப்பது விழைந்தார். கசங

அதனைத் தாருக மன்னவ னவ்விடைக் கண்டான்
கதுவிப் புக்குலைக் கடுங்கன லாமெனக் கதமுற்
றிதழைக் கவ்விவன் பற்கறித் தெனதிருஞ் சேனை
சிதையக் கொல்பவர் யாதரோ நன்றெனச் சிரித்தான். கசச

சிரித்த தீயவன் யோகினித் திரடனைச் செழுந்தீப்
பருத்தி வான்குவைப் புக்கெனப் படுப்பனென் றெண்ணிக்
கரத்தி லோர்பெருங் கதைகொடு கலினமான் றேர்விட்
டொருத்து மாநில வரைப்பினி லொய்யெனப் பாய்ந்தான். கசரு

பாய்ந்த காலையிற் பெரும்புவி வெடித்தது பணிக
ளோய்ந்த மாதிரக் கடகளி றோடின வெருண்டு
சாய்ந்த மேருமால் வரைமுத லாயின சயில
மேய்ந்த வானவ ரென்கொலோ முடிவதென் றினைந்தார். கசசா

தேரி னின்றுகுப் புற்றவன் செயறனைத் தெரிந்து
போரில் வென்றிகொள் யோகினி காற்றெனப் புகுந்து
தாரின் மல்கிய வசுரர்கோன் றடம்புய மீது
மூரி நல்வசி யோச்சின ளுருமென முழக்கி. கசஎ

தரிய லார்புகழ் விறலினோன் றடம்புயந் தாக்கு
மரிய வாள்சிறி தேனுமூற் றற்றிடா ததிலே

பெரிய ரோடிக லறிவறு பேதையர் போல
மூரிய வாங்கது கண்டனன் முருக முதல்வன். கசஅ

கண்ட தீயவ னவளுரத் தெடுத்ததோர் காத்துத்
தண்டி ஞற்புடைத் தானவன் றனதிடக் காத்தா
லண்ட கூடமே யுடைந்ததென் றயிர்த்திட வடித்தான்
விண்டு மார்பகங் குருதிவாய் சொரிந்திட வீழ்ந்தாள். கசகூ

தலைவி வீழ்தலும் யோகினித் தானைக ளனைத்துஞ்
சலவி வேன்மழுத் தண்டுவாள் சூலமா திகளாம்
பலவு போவறத் தாருகப் பதகன்மேற் றூர்த்தார்
நிலவு மாரழன் மீதெறி துரும்புக ணிகர்ப்ப. கரு௦

மேற்படி வேறு.

ஒடிந்தன சிற்சில வுடைந்த சிற்சில
பொடிந்தன சிற்சில போழ்ந்த சிற்சில
மடிந்தன சிற்சில மறிந்து வந்தமண்
படிந்தன சிற்சில படைக்க லங்களே. கருக

வீடின படைகளிவ் விதத்தி லாயிடைக்
கூடிய வவுணர்கோன் கொதித்து மாதரு
ளோடின ரொழியவிங் குற்று ளோர்தமைச்
சாடுவ லெனவெதிர் தலைப்பட் டானரோ. கருஉ

அடிகளுங் கரங்களு மறுவை சூழ்தரு
கடிகளும் புயங்களுங் காளி மாதர்தம்
முடிகளுஞ் சிதறிட மோதி ஞன்களுங்
கொடிகளுங் களிப்புறக் கொடியன் றண்டினல். கருஙு

ஆயிர நீலிக ளடியொன் றுலகன்
மாயிரு ஞாலமேன் மறிந்து வீழ்ந்திடப்
போயருங் கதையினுற் புடைத்து வீட்டினுன்
றீயுரு மேறெனத் தெழிக்கு மார்ப்பினுன். கருச

சிலவரைக் கதையினாற் சிரங்கள் போக்கினான்
சிலவரைக் கரத்தினாற் செருக்கு நீக்கினான்
சிலவரைப் புயத்தினாற் றிசைபடத் தாக்கினான்
சிலவரைப் பதத்தினாற் சினைத்துத் தாக்கினான். ௧௫௫

உதைத்தனன் சிலவரை யுதிரச் சேற்றிடைப்
புதைத்தனன் சிலவரைப் பொறிக லங்கிடச்
சிதைத்தனன் சிலவரைத் திருக்கிச் சென்னிகள்
வதைத்தனன் சிலவரை மடங்கல் போன்றுளான். ௧௫௬

பற்றினன் சிலவரைப் படுக்கும் வானிடைச்
சுற்றினன் சிலவரைத் தொலைக்குங் கால்களாற்
றெற்றினன் சிலவரைச் செறுக்கு மார்பிடைக்
குற்றினன் சிலவரைக் குமைக்குந் தாருகன். ௧௫௭

பாரினில் வரையினிற் பாதலத்தினிற்
காரினி லுவரியிற் கடத்தின் மாலய
னூரினின் மகபதி யுழியி லாதபன்
றேரினி லுலகினிற் சிலரை வீசினான். ௧௫௮

முரிந்தன வெண்புயம் முரிந்த பன்னிரை
முரிந்தன பாணிகண் முரிந்த வான்றொடை
முரிந்தன தாளிணை முரிந்த தோட்டுணை
முரிந்தன கந்தர முரிந்த நாசியே. ௧௫௯

ஓடின குருதியா றெங்கும் வெற்பென
நீடின களேபர நிறைந்த ஞாளிகள்
பாடின கழுதுகள் பறந்த லகைக்கணின்
றாடின கவந்தமோ ரயுத மென்பவே. ௧௬௦

மொழிந்திடு புகழினோன் முருக்க வெல்வகை
யொழிந்திடும் யோகினி மகளி ரோடினார்

வழிந்திடு புனல்விழி வதனத் தெற்றியே
யழிந்திடு முணர்வொடு மமரர் தேம்பினர். கசுக

கண்டனன் யோகினிக் கணங்கள் சிந்திய
தொண்டிற லவுணர்கோ னுருள்பொற் றேரின்மேற்
றண்டொடு மொய்யெனத் தாவி னெஞ்சின
மண்டுறு பெருவலி மடங்க லன்னவே. கசுஉ

தானவப் படையெலாந் தருக்கிச் சிந்துபு
போனவப் படைகளைத் தொடர்ந்து போக்கியே
மானவப் படைபுலான் மழுக்கள் வாண்முத
லானவப் படையெலா மார்த்து வீசினர். கசுங

எஞ்சலி றன்படை யிரிதல் காளிகண்
டஞ்சலி ரஞ்சலி ரவுண ரியாரையும்
புஞ்சமென் சிறுபுழுப போல விவ்விடைச்
செஞ்சிலம் படியினாற் றேய்ப்ப னென்றனள். கசுச

என்றவள் வலவியை நோக்கி யிமமெனத்
துன்றுறு மவுணர்தஞ் சூழன் முன்னரே
சென்றுற நமதுதேர்ச் செலுத்து வாயென்று
ணன்றென வவடொழூ நடத்தி னாளரோ. கசுரு

கடங்கவிழ் கவுணொடுங் களிறு வவ்வுறு
மடங்கலின் மிசைவருஞ் சிம்புண் மானவே
விடங்கது வுறுமொழி விமலை தேரொடு
மடங்கல ரெதிர்புகுந் தடுதன் மேயினாள். கசுசு

முதிர்ந்திடு சினமொடு மூரி வில்லெடுத்
தெதிர்ந்திடு மவுணர்மூன் பெய்தி மேதினி
யதிர்ந்திட மேருவு மலைய வானமீ
னுதிர்ந்திட வுகிரினா ணொலிக்கொண் டாளரோ. கசுஎ

வெருண்டனர் சிற்சிலர் வீழ்ந்து மண்ணின்மேற்
புரண்டனர் சிற்சிலர் செவிகள் பொத்தியே
மருண்டனர் சிற்சிலர் மணிப்பொற் றேரொடு
முருண்டனர் சிற்சில ருலவுந் தானவர். ௧௫௮

நாணொலி செவிப்புக நடுங்குந் தானவர்
நாணுமிழ் சுடுசர நணுகு முன்னரே
நாணுள முழுவது நழுவி றோடுவா
ரொன்றொரு சிறிதுரு நலிய நின்றனர். ௧௫௯

ஒன்றனு மணலுமிழ் நெடிய வாளிகள்
குன்றெனும் வரிசிலை குனித்துச் செண்டுபோற்
பின்றலி லவுணர்மெய் விடாது பெய்தனன்
சென்றுறு குருதியா றுததிச் செல்லவே. ௧௬௦

ஆழிமான் றேரினு மயங்கண் மீதினுஞ்
சூழிமால் கரியினுஞ் சுடுச ரங்கடா
மூழிமா முகில்களு முடையச் சிந்தியே
பாழிமா நிலமிசைப் படுத்தி னானரோ. ௧௬௧

உரங்களை யறுத்தன வுடல றுத்தன
வரங்களை யறுத்தன வயின றுத்தன
சிரங்களை யறுத்தன சிலைய றுத்தன
கரங்களை யறுத்தன காளி வாளியே. ௧௬௨

அறுத்தன கரிகளை யறுத்த தேர்களை
யறுத்தன பரிகளை யவுணர் கோன்புக
ழறுத்தன புரையவே யறுத்த வெண்குடை
யறுத்தன கொடிகளை யாசு கங்களே. ௧௬௩

சுரங்களி லோடின சுறவு மோதுசா
கரங்களி லோடின கடவு ளோர்கடம்

புரங்களி லோடின புழைக்கை தங்குமா
சிரங்களி லோடின சிலீமு கங்களே. கள௪

அறைதரு கழலொடு மடிக ளோர்திசை
மறைநெடு படையொடுங் கரங்க ளோர்திசை
சிறையளி மலரொடுஞ் சிரங்க ளோர்திசை
பிறைமுக நெடுங்கணை பிடுங்கி வீசுமால். கள௫

கூற்றுறழ் கனைதலைச் சாபங் கொண்டவா
சாற்றிடு பழுதில்வாய்ச் சாப மெண்ணில
யாற்றினை னொடுநொடி வரையிற் றுருநன்
போற்றுறு படைகளொன் றில்ல போக்கினன். கள௬

வரிசிலை யீர்த்தன வாள்க ளீர்த்தன
வெரிவிழி யவுணர்மெய் யீர்த்த தேரொடும்
பரிகளை யீர்த்தன பணைக ளீர்த்தன
கரிகளை யீர்த்தன கறைவெள் ளங்களே. கள௭

சாளிவா ளிகள்விடுங் காலை வீரமில்
சோளரா மவுணர்கள் குலைந்த நெஞ்சராய்த்
தோளுலாம் படைகளைத் துறந்திங் கன்னைநீ
யாளுவா யெமையென வறைகின் றார்சிலர். கள௮

குடையறக் காம்பினைக் குயிரி வன்கதைப
படையெனச் செறுவெனப் படிவிட் டார்சில
ரடிசனத் திருகுடை யதனை யிட்டியிக்
கடைமொழு வுழுமெனக் கைக்கொண் டார்சிலர். கள௯

பூங்கதிர் வாளினைப் போக்கி வாய்பரி
நீங்கியங் கதுபிடித்து நிற்கின் றார்சில
ராங்குறு புரவிவா யடுத்த புல்லினை
வாங்குபு தமதுவாய் வைக்கின் றார்சிலர். க௮௦

## எ.—தாருகன்வதைச்சருக்கம்.

வாங்கிய தனுவினுண் பூட்டும் வாளியுந்
தாங்கிய கரமொடுந் தரைப்பட் டார்சில
ரோங்கிய வயவரென் அுணர விக்கிய
வெங்குறு கழுமுறத் தெறிகின் ருர்சிலர். ௧௮௩

அழிந்தவர் தன்மையு மழிவு ருதுயி
ரொழிந்தவ ரிவ்வகை யுயங்குந் தன்மையுங்
கழிந்திடு புகழினுன் கண்டு நாட்கடை
யெழுந்திடு கனலினுஞ் சீற்ற மெய்தினுன். ௧௮௪

எயறிய வவுணர்கோ னிரத மிம்மென
மொய்திகழ் குமரிமுன் மூடுக வந்தன
னெய்தென மடங்கன்முன் னுண்மை யோடிகல்
செய்தொரு களிறெதிர் செய்கை போலவே. ௧௮௫

வந்தவள் பயங்கர வடிவங் கண்டனன்
சிந்தையின் வியந்திவ டெரிவை யாயினு
மெந்தம தமரினுக் கேற்று ளாளென
நந்திடு மறிவினு னவிறன் மேயினுன். ௧௮௬

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மாதுநீ யாரை வென்றி மதகரி யினையு மஞ்ச [னப்
போதுமாண் புலியை வெல்வான் முன்னிமா னடைந்த தென்
போதனு தியரை வென்ற வென்னொடு பொரநீ வந்த
தேதுகா ரணமு ரைத்தி யென்றன னறமி லாதான். ௧௮௭

அன்னசொற் குமரி கேளா வசனியே றென்ன நக்கு
நன்னரிற் பகைவ னுன நவையுறு மசுர கேண்மோ
நின்னுமக் கடவு ளர்க்குத் துயரநீ யிழைத்த லாலே
யென்னைநிற் கொல்வான் முக்க ணெம்பிரா னிவண்வி டுத்தான்.

வ பூத்தை யட்டுணைப் பிறும டங்கல்
றன்ன நின்னைப் புகுந்தொரு கணத்தி னுங்கி
வா னவர்க டுன்போ டொற்றுமென் பசியு நீங்குங்
லா லிவண்வந் துற்றேன் காளிகா னெனவு ரைத்தான்.

உரைத்தலு மவுணர் கோமா னொருகையோ டொருகை தாக்கிச்
சிரித்தெமை நுகர்வ னென்று தெரிவைநீ யுரைத்த மாற்றங்
கரத்தினில் விசும்பு பற்றிக் கவ்வுவ னென்ப தொக்குந்
தரித்தநின் வளவு முன்னைத் தையலென் றடாம லென்றான்.

என்றலு மிறைவி கேளா விழிதொழி லவுண வென்னை
வென்றியின் மார்தை யென்ன வினம்பினை யுலக மெல்லா
மொன்றொருகணத்தின் யாற்றியொடுக்குவதெமையாள் வெள்ளிக்
குன்றிறை சத்தி யன்றே குறித்திலை போலு மென்றாள். ௧௨௯

என்றவ ளுரைத்தல் கொள்ளா னிழுதைய தலினூற் சிரித்
தன்றணிவரிவில்லொன் றுதாங்கிநாணொலிக்கொண்டாத்தான்
மன்றிகழ் முகிலு டைந்து வீழ்ந்தன பணிபு ரண்ட
குன்றமு நிலனு மண்ட கூடமும் வெடித்த வம்மா. ௧௩௦

தார்மலி வயிரத் தோளான் றனுவினா ணெறியக் கண்டு
வார்முலை யிறைவி தானு மம்பினை வழங்கு முன்னங்
கார்முக மதிர்ப்ப தென்னக் கார்முக மதனை வாங்கிக்
கூர்முக வம்பு வீச நாணொலிக் கொண்டு நின்றாள். ௧௩௧

அம்மைவெஞ் சிலைநா ணோசை யவுணனா ணொலியி னோங்கி
இம்மென வெழுந்த தம்ம யாமளை யவனை நுங்க
வெம்மைகொண் டிருந்தா ளென்று லவளது வில்லி னார்ப்புக்
கொம்மையங் குவட்டுத் தோளான் குணவொலி விழுங்கிடாதோ.

பின்னரங் கவுணன் றானோர் பெருங்கணை சிலையிற் பூட்டித்
தன்னடி விரன்முன் பின்றோர் தாங்குறச் சானு வாங்கி

## எ.—தாருகன்வதைச்சருக்கம்.

முன்னுற முறவ ளைந்து நின்றுமொய் குதைநாண் கையைக்
கன்னம தளவு மீர்த்துக் காளிமேற் செல்ல வெய்தான். ககரு

விரைந்தட லிறைவி பூட்டி வில்லினோர் பகழி தூண்டிப்
பொருந்துறு மதனை மாற்றிப் பொருக்கெனப் பின்னு நூறு
சரந்தெற வெதிர்வி டுத்தா டாருகன் கண்டு மாறாக்
தெரிந்திடுங் கணைக ளாறு செலுத்தியங் கவைய றுத்தான்.

அறுத்தலு மிறைவி சீறி யாயிரஞ் சுடுச ரங்க
டெறித்தவன் கலின பான்றேர்ச் சித்தினள் பாக னோடுங்
கறுத்துமற் றொருதேர் வாவிக் கணைகளோர் பத்து நூறு
குறித்திட வந்து வாளி குமரிமே லுற்ற வன்றே. ககசு

வாளிக டாக்கி நொய்தி னழிந்திட வலவி நின்ற
காளியங் கதனைக் காணாக் கணைகளீ ரேழு சிந்தி
மூன்றுறு சினத்து வெய்யோன் பற்றுகார் முகந்து ணித்தா
ளாளியே றனையான் மற்றோ ரடற்சிலை யெடுத்துக் கொண்டான்.

அச்சிலை குனித்து வாளி யைம்பது சிதறிச் சூலி
கைச்சிலை துணித்து முப்பான் கணையெதிர் புகவி டுத்தா
னச்சிலை பகழி யெல்லா நாந்தக மொன்றா னூறி
முச்சகம் புகழு மம்மை மூரிவில் லொன்றெ டுத்தாள். ககஎ

எடுத்தவெஞ் சிலைகு னித்தங் கீருமீர்ம் பகழி நொய்தின்
விடுத்தன ளவுணன் மார்பின் விசிகமற் றவனு ரத்தி
னடுத்தன வடுத்த லோடு மன்னது விலக்க மற்றுந்
தொடுத்திரு சரங்க ளன்னோன் சுடர்முடி தள்ளி யார்த்தாள்.

பொறையறுந் தவமு மாட்சிப் பொருளறுங் கவியு மான்ற
மறையறு முணர்வுஞ் செய்ய மகவறும் வாழ்வு நீதி
யிறையறு முலகு மன்போ டியைபறு மறமும் போல
முறையறு மவுணர் கோமான் முடியிழந் தழகொ ழிந்தான்.

ாளத் தியவ ஞானுட் கொண்டான்
ருது துள்ளி மலர்க்கர மெறிநூது நக்கார்
ளர்நஞ் சன்ன தாருகன் கொதித்துச் செங்கை
வ் கடுக்கு மற்றோ ரணிமுடி முடிக வித்தான. ௨௦௦

பன்னரவ் வசுரன் மேருப் பிறங்கலோ சிலைவ ளைத்துத்
தூன்னுறு சோனை மாரி தோற்றிடப பகழி நூர்த்தா
னங்கிலே யமர ரெல்லா மஞ்சின ரிரியல் போனார்
பண்ணிரு சுடரு மீனு மறைந்தன விருண்ட வெங்கும். ௨௦௧

நதித்திரை யென்ன மேன்மே னஞ்சினுங் கொடியன் சாப
நுகித்தலைப் பகழி யீட்ட மூமிழ்ந்திட நொறில்ப ரித்தேர்க்
கதிர்த்தின மணிம றைப்பக் கழியிருள் புகலுங் கண்டம்
புதித்திரை யினர்க டாமற் புதத்தொடு மருட்சி கொண்டார்.

பொற்றட மரைகு விந்த பொலிந்தன குவளை புட்க
டெற்றுறு குடம்பை புக்க செய்தவர் திகைத்தா ரின்றுங்
கற்றையஞ் சடிலத் தெந்தை கண்களை யிமய மீன்ற [ன்று.
பொற்றொடிக் கரத்தெம் மன்னை புதைத்தனள் கொல்லோ வெ

அதுதனை யிறைவி காணு வசுரியே றட்க நக்குக்
க்துமென நெற்றி நாட்டக் கனலினூற் பகழி முற்றுஞ்
சிதைவுற வடலை செய்தாள் செழுமறைச் சிரத்தி னூடும்
புதுமதி மிலைந்த வண்ணல் புரம்பொடி படுத்த தேபோல். ௨௦௪

கூர்ங்கணைப் படலை மாயக் குலவுமூழ் விளங்கிற் றொல்லை
யீர்ங்கதிர் புனைந்த வண்ண லருளினூ லிரிய மூட
நீங்கரு மறிவி ருந்து நிகழ்வுறுந் தன்மை போல
வாங்கது விழியிற் கண்டா னறமென்ப தறிகி லாதான். ௨௦௫

அன்னது கண்ட வெய்ய னுயிரப் பத்து வாளி
தன்னிகர் குமரி யெண்டோ டாக்குற விடுத்தான் றூக்கப்

பன்னூனி விசிக நீறு பட்டன படலு மூழி
வன்னியிற் கனன்று கோடி வாளியங் கவன்மேற் றூர்த்தான்.

அத்திலைப பகழி தூண்டி யவனவை யறுதது வீழ்த்தா
னித்திற மிருவர் தாமு மொருவர்மீ தொருவ ரேயும்
வைத்தலைப பகழி யாற்றி மகிழ்ச்சியுந் துயருங் கொண்டு
மொய்த்துறு மமரர் நோக்க முதிர்சயர்த் தொழில்பு ரிந்தார்.

வானகத் தோடு மேரு வரைமுத லாகி நின்ற
மானகத் தோங்குந் துங்க மகரவே லைகளி னோடுங்
கானகத் தோடு மண்ட கடாகத்தி னோடு மானற்
போனகத் தோடு மன்னோர் பொழிந்திடு சுடுச ரங்கள். (௨0அ)

மாதிரத் தேகு நேமி வரையகத் தேகு மான்ற
பாதலத் தேகு முற்றும் பாழியங் கடலி னேகு
மீதலத் தேகு மண்ட முகட்டினி லேகு மீண்டும்
பூதலத் தேகு மன்னோர் போர்செயத் திரங்க ளன்றே. ௨0௯

இவ்வகை யமர்செய் கின்ற வேலையிவ் வரிவை தன்னை
வெவ்விய கடவு ளோர்தம் படைகளால் வெல்வ னென்னத்
தெவ்வடு குவவுத் தோளான் சிந்தனை செய்து கூர்ந்த
பவ்வமன் னவன்ற னாது படையெதிர் செல்ல வுய்த்தான். ௨க0

பொங்குவா ரிதிக ளேழும் புறப்பெருங் கடலு மொன்று
யிங்குவந் தெழுந்த தென்ன விருநிலம் விசும்பு மெல்லா
நங்கிவன் றிரையெ றிந்து நோன்மைகொண் டார்ந்து நண்ண
வங்கியின் படைசெ லுத்தி யழித்தன ளதனைச் சூலி. ௨கக

மற்றது தெரிந்து தீயன் வன்னிமாப் படைவி டுத்தான்
சுற்றுறு முகிலி ரிந்து சூலழிந் திறப்ப வாழி
வற்றுற வமரர் நைந்து மருண்டிட வெழுந்து பொங்கி
யுற்றிட வதனைக் காளி யொலிப்படை தந்த ழித்தாள். ௨கஉ

தீப்படை யழித்த லோடுஞ் சினமலி யவுணன் வாயு
மாப்படை விடுத்தா னெல்லா வரைகளுஞ் சுழல விண்ணின்
காப்பினை முறிய வீசிக் கலித்தெழு மதனை நாகப்
பூப்படை செலுத்தி மாற்றிப் புணரிபு முட்க வார்த்தாள். ௨௧௫

கொடியவ னதுகண் டுள்ளந் தழலெனக் கொதித்து நாகப்
படையினை விடுத்தா னன்ற பஃறலைப் படம்வி ரித்துக்
கடுவினை வாய்க டோறுங் கான்றது வருத லோடு
மிடலுறு கலுழ வென்றிப் படையினை விடுத்தொ ழித்தாள்.

சண்டக னதுமற் றேயக் கலுழவெம் படைதன் பாங்கர்
மண்டுறு சிறகர்க் காற்றா னிறுதிநாண் மருத்து முட்கக்
கொண்டலு மிரிய வோங்கு குன்றுகள் பொடிப்ப வங்கி
யொண்டிற லழிய வாயி னுரகமோ டடைந்த தன்றே. ௨௧௬

அர்தவான் படையி னாற்ற லம்மைகண் டாற்கொப பாய
நர்கிவான் படையெ டுத்து நறுமல ராதி கொண்டு
சிர்ச்சையால் வழிபட் டேத்தித் திகழ்படைக் கிறைநீ யன்றே
னூர்தமாண் படையின் வன்மை யொழித்தரு ளெனவி டுத்தாள்.

## மேற்படி வேறு.

விடுக்கவது விடையுருக்கொண் டிமிலண்ட முகடுரிஞ்ச வியன்ஞா லத்தை, யடிக்குரமொன் றெற்றுறக்கட் டழுறார்ப்ப வாயினீ ரதனைக் காட்டத், தொடைக்கிளர்கிண் கிணிக்களத்திற் றடவரவந் தாமருத்துச் சுடுதீ யண்ட, மடுக்குமணிப புழைநாசி விழிகாட்ட வுலகமெலா மயர்ந்து வீழ. ௨௧௭

வாலடியான் மேருகிரி முதலாய வரைபெயர்ந்து மறிந்து வீழ, மேலடன்மா மருப்பெறிய வுரியதிலா மையினிலங்கி மிசையிருப்ப, மாலொடுவா னவர்கரங்க ளுச்சிகுவித் திறைஞ்சினனி வாழ்த்த வெங்கள், பாலுடையா னெமையாளும் பதமுடையான் றிருநந்திப் படைபோ யிற்றால். ௨௧௮

நந்தியடற் படைகண்ட வுடன்கலுழப் படைநடுங்கி நஞ்சு காலுந், தந்தபணி யரவுதனைக் கண்டதென வழிந்ததுபின் றலை வ ணருகு, வெங்கதையிறை விடையவுணன் மேற்செல்ல வவனு மதை யெதிர்வி டுத்தான், வந்தனைசெய் தவைதம்மிற் பொருது விடுத் தவாகதுதா மறிந்து புக்க. உக௯

இந்திரன்மா மலரயன்மா லெனுமிவர்கள் படைகடமை யெடுத்துப் பின்ன, ருந்தினனங் கவுணனவை யவருருக்கொண் டதிர்ந்துகனி யுருத்தெழுந்து, வந்திடலு மவர்படைக டானுமெதிர செலவிடுத்து மாற்றி நின்றாள், கொந்தவிழு மலரிதழிச் சடாமகுடச் சிறைவிடுத்த குமரி மாதோ. உஉ௦

## மேற்படி வேறு.

இங்கினி யிவளை யெல்லா வுலகமு மிமைப்பின் மாற்றுஞ்
சங்கரன் படைவி டுத்துச் சாடுது மென்னத் தீயோ
னங்கதை யிலாரங்கெ டுத்தே யருச்சனை மனத்தி யற்றி
மங்கைதன் னுயிருகு டித்து வருதியென் றிறைஞ்சி யுய்த்தான்.

ஊழியங் கனலி யோர்சா ருருமொடு முகில்க ளோர்சா
ராழியங் கடல்க ளோர்சா ருலகடு மால மோர்சார்
சூழியங் கரிக ளோர்சா சுடுசாத தொகுதி யோர்சார்
பாழியம் புயத்து வென்றிப் பாரிடக் குழுக்க ளோர்சார். உஉஉ

கடவுளர் படைக ளோர்சார் காரிருட் படலை யோர்சார்
படவா வினங்க ளோர்சார் பாய்புலி யரிமா னோர்சா
ருடலுறு பவன மோர்சா ருடலுருத் திரர்க ளோர்சார்
மிடலுறு வடுக ரோர்சா ருக்கிர வீர ரோர்சார். உஉ௩

கான்றுவல் விரைந்து முக்கட் கடவுடன் படைமுன் வந்து
தோன்றலுங் குமரி கண்டு துணுக்கெனத் தானு மங்கன்
மூன்றெனும் புரமு ருக்கு முதல்வன்வெம் படையைப் பூசை
யான்றதன் மனத்தி னுற்றி யதற்கெதிர் செல்ல வுய்த்தாள்.

உய்த்திட வனைய தவ்வா றுருவுகள் பலவு மாகி
யத்தலை யவுணன் றூண்டு மடற்படை யுடன்சென் றேற்று
மெத்தமர் புரிந்த தம்மா வேலைக டணர்த்த வண்ட
பித்திகை பிளந்த தம்பொற் பிறங்கலும் வெடித்த வன்றே.

இருவர்தம் படையு மிவ்வா றேற்றமர் புரிந்து மீண்டு
மருவினை வவர்பால் வெய்யன் மனமகிழ்ந் தவட னீந்
துரவிய கதையொன் றெல்லை யோச்சின னதனைப் பார்சட்
பொருவுறு சாமீ ரைந்து போக்கின டுணித்து வீழ்த்தாள். ௨௨௬

பின்னரைம் பதிற்றி ரட்டிப் பிறைமுகக் கணைக டூவி
மன்னவன் றடந்தேர்ச் சாய்ப்ப மற்றொரு கிரிக் கிண்டேர்
தன்னிலொண் பணையி னூடு தாவும்வா னரம்போற் பாய்ந்தா
னன்னது மறித்தும் வீழ்த்தா ளடற்கணை நூறு போக்கி. ௨௨௭

மற்றது தெரிந்து தீயன மறுகுறு மனத்த னாகிப்
பற்றலர் புகழுங் காளி தேரினிற் பாய்ந்தி மைப்பி
னிற்றது புவிகொ லோங்கு மியங்கொ லென்னக் கையா
லெற்றியங் கவடன் மார்பி னிருநிலந் தனிற்குப் புற்றான்.

கண்டன ளதனைக் காளி கடையுகக் கனலிற் சீற்றங்
கொண்டினி யிவனை யின்னே கொல்வனென் றனந்தற் காண
மண்டலம் வெடிப்ப மன்னர் மன்னவ னுடன்குப புற்று
விண்டிட வுரத்தெ றிந்தாண் முத்தலை வேலொன் றம்மா. ௨௨௯

எறிந்திட வயர்ந்து நின்றான் மனச்சின வெரிபோந் தன்ன
நிறந்தரு குருதி யோங்கி நிலத்திழிந் தோடிற் றீசன்
மறந்தரு மவுணன் சோரி மண்புகா தேற்ற ருந்தென்
றறைந்தருண் மொழிய யர்த்தா ளடுத்தவெஞ் சினத்தாற் காளி.

மன்னவன் குருதி தோய்ந்த மண்ணினுண் டுகளனைத்து
மன்னவன் வடிவ மாய வவுணரா யால கால

மென்னவெங் கொடிய ராகி யிருபடைக் கலங்க ளோடுந்
துன்னுறு முகிலு மஞ்ச வார்த்தனர் தோன்றி னோரால். ௨௬௩

தோன்றிய வவுணத் தீயோர் தொகுத்தொரு பதிறைன் கென்ன
வான்றிடு முலக னைத்து நிறைந்தன ரனையோர்க் கண்டு
கான்றிடு முயிரப்ப டங்கிக் கைபபொருள் சோர்ந்து நந்தோர்
போன்றனர் புலனி றூர்ந்து புலவரென் றுரைக்கப் பட்டோர்.

சூலமு மழுவும் வாளுஞ் சுரிகையு மெழுவும் பிண்டி
பாலமுஞ் சரமும் வீசித் தாருகன் படிவங் கொண்டோ
ராலமு மனலு மன்ன வடற்பெருங் காளி தன்னைத்
தாலமும் விழுங்கு மாவஞ் சனிபபடை யொடும்வ ளைந்தார்.

மிண்டிய வசுரர் தங்க டோற்றமுஞ் சமர்க்கு மிக்கு
மண்டுறு செயலுங் கண்டு மாதொரு பாகன் சொல்லுட்
கொண்டுதன் படைய னைத்துங் கூவியவ் வசுரர் தம்மை
யுண்டிடு மென்று தாமு மவர்தமை யுண்ப தானாள். ௨௬௪

முத்தலை யதனா லன்னோர் மொய்ம்பினிற் குத்தி நெய்த்தோர்
கைத்தலத் திருந்த பாழிக் கபாலத்தி னேற்ற ருந்தி
மைத்தட வரைக ளன்ன வளரியாக் கைகளு முண்டா
ளுத்தரந் தனிலு மோங்கு முதரவங் கியினான் மிக்காள். ௨௬௫

விரிந்திடு வயிறெண் குண்ட மாயிடை மேவு மங்கி
யெரிந்திடு முதவ கன்று னெனவசு ரர்கடஞ் சோரி
சொரிந்தவ ருடனி ணங்க ளேர்த்தொரு வீர யாகம்
புரிந்தன ளுலக மெல்லாம் புகழ்தரு குமரி யன்றே. ௨௬௬

மூர்த்தியோன் றதனி லாண்டு மொய்த்தயோ கினிக ளோடு
மார்த்துவந் தெதிர்த்த தீய வவுணரை யெல்லா முண்டாள்
சீர்த்தியங் குமரி பின்னர்த் தாருகன் றெரிந்து சீறிப்
பார்த்தனன் றனியாய் நெஞ்சம் பதைத்தவட் புடைப்ப வந்தான்.

வந்திட விலைவெஞ் சூல மார்பினின் மீண்டு யோச்சிச்
சிந்திடு குருதி யங்கைச செழுங்கபா லத்தேற் றண்ணு
விந்தமண் மகடன பார மிறக்கின னென்ன வங்ஙன
வெங்தொழி லவுணன் மாள யாக்கையும் விழுங்கி னளால்.

யற்றது கண்டு விண்ணோர் வலியதா ருகனை யன்னை
செற்றன ளுங்கி யிங்ஙன் றேவரென் றுரைக்கு நம்மைப்
பெற்றன ளின்றென் றூர்வப் பெருங்கடற் படிந்து நெஞ்ச
முற்றவெந் துயர கன்று பாடினு ரோடி னூரால். உ௩௯

வேலையூ டெழுந்த நஞ்சம் விமலனுண் டளித்த செய்கை
போலங் யய்யா வின்று பொருவிரு ருகனை யுண்டு
பாலரா மெமைய ளித்தா யென்றனா பழிச்சி வானோ
சூலிமீ திடைவி டாமற் சொரிந்தனர் பூவின் மாரி. உ௪௦

ஆயிடை யுளம கிழ்ந்தே யவுணர்கண் மலைப்ப மாய்ந்து
போயின வனிக முற்றும் பொருகவென வுயிரபெற் றுய்ய
நாயகி குமரி நின்று நவின்றன ணவின்ற காலை
மேயின துயிலொ ழிந்து விழித்தென வெழுந்து சூழ்ந்தார.

கலிவிருத்தம்.

அன்னது காலையி லவுணர் சோரியுந்
துன்னிய வுடல்களுந் துய்த்த தன்மையான்
மன்னிய குமரிதன் மதிம யங்கியே
தன்னிக ரிலையெனத் தருக்கி னளரோ. உ௪௨

தருக்கிய வுளத்தினு டாங்கி நல்லியாழ்
திருக்கர விரலினுற் றெறித்துப் பாடியே
முருக்கிய புயங்களு முடியுந் தாள்களுங்
கரக்குவை களுஞ்செறி களத்தி னுடினுள். உ௪௩

நடித்திட வெள்ளது நாடிப் பெண்கடாம்
வெடித்திட நிலமுடு வீழ வாவிக
டொடித்திட வியயமூர்த் துளங்கக் கைகளா
யடித்தன ரதிர்த்தன ராடன் மேயினார். ௨௪௪

கொட்டுபு கரங்களைக் குலால னேமிபோல்
வட்டணை விரலினில் வருகின் றார்சிலர்
கிட்டிய வலகைகள் கீதம் பாடியே
நட்டம திடவுட னடிக்கின் றார்சிலர். ௨௪௫

தண்ணுமை சனையடிச் சதிக்கு கைசெய்தொலி
நண்ணுற முழக்குபு நடிக்கின் றார்சில
ரண்ணலந் தயித்திய ராக்கைக் குன்றின்மேற்
றுண்ணென விவர்ந்தனர் துவைக்கின் றார்சிலர் ௨௪௬

மாகர் தெறியுமம் மனைகள் பற்பல
வாகவீழ் தலையெடுத் தாடு வார்சிலர்
வாகுவால் விலாவுறத் தாக்கி மெய்வளை
தோகையா னடநவின் றுழல்வ ரோர்சிலர். ௨௪௭

மெலிவுறு மடிகள்வாய் விழிபு ரோமங்
குலிவிகா ரப்படக் குனிக்கின் றார்சிலர்
வலியவெண் கவடிக ணிரைத்து வைத்தபோ
னலியெயி றிலகுற நகைக்கின் றார்சிலர். ௨௪௮

முத்தலை வேலினன் முடைப்பி ணங்களைக்
குத்துபு தாங்கியே குனிக்கின் றார்சிலர்
மத்தக மெனக்குடர் மாலை தோளிடா
வத்திக ளெனவதிர்த் தாடு வார்சிலர். ௨௪௯

இனையன பலவிதத் தெண்ணில் யோகினி
வனிதையர் குருதிநீர் வாய்ம டுத்திடு

களிவரு களிப்பினான் மத்த நாகமே
யனையவெங் குமரியோ டாடி னாரோ. ௨௫௦

ஆடுறு மரவமு மவர்மு பூக்கமுங்
கூடுறு மங்கைகள் கொட்டு மோசையு
நீடுறு மூலமெலா நீங்க வந்தெழா
ஏடுறு முகிழ்தண முழுக்கை வென்றவே. ௨௫௧

போழ்ந்தன புவியெலாம் பொடித்த வெற்பெலாம்
வீழ்ந்தன முகிலெலா மெலிந்து மாசையி
றாழ்ந்தன வுயிரெலா மலைந்த வான்கடா
சூழ்ந்தன வுலகெலாந் துயர மேலையே. ௨௫௨

துப்புறு குமரிக டொகுதி யாடுறச்
செப்பரும் புகழுடைச் சேடன பாரினை
யப்பரம் பொறுக்கிலா தாயி ரங்கமுங்
கொப்புளங் கொளவுளங் குலைந்து தாங்கினான். ௨௫௩

மாதவ னயன்மகத் தரசன் வானவர்
பூதறி வுடையமா முனிவர் யாவரும்
பேதுற வந்திளம் பிறைமு டித்தவெம்
மாதியோ டபயமென் றறைதன் மேயினார். ௨௫௪

எந்தையே தாருக னிழைத்த வெந்துயர்
வந்தமா சாபியெங் கட்கு யாற்றியே
யந்தவான் றயரினு மதிக மாக்கினான்
முந்துகான் முட்டமீ தூ முனைய டித்தல்போல். ௨௫௫

தாருக னால்வருந் துயரந் தன்னைநின்
போரு ளாலொரு பெண்ணி னீக்கினை
யாருறு செருக்கினா லவள்செய் துன்பமு
நீருறு சடையினாய் நீக்கி யாட்கொணீ. ௨௫௬

நஞ்சினை யருந்தியுங் களனைலை யேந்தியு
மஞ்சிட மதகரி யட்டு மேழையே
புஞ்சிட வருளிய வொருவ காளிதன்
விஞ்சிய செருக்கையும் வீட்டி யாளுவாய். உருஎ

என்றிவ ரனைவரு மியம்பிக் கைதொழா
நின்றிட வெங்கணு நிறைந்த வெம்பிரான்
வென்றியங் குமரிதன் மிகுஞ்செ ருக்கினை
யொன்றொரு சாழலா லொழிக்க வுன்னினேன். உருஅ

## கலிநிலைத்துறை.

உன்னு நாயக னுலகெலா மீன்றவ ளோடுந்
துன்னு வானகணஞ் சூழ்தரச் சூரா மகளி
ரன்னை யாடிடப் வடவன மாகவா யிடையின்
மன்னு பேரருட் டன்மையா லிமைப்பினில் வந்தான்.

வந்து காளிமுன் பேருருக் கொண்டுமா மறையு
மந்த நாரணக் கடவுளு மறிவதற் கரிய
சொந்து லாமலர்த் திருவடி சிவந்திடக் குனித்தான்
றந்தை யாகியெவ் வுயிரையு மளித்தரு டலைவன். உசுO

கோதுக் காகர மாகியே செருக்குறுங் குமரி
மாதுக் கோர்புற மளித்தவன் செயல்கண்டு வணங்கி
யேதுக் காடுகின் றுய்வறி தென்றெடு மீண்டு
வாதுக் காடுதி வருதியென் றுரைத்தனண் மயங்கி. உசுக

என்ற வாசகங் கேட்டலு மடியவர்க் கெளிய
னன்று காளிநீ தருக்கதாண் டவஞ்செய நவின்றாய்
வென்றி தோல்விகண் டுரைத்திடச் சான்றுநம் விமலை
நின்று தாண்டவம் புரிதியென் றுடின னிமலன். உசுஉ

கற்றை வேணியிற் செருகிய கதிரிளம் பிறையைச்
சுற்றி வால்கொடு கட்செவி நான்றிடச் சுருப்ப
பற்ற தாகிய பதயலர்ச் சிலம்பொலி பரப்ப
பொற்ற யாடக நாயகன் றிருநடம் புரிந்தான். ௨௬௩

படியும் வானமு நடுங்கிடப் பரவைக ளடங்கக்
கொடிய யோகினிக் குழூவெலாம் பாணிகள் கொட்ட
நடந வின்றிட மயன்மிகு யாயனை நடித்தா
னடியர் வேண்டிய வேண்டியாங் களிப்பவ னுடனால்.

திருந்து தென்றிரு வாலங்காட் டருந்தவஞ் செய்யா
விருந்த முஞ்சிக னோடுகார்க் கோடக னென்னப
பரந்த சீர்த்திமா நாகமுஞ் செஞ்சடைப் பகவன்
புரிந்த நாடகங் கண்டருங் கதியிடைப் புகுந்த. ௨௬௫

வேத நாரணன் விண்ணவர் முனிவரர் விமலன்
போத நாடகங் காண்டலு மெய்ம்மயிர் பொடிப்ப
வோதும் வாசகந் தளர்ந்துள நெக்குநெக் குருகிக்
காத லாலரா கரவெனக் கூப்பினர் கரங்கள். ௨௬௬

அண்டர் நாயகன் றிருநடம் புரிவயி னடுத்துப்
பண்டை நான்மறை யுருவுகொண் டன்பொடு பாடக்
கண்டு நான்முகன் றாளமொத் தினைது காலை
மண்டு மாபுக ழருணந்தி மத்தள மதிர்த்தான். ௨௬௭

எங்க ணாயக னுலகெலா மாடல்கண் டிருக்கு
மங்கை நாயக னடனமிவ் வாறுசெய் தருள
வங்கு வாதுசெய் துடன்சுழன் றாடுவா ளெய்த்தாள்
பொங்கு மானமுற் றிடுதலாற் பினுடம் புரிந்தாள். ௨௬௮

கலிவிருத்தம்.

கொந்து ளாடனை நோக்குபு வாதினன்
வந்த நாடக மாற்றவ ருள்கொளா

வந்த வேலையி னண்டமுங் கீற
வெந்தை தாமொன றெடுத்தன னென்புவே. ௨௬௯

தொண்ட ராகுலந் தீர்க்குந் தொழிலினா
னண்ட கூட மளவு மெடுத்ததா
னுண்ட சால முமிழ்கெடு மான்முனங்
கொண்ட பேருருக் கொள்கை நிகர்க்குமால். ௨௭௦

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மண்ணிடை யொருதா ளூன்றி மற்றொரு கமலப பொற்றாள்
விண்ணிடை யெடுத்து மேலோ னடியபது வீரி கண்டு
துண்ணென நாணுட் கொண்டு சுடுங்கனற் பட்ட வென்பூ
வண்ணம தெனபபு லர்ந்து வதனம்வன் றலைகு னித்தாள். ௨௭௧

நாணினை முகங்க விழ்ந்து நண்ணிய செருக்கு நீங்கி
யேனுலாங் குமரி நிற்ப வெண்ணில்யோ கினிக ளெல்லாங்
காணுற நடமொ ழிந்து சூத்திரங் கழல நிற்கு
மாணுலாம் பாவை போல வறிதுநின் றனர்க ளன்றே. ௨௭௨

ஆங்கது கண்டு விண்ணோ ருவகைபூத் தமலன் மீது
தூங்குறு மழையின் மும்மை சொரிந்தனர் பூவின் மாரி
பாங்கரின் வந்து வீழ்ந்து பணிந்தன ரெழுந்து துள்ளி
வாங்குதெண் டிரைக்க டற்கெண் மடங்கொலி யெழுத்து ௨௭௩

ஆயகா லையினிற் காளி யஞ்சியா ரணங்க டாமு
மாயனு திபருங் காணு நின்றனை மதித்தி டாமற்
பேயனேன் செய்த தீமை பொறுத்தருள் பெரும வென்று
தூயமா ஞானா னந்த சோதியைத் தொழுது நின்றாள். ௨௭௪

நின்றவ டன்னை நோக்கி நீயுளம் வெருவ லென்றே
தன்றிரு வருள்பு ரிந்து சண்டதாண் டவமி தம்ம
வுன்றனக் கிதனை நோக்க லரிதென வுரைத்துத் தன்று
ளென்றலை பொறித்த முக்க ணெம்பிரா னியம்பு கின்றான்.

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திகழ்வுறு மிந்த வடவனந் தனக்குத் தென்றிசை யாகவோர்
நகரம், புகழ்வுறுங் கூவ புரமென வுளதப் புரிகயி லையங்கிரி
தன்னி, னிகழ்வுறு பெருமை பெற்றது நமைப்போ னிகரிலா
வதனிடை யென்று, மகிழ்வொடு முலக மனைத்தையும் புரப்
பான் மதித்திரக் காநடம் புரிதும். உஎசு

அப்பெருங் கூவ புரத்திடை யேகி யருள்புரி நர்திரு நடனஞ்,
செப்பருங் காத லாற்றினங் கண்டு திகழுமந் நகருளா ரெல்லா,
மொப்பரு நமது நந்தியங் கணத்தி னுள்ளவ ரென்றுநீ கருதி,
வெப்பது முதலாம் பிணிமிடி பேய்கள் விலங்கினுன் வருந்துயர்
களைவாய். உஎஎ

என்றிவை யிசைத்து நம்மொடு தருக்க மியம்பிநீ நடநவின்
றதனு, லுன்றனக் கொருபேர் தருக்கமா தாவென் றோங்குக
வினையது மன்றித், தென்றிருக் கூவ நகர்தனைக் காத்துச் செறி
ந்திடு பீடைக ளரிப்ப, வென்றிகொள் பெயர்பீ டாரியென் றுல
கின் விளங்குக வென்றனன் விமலன். உஎஅ

அன்னசொற் குமரி கேட்டுள மகிழ்வுற் றன்பினுன் மும்மு
றை வணங்கி, நின்னரு ளதனு லடியனேன் றீமை நீத்தெனை
யாண்டவா ரமுதே, பன்னருங் கூவ புரத்திடைச் சென்றுன்
பவுரிகண் டந்நகர் காப்பே, னென்னவங் கியம்பி விமலனை
விடைகொண் டெய்தினள் கூவமா நகரின். உஎகூ

எய்திய குமரி கூவமா நகரை யிறைஞ்சியா லயத்தினுட் போ
கிச், செய்தவ முடையோர் விழியினி னொளிதிற் றெரியும்விற்
கோலநா யகனைக், கைதொழு தகலா வன்பினுற் பணிந்து களி
ப்பொடும் போந்தடி யவர்க்கு, மெய்தரு மருள்சேர் வளர்சடைக்
கூத்தன் விளங்கரு நாடகங் கண்டாள். உஅ௦

கண்டலு மனவிற் படுமெழு கெனவே கரைந்துள முருகிவாள் விழிநீர், கொண்டல்கண் மலைமேற் சொரிவது கடுப்பக் குவிமுலை மீதுவீழ்ந் தொழுக, மண்டல மதனி லைந்துறப் பணைய வணங்கியங் கெழுந்தனள் போற்றி, விண்டிட வரிய மெய்ப்பரா னந்த வெள்ளத்திற் றிளைத்தன ளன்றே. ௨௮௧

இத்திற மமல னருணடங் காணு மின்பமுற் றிடுபெருங்குலி, கைத்தல மமர்ந்த மழுவினோ டுலங் காட்டினி லருளிய முறையே, மெய்த்தவர் புகழுங் கூவமா புரத்து விருப்பொடு மிருந்தொரு தயரு, மத்திரு நகரிற் குழுவகை யென்று பன்னைபோற் சாதிருக் கின்றாள். ௨௮௨

## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இனையதிருக் கூவபுரப் பெருமையினை யிவ்வளவென் றியம்ப வல்லோ, ரனையநகர் தனையிடங்கொண் டருடிருவிற் கோலநா யகரே யல்லாற், பினையொருவ ருரைத்திடுதற் கெளியதுவோ வியாதனெனப் பெயர்பெற் றுள்ள, முனிவனருள் கொண்டுசிறி ததன்பெருமை தமியேனு மொழியப் பெற்றேன். ௨௮௩

அண்ணலருந் தவமுனிவீர் முத்திதரு சிவஞான மணிக்க வல்ல, கண்ணுதலான் றலங்கடம்பி லனந்தகோ டியினினொரு தலத்தை யுன்னித், தண்ணெனவிங் குரைத்திடெனப் புகனறவீ ராதலினாற் சுரர்கள் போற்று, மெண்ணரிய புகழ்க்கூவ மாநகரைக் குருவருளா லியம்பி னேனால். ௨௮௪

இக்காதை தனையொருக்காற் புகன்றருள வினவினவ ரிடைசகூர் வண்டு, புக்காரு ளினமலர்ப் புங்கவனு குவரிருக்காற் புகலிற் கேட்பின், மைக்காரி னிகர்நிறத்த கயலவிழிப் புவியளந்த மாய னவர், முக்காலவ் வகைபுரியி னெனையாளுங் கயிலைமலை முதல்வ னவார். ௨௮௫

பழுதிறிருக் கூவபுரா ணத்தினையோ திடுபவர்க்கும் பயன்
கேட் போர்க்குங், கழுதுபல விலங்குநவக் கிரகாதி யாலனையுங்
கடிய வின்னன், முழுதுமிலை யவமாணக் துற்கனவு மிடிபிணி
கண் முற்று மின்று, மெழுதுபவர் வினையனைத்து நமன்கணக்
கர் தமரேட்டி னெழுதி டாரே. உஅசு

இக்கதையை யன்பினொடு படிப்பவர்க ளரும்பயன்கேட் டிடு
வோர் மென்மை, மக்கடமை புரோகிதுவ ரெனவென்ன மொழி
யாத வாழ்வு சேர்வர், மிககபெருஞ் சித்திகளோ ரிருநான்கு
மடைவாமனம் விழைந்த வெல்லா, மககணமே பெறகுவரீ ரே
முலகு தனினுமவாக கரிய தின்றே. உஅஎ

நீங்கிறிருச் சினகரமே தவர்மடமே யறச்சிறம்பாத திகழ்ம
மில்லை, யோங்குமலைக் கடமேநன் னதிககரையே யெறுமிவற
று ளொன்றின் மிசை, பூங்கடிமண் டபமியற்றி யதிலிருந்து
திருக்கூவப் புராணந் தன்னைத, தேங்கமழு மலர்புகையொண்
சுடரொடுபூ சனையியக்கள் சிலம்பச் செய்தே. உஅஅ

ஒதிடுக வோதிடுமாட் டொடங்கிநால் வகையுண்டி யோடு
மன்ன, மாதவருக் கிடுகமுடி வுறுநாளிற் படித்தவர்கண் மலரப்
பொற் றுளி, ஞதாவு கொடுபாம சிவனெனவே வந்தனைசெய்
தறவை யோடு, திரிலணி விளங்கிலம்பாற் பசுவிவைக ளளித
திடுக சிறக்கப பின்னர். உஅகூ

பொய்யின்மறை புகழ்திருவிற் கோலநா யகர்ப்புகழும் புராண
மோடு, துய்யமன னுடன்படித்துப் பொருள்விரிக்கும் பெரி
யோனைத் தொழுது போற்றி, வையமுத லூர்திகளி னிருத்தி
மிகு பல்லியம்வான் மழையி னார்ப்பச், செய்யநக ரலங்கரித்து
வலம்வருவித் திடல்வேண்டுந் திகழு மன்பால். உகூ0

இந்தவகை புரிந்திடுவோர் பாவகோ டிகளகற்றி யிம்பர் தன்
னிற், புந்திவிழை பொருளனைத்து மீந்துதிரு விற்கோலப்
புனித மூர்த்தி, கந்தமல ரயன்முதலாங் கடவுளர்க்கு மரியபா
கதியு நண்ணைத், தந்தருள்வ னெனவுரைத்தான் சூதமா முனிவ
னெனுந் தவத்தர் கோமான். ௨௯௧

சூதமுனி யுரைத்தமொழி நைமிசமா வனத்துறையுந் தூய
நெஞ்ச, மாதவர்க ளனைவருங்கேட் டெந்தனையோன் றனைவழுத்
தி வந்து கூவப், போதசகர் தனினரிய விற்கோல நாயகனைப
போற்றி மேவி, மூதறிவு வந்ததனுன் மூலவிரு ளகன்றபா
முத்தி சேர்ந்தார். ௨௯௨

கலிவிருத்தம்.

நீதி லாவிறை செங்கோல் வழங்குக
வேத வாகம மெய்ந்நெறி யோங்குக
போத ஞானிய புண்ணியர் மல்குக
வோது மூவர்தம் மொண்டமிழ் வாழ்கவே. ௨௯௩

தாருகன்வதைச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௭௦௩.

திருக்கூவப்புராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் சேவடி வாழ்க.

உ

# பிழை திருத்தம்.

பிழைகளைத் திருத்திக்கொண்டே படித்தல் நலம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௭௧ | ௩௮ | ௨ | னரியாவா | னரியவா |
| ௭௪ | ௧௫ | ௧ | கெல்லாம் | கெலாம் |
| ௧௦௫ | ௨௧௧ | ௩ | டார்ந்து | டார்த்து |

உ

கணபதி துணை.

# திருக்கூவப்புராணக் குறிப்புரை.

## கடவுள் வாழ்த்து.

௧.—விநாயகக்கடவுள் தம்மடியவரை இவ்வுலக வளத்திலும் அந்த விண்வளத்திலும் உறுவிக்கவே, அவரால் நிவேதிக்கும் கவளத்தில் விருப்பங்கொண்டேற்றருளுவரென்க; கு-பூமி. கவளம்-யானைக்கிடுமுணவு. அந்தம் படிவம் பவளத்து நிகர்த்து என மாறுக.

௨. இறுத்தல் - தங்கல். வாய்மிச்சில்-தம்பலம். துத்தல்-புசித்தல். விரகு-அறிவு. அச்சிறுத்த வடிகள்-அச்சிறுத்த விநாயகர், இவர் ஸ்தலவிநாயகர்.

௩. நம் காமத்தழல் அவிப்ப நீர்கொண்டார்; தாம் ஆணும் பெண்ணுமா யிருப்பதைக்காட்ட, மழு மானை வலமும் இடமுமாகக் கொண்டாரென்க.

௪. பொற் சுட்டியின்கீழ் திலகந்திற்றப் பெற்றிருப்பது அரவம் மதியைக் கவர்கின்ற பரிசுபோல்வது.

௫. அம்பிகை நுதல் பிறைபோல்வதால், அத்துணைகொண்டு முடிப்பிறை அராப்பகையையும், அரவு நிதம்பத்துணைகொண்டு கைம்மான் பகையையும், மான் விழித்துணைகொண்டு வியாக்கிர பாதராகிய புலிப்பகையையும் நீத்திருப்ப. பாம்பை மான் உண்ணும் என்னும் வழக்குணர்க.

௬. வன்னி-அனல், கிளி; பணிபயிலவருவார்-தொண்டுபுரிய எய்துமவர், சித்திர மமையப்பெற்றகச்சு; சுவர்க்கம்-தேவலோகம், தனம்; பன்னு நுதல் மதி யடியார் பரிபுரங் கொண்டு - துதிக்குங் கருத்தமைர்த அறிவுடைத் தொண்டர் பரித்த வுடலை ஆலயமாகக் கொண்டு, வியக்கும் மதிபோலும் நெற்றியையும் அடியிலொர்க்க சிலம்பையுங்கொண்டு; இதழி - கொன்றை, இதழினையுடையவாய்; பொன்னறுகு மலரவைசேர்ந்து இசைகொளரி மறையோதி புரிந்துதாழ - இலக்குமி வதியும் தாமரைத்தொகுதியை உறுபபாகக்கொண்டு புகழ்பெற்ற திருமாலும் மறையோதும் பிரமதேவரும் விரும்பிவணங்க,

மலர்ந்தகனகசபையிலமர்ந்து நசைபாடும் வண்டுகள் மறைந்துள்ள கூந்தல் சுருண்டுதாழ; எனச்சிலேடைப் பொருளாக்கிச் சிவபெருமானுக்கும் அம்பிகையாருக்குங் கொள்க. முதலடிக்கு, வல்லேங்கர்க்கும் அழகுமுதிர ஆபரணஞ்செறிய வளரும் தலத்துக்கு வார் அளித்தென மாற்றிக் கோடலுமொன்று.

௫. சடைப்பிறை வல்லபையின் நெற்றியை நிகர்த்தது, இப்போது முகத்தை நிகர்ப்பச் செய்வோமென்று தமது கோட்டைப் பிறையோடுசேர்த்து முழுமதியாக்கி நேயம் வைத்த விநாயகர் என்க.

௬. பாகன் - பக்கத்தன், செலுத்துவோன். வேங்கை-பெரும்புலி, வேங்கைமரம். சொற்போக்காற்றென்றும் நயப்பொருள்களை உய்த்துணர்க.

௭. உமைநெஞ்சாய் வாணிவடிவும் நிகர்த்த வெள்ளிச்சிலம்பு.

௮. கண்களிற் கேட்குமவன் - கண்களே காதாகவுடைய பாம்பு, (திருவாலங்காட்டில்புகலடைந்த கார்க்கோடகனென்னும் பாம்பு.) கைகொடுஉயிர்ப்பவன் - விநாயகர்; (கையே மோக்கும் உறுப்பென்பது).

௯. பங்கயாதனன் வெள்கல் - பிரமன் தான்படைத்த திலோத்தமையை மனைவியாகக்கொள்ள மயங்கின நாணத்தைக் குறித்தபடி.

௧௦. இருள் - அவித்தை.

௧௧. கன்று காமங் கழன்றிலர் தம்முரு வென்றும் ஓர்வரிதென்றிருப்போன் - சிவபெருமான்.

௧௨. மாணிக்கவாசகரென்னும் தமது நாமத்தை வந்திப்பார்க்குக் கொடுத்தலோடு தாமுந்தரித்த அன்பர் என்க. கொடை-மாணிக்கம்போலும் வாசகத்தை அன்பரடையக் கொடுத்தல்.

௧௩. அழிவின்றாகும் - அழிவு இல்லையாகும். இது "நல்லோர் பிறர்குற்றம் நாடார் நலந்தெரிந்து—கல்லார் பிறர்குற்றங் காண்பரோ—அல்லாத, என்போல்வாரென்னை யிகழ்வரோ வென்கவிக்குப்—பின்பாரோ காண்பார் பிழை." என்ற ஒளவையார் பாடலை ஒப்பது.

௧௪. கடற்புகழ் - கடலளவுபுகழ். கூவம் - ஊர்ப்பெயர், கிணறு.

### ௧. நைமிசம்.

௧. அம்பு - நீர். ஒலி - காற்று.

௩. வந்தது-எதிர்நேர்ந்தது, காற்று. போகி - பாம்பு. பொறிப்பணம் - புள்ளிகளையுடைய படம், இந்திரியங்களாகிற பாம்பு. பாம்புகளுக்கும் யோகிகளுக்கும் சிலேடை.

௪. அங்கதம் - பாம்பு. கோம்பி - பச்சோந்தி. நவ்வி - மான், நவியென்றாயிற்று. ஒன்றாக சொன்று பகை என்பது காட்டும்.

௫. சோதிமாம் அழல்தப்பம். அகி - பாம்பு. சிவணல் - ஒத்தல்.

௬. தருணம் - புதுமை. சாதித்தல்-வெல்லல்.

௭. அசோகம்-சோகமின்மை.பிண்டி- அசோகு. மெய்பெறல் -சோகஞ் சொய்யாமை என்பதை மெய்யாக்கல், (இதஞ் செய்தல்) வாரம்-மேன்மை.

௮ கிகிரிமரம் காம்பெனும் பெயரினைப் புதுக்கும். கிகிரி, காம்பு மூங்கில்.

௯. தாழை அனைந் துறுகின்றன புட்டனை ஒக்கும்.

௧0. மாவினருகுறும் புன்னை ; எழுவாய்.

௧௨. பாதவம் பூ உகுத்தல், மலர் மாரியின் மேவும்.

௧௩. எகம்-சூலம்.

௧௪. நந்தல்-குறைதல், வளர்தல்.

௧௫. இகம் நூறந்நூ.

௧௬. வலையம் அமர் வேய்-வலயங்களுடைய மூங்கில்.

௧௭. உன்னில் வல்ல தவம்; வல்ல-செய்யக்கூடிய. அற்றம் - சோர்வு.

௧௮. மண்டிதர் - அலங்கார முடையவர்.

௧௯. பயந்த-பயனையுடைய.முக்குற்றம் - ஆணவ மாயை கன்மம்.

௨0. தம் செய்கையை ஓர் திரணம் இயற்றச் செய்விப்பர்.

௨௧. காதரவு-துன்பம். பூதரம்-மலை. (பூமியைத்தாங்குவது.)

௨௩. உசாவல்-விறைவல். முதுக்குறைவு-பேரறிவு.

௨௪. தெரியின்-ஆராயின். உவ்வுடல்-அவ்வுடல்

௨௫. அனலம்-அக்கினி

௨௬. ஐம்பூதம்-மண்முதி. அன்று - பகை. அடல் - வெற்றி.

௨௭. பேருருக்கொள்ளல்-கரிமாசித்தி ; அணுவெனக்குறுகல் - லகிமாசித்தி. விண்மிசை செல்லல் - பிராகாமியசித்தி. விரிவிலாதுறல் - ஈசத்துவ சித்தி.

௨௮. தணிதல்-தங்கல்.

௨௯. வழக்கம் ஆம் - நன்னடை ஆகும்.

௩0. இருமை-இம்மை மறுமை.

௩௧. பூதன்-சுத்தன்.

௩௩. அனகம்-பாபமின்மை. தானம்-தக்கார்க்கு நீரோடுதரும் பொருள்.

௩௪. தானி - தானஞ்செய்வோன். தரிபலர்-பகைஞர்.

௩௫. தாக்கல்-ஆராயல். அளிப்போனுக்கு பதம் மனையென ஆக்குற, அயன் மால் இமையவர் (தங்கருள்) மலைவார்.

௩௬. இல் - நன்மை, வீடு. மிருத்த ஆவி - எஞ்சிநின்றஉயிர்.

௩௭. கவிர்-முண்முருக்கு. சவி-அழகு, ஒளி.

௩௮ வாய்மை உறின், செய்தலிற்றலையாய், பதம்பெறும்படி, உயர்த்திடும். செய்தலின் - செய்தலைக்காட்டினும்.

௩௯. ஒலி - காற்று.

௪௦. இன்னல் - துன்பு.

௪௨. எழிலி - மேகம்.

௪௩. நிரயம் - நரகம்.

௪௫. எய்த்தல் - சோரல்

௪௬. ஏர் ஒன்று துருவாசன்.

௪௭. பிறவினும் - மற்றையவற்றினும்.

௪௮. வேட்டல் - விரும்பல். வெறுக்கை - பொன்.

௪௯. கனல் குறுகில் சுடும், மற்றையவற்றை நிரனிறை யாக்க.

௫௦. மேதகு - மேன்மை.

௫௧. வீற்றுவீற்று - தனித்தனி; வீறு - தனிமை. தெரியும் - ஆராயும். துனி இற - துன்பகல.

௫௨. வண் தவர் கண்டனர்.

௫௩. பொருக்கெனல் - விரைவுக்குறிப்பு. இருக்க என.

௫௪. அடிசில், மூரல் - உணவு.

௫௫. வல்ல- அறிந்த. யாவரும் - முனிவர் யாவரும். கல்வியும்செல்வமும் பெற்றனஆம்.

௫௬. வாதராயணர் - வியாஸர்.

௫௭. கன்றல் - இரங்கல்.

௫௮. விஞ்ஞை - வித்தை. கருமஞானங்கள்சொல்நூல் - கருமகாண்டம் ஞானகாண்டமெனப் பிரிவுபட்ட மீமாஞ்சை.

௫௯. செல் நிகர்ப்பவர் - மேகம்போலும் விஷ்ணு. கனலி என்பேர்ச் சுடர்கள் - அக்னி சூரியன் என்பவர்.

௬௨. சச்சிதானந்தம் - உண்மை அறிவு ஆனந்தம். என்ப-என்றுசொல்வர்.

௬௩. அறமுடிப்பவரைத்துரந்தவர் - அறமியற்றுவோரை ஓட்டும் பாவிகள். பாவத்துறைமுடிப்போர் - பாவகாரியங்களை இயற்றுவோர். நீற்று - கெடுத்து.

௬௪. மலம் வலியுக. புலி போற்ற. பாம்பின்-இன் எழனுருபு. உகள் - தாவுகின்ற.

கூரு. ஓதி - ஞானம்.

கூகூ. உவர் - ரண்டுச்சிவம்.

கூஎ. நந்தினும் - அழியினும். சேர்த்து-சிறப்பினையுடையது.

கூஅ. கேழ் - நிறம்.

கூகூ. கூபரம் - என்னும் வடமொழி கூவரம் எனத் தற்பவமாயிற்று.

எ0. பல்நறலையரவம் - பலதலைகளுடையசேடன்.

---

## உ. திருந்தலம்.

க. முத்தனே - ஆணவம் மாயை கன்மமென்னும் பந்தம். பறிதல்-நீங்கல். சோதண்டமண்டிதர் - விற்கோலநாதர்.

உ. சாடி-நீர்ச்ஜாடி. நீத்தம்-நீர்ப்பெருக்கு. வான்மகள் போர்த்ததாமெனப் புயல்பரந்த.

ந. புழைக்கை-யானை.

ச. சிந்துரம் - யானை. நாகம் - மலை. சிகரி-சிகரம்.

ரு. கோடு-உச்சி.

சு. விடின்-விட்டால். வீழ்-விருப்பம். படி-ஒப்பு.

எ. காராவின்-காராம் பசுவைப்போல. அமுது-பால், நீர்.

அ. கோடு-கரை.

கூ. நீத்தம், கேதுக்கோள் சந்திரனென்று வாய் திறக்கும்படி பன்றியின் மருப்பை வானத்தில் எற்றும்.

க0. சுலவல் - சூழல். புலன்-இடம்.

கக. குங்குமங்கலந்தபுறம் சிவத்தையும், தாதுக்களை யளைந்த புறம் உமையையும் ஒக்கும்.

கஉ. வில் திரை, நாண் வல்லி, அல்லிமுகை கணை.

கந. பெண்ணை சாய்த்து - பெண்ணையாற்றினைக் கீழாக்கி, பனைகளைத்தள்ளி. காவேரியினண்ணி - காவேரியினும் அதிகரித்து, சோலைகதேனோடு கலந்து. ஓதிமம் நன்குறவை கைசேர்ந்து-அன்னங்கள் நன்முகத்தங்குற இடமுடைத்தாகி, வைகையாற்றைஒத்து. கம்பை இயைந்து - கம்பையாற்றை யொத்து, சங்கங்களைப் பெற்று. மணித்திரள் மண்ணி-மணிக் கூட்டங்களைக்கழுவி, மணிக்கூட்டத்தால் அலங்கரிக்கப்பெற்று. ஒத்தபடி முடிக்க. கம்பு-சங்கு.

கச. சிலம்பு-மலை, பாதச்சிலம்பு. சந்தம்-அழகு. திலகம்-மஞ்சாடி, பொட்டு. முன் நெற்றியிட்டு, முன் எற்றியிட்டு. பொலம்-அழகு, பொன். இடை-நடு, இடுப்பு. காஞ்சி-ஓர் மரம், ஓரணி. அகில் ஆரம், நகில் ஆரம். வளை-சங்கு, கைவளை. கை-பக்கம், கரம். பணி-பாம்பு, ஆபரணம். அள

கம்-நீர், கூந்தல். சிலேடைப் பொருள்காண்க. நகில் - தனம்.

கரு. சேடு-அழகு. மார்த்தாண்டன்-சூரியன். பாகன்-அருணனாகியபாகன்.

கசு. துருக்கம்-கஸ்தூரி. மாக்கள்-விலங்கு, மனிதர்.

கஎ. மண்ணுறுப்பு-கழுவி.

கஅ. கண்டோர ஆடுநர் உட்கொண்டோர்கள், முறைநிறீய திரிமூர்த்திகளின் பதவிகளையடைவரெனபது.

ககூ. கிடங்கு-அகழி. கப்பண்-பாதுகப்பண். கைகளின் - கைகளைப்போல. கால்கள் - வாய்க்கால்கள். நிவத்தல்-ஓங்கல்.

உ0. சிலம்பு - மலை, ஒலித்தல், காற்சிலம்பு. இயம - ஈண்டு மருதப்பறை. நாஞ்சில்-ஏர். சால்-படைச்சால்.

உக. அங்கு ஊரப்பி உந்தி. உரப்பல்-ஒலியிடல். பழனம் - வயல். எகினம்-அன்னம். சங்கினை அணடம்யன்ன எடுத்துவிடுப்பவீழ்வது மதி தவற விழுவதை ஒக்கும் என்க.

உஉ. இரியல்போக - ஓடிப்போக. தொத்து-கொத்து. கமலச்செப்பு-கமலமாகியகிண்ணம். இழுது-கொழுமை.

உ௩. முளரி குமுதம் நீலம்,எதிர் நிரனிறை. முரணல்-மாறுபடல். வளை-சங்கு, வளையல்.

உச. எம்முறையில்-என்னஎதுவில். எம் உறை இல்.

உரு. அவை-அத்தாமரைகள்.

உசு. ஓர் இலை வளையப்பெற்றுக் கதிர்நிமிர்ந்து நிற்றல், அங்குசத்துக்கு உவமை.

உகூ. உராய்-நெருங்கி. கருப்பகடு-எருமை.

௩0. பலாலம்-வைக்கோல். உலவை-காற்று. பதடி-பதர் ஐங்கூறு-தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கல் தான் என்று திருக்குறளுட் கூறியவை.

௩க. வாவி காட்டும். பிரிந்த-ஊடலிற்பிரிந்த. அளகம் காது முதலிய வற்றை சைவலம் வள்ளை முதலியவற்றோடு ஒப்பிடுக. கண்ணி-மொட்டு.

௩உ. வான் மதியம் கமல அழகைச் சிதைக்கும். தடத்த பரந்த.

௩௩. பாசடை-பசியஇலை

௩ச. ஆவி ஆடுகின்றன - குளம் (நீர்) ஆடப்படுகின்றன.

௩ரு. மாதர் ஆழ்வார்.

௩சு. வனிதையர் மூழ்கி கைகாட்டி (அன்னத்தைப்)பிடிப்பார்.

௩எ. மதிமுகத்தி தாமரைமுகத்தியை அலைக்கும் என மு

றையாகப் பகைப் பொருளை ஒப்பிட்டது நயம். குடைதல்- நீராடல்.

௩அ. ஏமம்-பொன். ஞாங்கர்-பக்கம். கொன்-பெருமை.

௩௯. வம்பு-பெருமை, மூலைக்கச்ச. யானை என்றது தனங்களை. கம்பம்- சிவம், கம்பை நதி யுமாம்.

௪0. வேரம் மேகம், மதுலுறுப்புமாம்.

௪உ. சிகரி-கோபுரம். பொறி - இலக்குமி.

௪௩. சேக்கை-சயனம்.

௪௪. மணிதழைப்ப,அணிதழைப்ப. நிரைகரும் - வரிசைபடுத்தும். நிகழ்தல்-தங்கல். அராக்கு-செவ்வப்பு. வய்த்தல் - ஒத்தல்.

௪௫. சிகைரம்-கோயில்.

௪௬. தரிசனத்திற்கு மன்மதனோடு வந்த இரதியை, மைந்தர் கண்டு தனியளாய் வந்தவள் யார் என்று வினவ மகளிர் ஊடினார் என்க.

௪அ. பயம் - பழம் பால் நீர் அச்சம். இப்பொருள்களைத் தருமுதலியற்றிற்கு முறையேகூட்டுக. சிந்து - கடல்.

௪௯. பாகசாதனன் பதம் - இந்திரன்பதவி.

௫0. கூவரம் - ஏர்க்கால். ஏர்க்காலோடு ஆரையும் அச்சையும் ஒருங்கு சேர்த்து ஒடித்தனாராகலின், ஆரையொடித்தனர், அச்சையொடித்தனா என்பர் பின்னும்.

௫உ. ஆதி - சிவம். வயிரவாகாரை -பயங்கரமான வுருவத்தை யுடையவள்.

௫௩. காங்கேயன் என்பது குறுகிநின்றது.
தக்கற்காதி - வீரபத்திரர்.
கூர்மாண்டன் - கூஷ்மாண்டன் என்பதன் சிதைவு.
காரி - ஐயனார்.

௫௪. அற்று - அத்தன்மைத்து.

௫௬. மறம் - பாவம்.

௫எ. கற்பவீற்றில் - கற்பகால முடிவில். கூவம் - நகரநாமம், கிணறு.

௫அ. அவற்றால் - அந்தக் காசியாதி தலங்களால்.

௬0. சுகாதனம் - யோகாஸனத் தொன்று. நடையே வலம்வரல்போன்றது; மற்றதை இப்படியே கொள்க.

௬௧. நொய்து - அற்பம்.

௬உ. பதாயுதம் - கோழி. கரம்- கழுதை. கொடி - காக்கை.

௬௫. கன்னல் - நாழிகை.

௬எ. வில்மண்டிதர் - வில்லழகர். கணிப்பு - கணக்கு.

௬அ. கின்னரம்-கின்னரபபக்ஷி. அரம்பேசன்-இப்பெருமான்

அரம்பையரால் பூசிக்கப்பெற்றவர். இப்பதி இலம்பையங்கோட்டூர் எனப்படும். கூவத்திற்கு அடுத்துள்ளது. ரம்பா என்னும் வடமொழி லம்பாஎன்றாகித் தமிழ்விதிப்படி மொழிமுதற்கண் இகரம்பெற்று, ஆவீறு ஐகாரமாய்நிற்க; கோட்டூர்என்னும் ஊர்ப்பெயர் சேருங்கால், அம்முச்சாரியைபெற்று, இலம்பையங்கோட்டூர் என்றாயது. இதன் தேவாரத்தை முன்னர் நோக்குக.

௬௯. குணதிசை - கீழ்த்திசை. முனிவர்-கண்ணுவர். இலிங்கம் ஈயும் என்க.

௭0. அம்பு-அம்பு, ஜலம்.

௭௧. இறுத்தல் - ஒடித்தல். நீராய் - ஜலமாய், தன்மையாய்.

௭௩. பிரசாபதி -சூரியன். தானங்களென்றன பதமுத்திகள். முத்தி-பதிமுத்தி.

௭௪ செங்கதிர்நாள் - ஆதிவாரம். உவா-அமாவாசை பௌர்ணிமை.

௭௬. கண்ணிறைந்த-பெரிய.

௭௭. நன்றி-நன்மை.

௭௮. இவர்தல்-ஏறுதல். ஆர்-சக்கரத்திற்கோத்த இலைகள். என்னுக்கு-யாதுக்கு.

---

## ௩. திரிபுரம்.

௧. தாலம்-உலகம். முக்குற்றம்-காமம் வெகுளி மயக்கம்.

௨. பேருகம்-பெரியயுகம். தாருகன்-தாரகன் என்பது எதுகைநோக்கித் தாருகன் என நின்றது. சட்டகம் - உடல்.

௩. துய்த்தல்-உண்ணல்; துய்த்தலற்றவர்க்கு அன்னமும், கரகநீருங்கொண்டு பிரமன் வந்தானென்பது நயம்.

௪. நவிற்றி - செய்து.

௫. எயில்-மதில். மேவலர்-பகைவர்.

௬. ஆடல் -விளையாடல், போர். ஒருங்குற-ஒன்றாக.

௭. அற்று-அத்தன்மைத்து. இஞ்சி-மதில். அயம்-இரும்பு.

௯. தெற்றி-சித்திரக்கூடம். சேவகம் - யானைக்கூடம். ஆவணம்-கடைச்சாலை. தண்டலை - சோலை. மயன் அசுரதச்சன்.

௧0. செவ்விது-செவ்வையது.

௧௧. செறுநர்-பகைவர். எல் - ஒளி, கீர்த்தி.

௧௨. செல்லல்-வெறுப்பு. செயிர்-கோபம்.

௧௩. பூசியா-பூசியாமல்.

௧௫. இருள்-மையல்.

௧௬. தூறக்கம்-தேவருலகு.

கஎ. மிஞிறு-வண்டு. போழ்தல்-கிண்டல். புலர்தல் - வாடல். வாழ்ந்து-மகிழ்ந்து.

கஅ. பொலம்-பொன்.

ககூ. காண்-அழகு. சூழ்ச்சி - ஆராய்வு.

உக. மாதிரம் - திக்கு. கேடுசூழ்ந்து-கேடுசெய்ய நினைத்து.

உங. கணிப்பு-கணித்தல்.

உச. வறியன்-வறியனாய்.

உரு. கொடி - காக்கை. சிங்கல்-அழிதல். அரையன்-அரசன்.

உகூ. நலிந்து-நலிவுகொண்டு.

ஙo. நோன்மை - வலிமையால். அன்றல்-பகைத்தல்.

ஙக. பாரதி - சரஸ்வதி, மரக்கலம்.

ஙஉ. அடைகள் மூய - இலைகள் படர்ந்த. விழியுடற் கடவுள் - விழிகளையுடலிலுடைய இந்திரனே!.

ஙங. அன்னோர் - தேவரென்றபடி. திருவிழுந்து உழக்குமாறு இயம்பி.

ஙச. உபசத்துக்கள்-ஒருவகைமந்திரங்கள்; இங்கே அவை அந்தயந்திரங்களின் அதிஷ்டான தேவதைகளை உணர்த்தின. அனையர் - அம்மந்திர தேவதைகள்.

ஙஅ. அமரும் - வருத்தும், வசிக்கும்.

ஙகூ. செல் - இடி. சிந்தச் சிந்தினர்.

சo. வென்னிட - முதுகைக் காட்ட, தோற்க.

சக. இரியல்-தோற்றல்.

சஉ. மாயவன் நினைந்து சொல்வான்.

சங. துன்னவக்கிரகம்- துர்நவக்கிரகம். காவர் - வஞ்சர்.

சச. தாவு-குற்றம்.

சரு. சாதனம் - அடையாளம். போதம்-அறிவு.

சஎ. பொன்றும் மாறும் - அழியும் அழிவுநீங்கும்.

சஅ. இழைத்தலோ - செய்தன் மாத்திரமோ ?

ருக. குத்திரம்-வஞ்சகம். அத்திறத்தினும் - அக்காரணத்தானும்.

ருஉ. புணர்ப்பு - மாயம். சாரண (விளி.)

ருங. அவை-சபை. மாயைமுதல் -விட்டுணு. புத்த வடிவோடு நூல்கொண்டு வருவான்.

ருச. விஷ்ணு, புத்தன் அருகன் ஜினன் என்ன மூவுருக்கொண்டு முப்புரத்துட் சென்றனர் என்பது கருத்து. நூல் அறைகின்ற காலை. மணி-உருத்திராக்கம்.

ருரு. உடம்பு கங்குல் புரையும்.

ரு௭. முனிமாதவன் ஆயிடை ஆர்வம் முகிழ்க்க வந்து மாயையின் நண்ணியவாறு உன்னி மாகர், தானவர் இன்றொடு இனி மாய்குவர் என உவப்ப உரைத்தனர். முகிழ்க்க - தோன்ற. வரா - வந்து.

ரு௮. உம்பர் பாடுவேர். நக்கு - சிரித்து. உக்கார்-கெட்டனர்.

ரு௯. வம்மின் - வாரும்.

௬௰. நாரணன் வரும்.

௬௧. தற்கம்-(சந்திரனுகிய) தன்னைச் சிரசில்; கம்-சிரம்.

௬௨. வருணம்-நிறம். தவிசா-ஆசனமாக. நிரணமொத்த திருவன் - நொய்மையனை விஷ்ணு. பரிணமித்தல் - ஒன்று ஒன்றாகமாறல். பண்பு அன்னது-பண்பினை ஒத்தது.

௬௮. இறை - சிறுபொழுது. சிறை-அணை.

௭௧. உண்மை யாகிய (நித்திய லட்சணத்திற்) றிரிவின்றி அருளுருவுகொண்டு.

௭௩. சாலம்-கூட்டம்.

௭௪. அரு - நாதம் விந்து சத்தி சிவம்; உரு-பிரமன் விஷ்ணு ருத்திரன் மகேசுரன்; அருவுரு-சதாசிவம். சத்தி-பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்தி.

௭௬. விண்ணோர் (எழுவாய்.)

௭௭. அனூர்-துன்பு.

௭௮. கலம்புடை சுழலும் காகம். கலம்-மரக்கலம்.

௮௰. ஆடல்-திருவிளையாடல்.

௮௧. ஏனைப் புராணங்கள் தழல் வாயு மால் என்னும் மூவரும் சரமாயினர் எனக்கூறினவேனும், இவ்வடமொழிப் புராணம் வாயுவைக் கூறாது சந்திரனையே கூறுகின்றது.

௮௨. அணக்கல்-அச்சுறுத்தல்.

௮௩. நாண்-கயிறு, நாணம்.

௮௬. தன்மகன்-பிரமன், அவன் மகன் - காசிபன், அவன் மகன்- சூரியன்; ஆகலின், சூரியனைத் தன்மகன் பேரனெனவும்; பாற்கடலிற் சிதேவியோடு சனித்தமையால், சந்திரனைத் தனக்கு மைத்துனன் எனவும் விதந்தார்.

௮௮. துணங்கை - கைகோத்தாடல். ஆசை-திசை.

௮௯. நிலைபிரிந்த மயிருக்கு இழிவிருக்கவும், அது தனக்கின்மையால், கவரி தலைவிரித்தாடின தென்க.

௯௰. மாசுணம் கதிர்கவ்வி ஈசனுரு நாகங்கட்கு ஈந்திட நீட்டி மோசம் இழைக்கலுற்ற, முறைமைபோல. (ஆலவட்டத்தில் சூரிய சந்திரர்களி

னுருவமைத்தலும் வீசுங்கால் திருகிவீசலும் இயல்பு.)

௯௧. சச்சரி-கைத்தாளம். தடாரி -பம்பை.

௯௩. கஞ்சுகம் சட்டை. பாரிடம் -பூதம். தோள் வீங்க.

௯௪. துண்டம் - மூக்கு. சொல் சொல்வ.

௯௫. மண்டலஆடி-சூரியன்.

௯௬. எற்கு - எனக்கு. ஒத்தவர்-தம்மை யொத்தவர்.

௯௭. பண்-பண்பு. பரிசின்-தன்மைபோல்.

௯௮. உட்க-பயப்பட.

௯௯. கவிகை ஓங்கி நிகழ்ந்த.

௧0௩. தங்கு அப்போது. ஆர் - அச்சு. சிங்க-அழிய.

௧0௪. வையம்-தேர்.

௧0௫. ஒட்டலர்-பகைவர்.

௧௧௧. அரி- சேனை.

௧௧௨. கோதண்டம் இட்டும், சரம் வலமும் கொண்டு. வை-கூர்மை.

௧௧௩. நன்றின்-விருப்பத்தோடு.

௧௧௪. நீறு - விபூதி, அழிதல்.

௧௧௫. சார் - சார்வு, (இடம்.)

௧௧௬. அளி - வண்டு.

௧௧௯ சிலீமுகம் - பாணம்.

௧௨0. குணவுரு அணை - நாணாகிய உருவுடைய சயனம். பாம்பென்றபடி. அப்பு -அம்பு. சிலை வாசிகைபோன்றது.

௧௨௨. விசிகம், புங்கம்-பாணம். முன் - மார்பு.

௧௨௩. சம்பு - நரி.

௧௨௪. இகலன்-நரி.

௧௨௫. சாடியது ஒத்தது. ஓதனம், பதம் - அன்னம்.

௧௨௬. மருள் - விபரீதவுணர்வு. இருள்-அவித்யை.

௧௨௭. செப்பு-சிமிள். அப்புரம்-அந்தச்சரீரம்.

௧௨௮. முகிலினம்-(தாப்பிசை).

---

## ௪. சந்தானகிரி.

௩. கரவாட் போக்கல் - கரத்தின் வாளை ஒளித்து வைத்திருந்து பகைவர்மேல் வஞ்சகத்தாற் றாக்கல்.

௮. புண்டரிகம்-புலி.

௧௨. சத்திபாதம்- சததிபதிதல்.

௧௬. தோற்றம் விளிவு - பிறப்பு இறப்பு.

௧௭. பாசவிலக்கணம் ஐங்கூறுபடும்; அவற்றில் ஆணவமலத்தின் இலக்கணங் கூறியபடி. பிறழ்தல் - விளங்கல்.

௧௮. முற்கூறிய ஐங்கூறில் மாயாமலம், சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை என முத்திறப்படுதலும், தத்துவம் முப்பத்தாறனுள் ஐந்துசுத்தமாயும், ஏழு, சுத்தாசுத்தமாயும், இருபத்திநான்கு

அசுத்தமாயும் இருக்கு மென்பதும், அவை, பிரேரம் போக்கியம் போகம் என்ன முக்காண்டமா மென்பதும் கூறியவாறு. பகுதி - பிரகிருதி. பிரேரம் - ஏது. போக்கியம் - அநுபவப் பொருள்கள். போகம் - அநுபவம். காண்டம் - கூட்டம்.

கக. முற்கூறிய ஐங்கூறில் கன்மமலத்தைக் கூறியபடி. சஞ்சிதாதி - சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியம்.

உக. சொல்லாதசொல்-குறிப்பு, அது சின்முத்திரை என்பர்.

உஉ. அயனுக்குப்புஷ்பகிரியில்.

---

ரு. அடிமுடி.

உ. துஞ்சல்-தூங்கல். அந்தணர் -பிரமபதவிபெற்ற முனிவர். அங்கத்தின்மான் - கலாரூபமான சரஸ்வதி.

ங. வாகம் - அழகு; திகழ்வு ஆகம் ஒன்றுறு மேகம் - விளங்கும் சரீரத்தைப் பெற்ற மேகம்.

ச. மாலான் - மயங்கிய பிரமன். மால-மயங்க. நீரின்பாலா-நீரினிடமாக.

ரு. வில்-காந்தி.

எ. உக்க-சிந்த.

அ. வலத்தின்-வல்லமையால்.முட்டுற்று - தாக்கி. வட்டணை-வட்டம்.

க0. நாகர்-தேவர். ஒலி-காற்று.

கக. என்றூழ் - சூரியன். சமழ்ந்து-மயங்கி. புரை - குற்றம்.

கஉ. உரம்-மார்பு. வயின்-வயிறு. வாள்நாடுறும்-வாளை ஒக்கும்.

கங. இகத்தல்-கடத்தல்.

கச. மேதை-மேன்மை.

கரு. தாணு-தாணம், சலனமில்லாது ஆதாரவாய் நிற்பது. கம்கரன்-கபாலகரன்.

கஎ. எருபு-ஏகி. போனமூதறிவு - அறிவில்லாமை.

கஅ. கன்றி-விரும்பி.

கங. விலங்கு-மிருகம், விலங்கு.

உச. இட்டம் ஒன்றிலர்-இஷ்டபூர்த்தியடைந்தாரிலர். பூப்பட்டகண்ணினர். பட்ட-ஒத்த, ஆகிய; கண்-கண், இடம்; விஷ்ணுபிரமருக்குக் கொள்க.

உரு. தமை-தங்களை.

உஅ. நீலகண்டமும் சிரமாலையும் தமக்கு இன்னல் நேர்ந்த காலத்தில் தரித்த திருக்கோலமாதலால், அவற்றைக் கண்டு நாணுற்றாரெனக.

ங0. வெம்மைநீரென - வெந்நீரென. இது, வெம்மை நீருக்கு வேறாகாமைக்குக் காட்டும் உதாரணம்.

ஙக. நந்தி - குறைந்து.

சo. 1. இரக்ஷகர். 2. தியாகர். 3. சந்ததாரர்-அடியவர்களைச் சமுசாரபயத்தினீக்கி நன்கு காத்தவர். 4. வளர்சடைக்கூத்தர் - தீர்க்கஜடாநிருத்தர், தீர்க்கம் - நீட்சி. 5. ஜகநாதர் - சர்வகர்த்தா. 6. அஞ்சநாபகண்டர் - விடத்தால்அஞ்சனம் போலும் காந்திபெற்ற கண்டத்தையுடையவர். 7. கிலாநிக்னர் - கலிகாலகிலேசத்தை நீக்கியருளினவர், கிலானி - கிலேசம். 8. புவனநாயகர் - அசுரர்களை மாய்த்துப் புவனங்களைக்காத்தவர். 9. திரிபுரக்நர்-திரிபுரத்தையழித்தவர். 10. அபபிரதிஷ்டர்- பிரதிஷ்டையல்லாதவர். எனவே, சயம்பு. 11. கூவநாதர் - கூபரநாதர். 12. செந்நெல்வைத்தவர் - நிவாரதர், நிவாரம் - செந்நெல். அன்றியும், அபபிரதிஷ்டர் என்னும் திருநாமத்தை அப்பிரதிஷ்டா - அந்நியதாகர்த்தா எனப்பாடமோதி, அதற்கு, தம்மையடைந்தவர்கட்கு அளித்த பதத்தை என்றும் அகற்றாதவரெனவும்,பொருள்கொள்வர்.

---

## ரு. செந்நெல்.

உ. முக்குறும்பு - காமம், வெகுளி, மயக்கம். பொய்யை மெய்யினிற்காணல் - நித்திய வஸ்துவின் விவேகத்தால் அநித்ய வஸ்துவின் நிலைமையை உணரல். அடியர்கட்டிகழ்த்தல்-அடியரிடமாககாட்டல்.

ரு. புழுக்கல் - அன்னம்.

ஙு. தன கற்பினளவலாது அழகு ஒழுகும- கற்பினளவேயன்றி யதனினும் மேம்பட்ட அழகென்றபடி.

எ. நெற்பலி - நெற்பிச்சை.

அ. எய்த்து - சோர்ந்து.

கo. அம்மனை - அழகியவீடு.

கஉ. துவ்வு - உணவு.

கச. மும்மை - மூன்றுபங்கு.

கரு. நனை - தேன்.

கஎ. இரண்டு நாழி எய்த.

கக. நூக்க - செலுத்த.

உo. போனகம் என்பது போனம் எனத் தொக்கது.

உக. மருந்தெதிர்பவரின்- அமுதத்தை எதிர்கண்டவர்போல.

உஉ. பதம் - தன்மை.

உங. தந்தமா - யானை.

உச. அம்மையேயென்று தாம் விதந்து கூறிய காரைக்காலம்மையாருக்கு இவர் பிள்ளையென்றல் மெய்ம்மையே என்று கருதும்படி அவர்போல் இளைத்த எலும்பு வடிவு கொண்டு.

உரு. விற்கோலத்தன்- வில்லழகன், வில்லைப்போற் கூனினவன்.

உசு. பதம் - உணவு, பதவி.

உகூ. நிட்டை - உறுதி.

௩0. வைத்தும் - வைப்போம்.

௩௬. பிரதோஷசந்தியில் நிருத்தஞ்செய்தன ராதலாற் கைலையிற்செய்த நடனம் சந்தியா நிருத்தமென லாயிற்று. இரக்காநடனம்—இரக்ஷாநடனம்.

௩௯. அடிசில், ஓதனம் - அன்னம்.

ச0. மடம் - துறவிகளாலயம், மடமை.

சக. இழை - நூலிழை. பெற்றம் - இடபம்.

---

எ. தாருகன்.

ச. செம்புனல் துளி-இரத்தத்துளி. சாண்-காணத்தகும். கடுத்தல், தன்போலுருவு கொள்ளல்.

ரு. எண்திசையரையர் - அட்டதிக்பாலர். வயம் - வெற்றி.

சு. திசையுறுகரி - ஐராவதமுதலிய யானைகள்.

எ. இரவியின் ஒத்த தேர்க்கிள்ளையாகிய வழ் (ஸப்தமா) கிள்ளைகள்மீது; ஒத்தல்-ஒன்றுக்கொன்று சமமாதல். கிள்ளை - குதிரை. ஞெள்ளல் - வீதி.

அ. எற்றல் - வீசல். சிலம்பு - மலை.

கூ. வான் நிதி நந்து தாமரை - தேவநிதியாகிய சங்கநிதி பதுமநிதிகள். தேனு(தனது) பசுக்கூட்டத்துள் ஒன்றாயிருக்க.

க0. தாருகன் அணிகள், மேருவின் பொன்னாலும் சேடனுடைய மணியாலும் ஆக்கப்பட்டன.

கக. அணக்கி-வருத்தி. அணங்கியர் என்ற பெயருக்குக் காரணங் கற்பித்தபடி.

கஉ. தன் அவையில் அராவிறையையே தீபமாக வைத்தனன்.

கரு. கொல் - கொல்லன் என்னும் பொருளது. வல்லி - விலங்கு.

கசு. இனைவுறல் - வருந்தல்.

உக. தருணம் - இளமை. வாரணபகை - சிங்கம்.

உரு. பொன்றிகழ்மரை - பொற்றாமரை.

உஎ. அமரர் - இறவாதவர்.

௩0. நச்சினை மிடற்றடக்காவழி, திருமாலும் அயன் முதலிய தேவரும் இறத்தலை யுடையராக; அச்சுதன் அமரர் என்னும் அவர்கள் நாமங்கள் அகரத்தை யிழந்து, முறையே சுதனெனநின்று அழிதலை யுடையவனெனவும், மரரெனநின்று மரித்தலையுடையவ

ரெனவும், பொருள்பட்டு நிற்குமாகலின், முதலெழுத் திகவாதொன்ற நச்சினை மிட ற்றடக்கு நாதன் என்றுவிதந் தார்.

௩௪. மறவன் - வீரன்.

௩௩. சின்மய தேவி என்க.

௩௪. குழை தாவு கண், கழு முள்-சூலம்.

௩௫. இயல்பு என - இயல்பு போல.

௩௭. மை நகம் - நீலமலை. வடு கன் - வைரவர்.

௪௧. சமீரணன் - காற்று.

௪௩. படைத்தவ (வினி).

௪௫. காரிபட்ட - விடமொத்த. மாரி - மேகம்.

௪௭. நுனித்த - சுருக்கமான.

௫0. அனீகம்-சேனை. யோகினி - காளியின் ஏவற் பெண்.

௫௧. அ குமாரி.

௫௫. இருகான் மாறி சுழன்று டினர்.

௫௮. கம்மியன் - கம்மாளன்.

௬0. வலவி - தேரோட்டுவாள்.

௬௧. தடத்த - வெளியான.

௬௨. பதலை - முரஜம். இறலை - பறை.

௬௩. இ கு - இந்தப்பூமி. புக்கு ரூர் - ஈண்டுத்தேவர்.

௬௫. சூலி எழுந்து அடைந் தாள்.

௬௮. சீற்றமாம் - கனல்.

௭௧. புருவி - புருவத்தையுடை யவள்.

௭௩. நின்றிடும்படி அன்று ஆற் றும்; அன்று - பகை.

௭௫. மின்-மின்னலோடுகூடிய இடி. மன் - இந்திரன்.

௮0. ஒற்றினீர் - ஒற்றியுணர்ந் தவரே.

௮௩. ஒலி - ஆயுதம். சும்மை கொள் - சுமையாகக்கொள் கின்ற, விரித்தல் விகாரம்.

௮௫. எயினர் - எவினர்.

௮௭. அங்கியை போர்த்தான். வெரின் - முதுகு.

௮௮. கோதை - முன்கைத்தோ ல். விரற்புட்டில் - விரற்கவ சம். புங்கவம் - மேன்மை.

௮௯. தெம் - பகை.

௯௧. செங்நெற்சூடு - செங்நெற் குவியல்.

௯௨. அமர் இல் துன்பம்.

௯௪. கற்பு இல் மாதர்.

௯௫. உலம் - திரணடகல், மலை.

௯௭. ஐய- உடன்பாடுணர்த்தும் குறிப்பு மொழி. மத்திகை - குதிரைச்சம்மட்டி.

௯௮. கோடிகம் - தட்டு. களாஞ் சி - படிகம். விழிக்குறி - சைகை. ஈ யோட்டிபோலச் சாமரைவீச.

௯௯. போழ் - பிளவு.

௧00. படிமகள் படர்வதென்னப் பூப்பொடி போயிற்று.

க0க. பூழிமாலை குடையடைந்து தடுக்கப்பெற்றன. மாலை - வரிசை.

க0உ. பொருநர் - போர்வீரர்.

க0ங. இயவர் - வாத்தியக்காரர். சிலம்பல் - ஒலித்தல். அழு மோஸை அடுக்கடுக்காய்க்கூடி எதிர்ந்தெழுதல்போல. உம் அசை.

க0சா. கழு - சூலம்.

க0எ. தோமரம்-இருப்புலக்கை.

க0கூ. கொம்மரம் - வில். மும்மை - மூன்று.

கக0. ஆற்றின - ஆற்றைபபோல. உலத்தல் - சாதல்.

கக௫. கொக்கு - மாமரம்.

ககஅ. அதிர்உறும - குமுறும்.

கககூ. அயுதம் - பதிறுயிரம்.

கஉ0. வண்டு - பாணம்.

கஉஉ. புரம் - உடல்.

கஉங. உங்கு - அங்கு.

கஉச. வீரக்கு - வீரத்துக்கு.

கஉஎ. பரிதி-சூரியன், சக்கரம்.

கஉகூ. திகிரி என்னும் மூன்றெழுத்துள் ஆதியாகிய ஓரெழுத்து ஒழியில் பகரப்படும் பெயர் கிரி; (மலை.)

கஙக. மொய் - பொருகளம்.

கஙஉ. மந்திரக்கிழமையோன் - ஆலோசனை கர்த்தன். (மந்திரி.) குரவை - கைகோத்தாடல்.

கஙங. தானமா - யானை.

கஙச. பன்னல் - பருத்தி.

கஙரு. சூள்-வீரவாதம். கறங்கு - காற்றாடி.

கஙசா. உடம்பிடி - வேல்.

கஙஎ. களேபரம் - பிணம்.

கஙஅ. இகலன் - பெருநரி.

கச0. களத்துள் பேரியாதிய.

கசக. போர்வைநீங்கும்பணை தோலற்றபறை.

கசஉ. மனை - மனைவி.

கசரு. கலினம் - சேணம்.

கசஎ. வசி - வாள்.

கசஅ. வாள் (அதில்) உற்று சிறிதேனும் அற்றிடாது.

கரு0. ஒவற - நீங்காது.

கருக. மற்ந்து - அழிந்து.

கருங. கடி - நிதம்பம்.

கருஅ. கடம்-காடு. உழி-இடம்.

கருகூ. பல்நிரை - பல்வரிசை. கந்தரம் - சிரம்.

கசா0. கழுது - பேய். கவந்தம் - தலையற்ற குறையுடல்.

கசாங. சிந்துபு - சிந்தி, ஓடி. மானவப்படை - வீரபபடை.

கசாச. புஞ்சம் - கூட்டம்.

கசாசா. அடங்கலர் - பகைஞர்.

கசாகூ. நழுவின் - நழுவலாலே. ஒடுவான்-ஓடக்கருதி. சிறிதுஉறு - சிறிதுற்று.

கஎ0. பின்றல் - பிற்படல்.

கஎஉ. வயின் - வயிறு.

கஎரு. ஆசுகங்கள் அவுணர் புகழையறுத்தன புரைய, குடையை அறுத்த.

கஎசு. கைச்சாபங் கொண்டு வாய்ச்சாபம் மாற்றினுள் போல், சாபம் - வில், வீரவாதம்.

கஎஎ. பணை - பறை. கறை - இரத்தம்.

கஎகூ. குடையைப் பிடித்திருந்தவர் குடையறுபட, அக்காம்பைப பற்றியிருக்கில் படையென்றுகருதித் தெறுவானென்று படியில்விட்டார். சிலர் அறுபட்ட குடையைக் காம்பிற் செருகிப பிடித்தார்.

கஅ0. அது பிடீஇ - அக்(குதிரையைப) பிடித்து. புல்லை வாயிற் கொள்ளல் தோற்ற குறிப்பு.

கஅக. வாங்கிய - வளைத்த. எங்கல் - ஒலித்தல்.

கஅஉ. உயங்கல் - வாடல். கழிதல்-மிகுதல், போதல்.

கஅரு. நன்னர் இல்.

கஅஎ. பிணைமடங்கல் - பெண்சிங்கம்.

ககூக. கார்முகம் - மேகம், வில்.

ககூஉ. குணம் - நாணி, குணம்.

ககூரு. அடிவிரல் தேர்த்தட்டில் முன்னும் பின்னும் தாங்கத் துடைமடக்கி நிற்கும் நிலை, ஆலீடம் பிரத்யாலீடம் என்னும் யுத்தநிலையைக் குறிக்கும்.

ககூசு. வலவி அழிந்திடக் காளி கார்முகத்தைத் துணித்தாள்.

ககூஎ. நச்சு இலை பகழி.

ககூஅ. ஈர்ம்பகழி - கூரியபாணம், ஈர்மை - குளிர்மை.

உ00. மாசுர்-தேவர். செங்கேழ் ஆகரம் - செந்நிறத்திற்கிடமான மணி.

உ0உ. நொறில் - விரைவு. தினமணி - சூரியன். அம்புகித் திரையினர், திரை-ஆகுபெயராய் அமுதத்தை யுணர்த்திற்று.

உ0ரு. தெற்றல் - பின்னுதல்.

உ0ச. அடலை - சாம்பர்.

உ0ரு. ஊழ் - பழமை.

உ0எ. வை - கூர்மை.

உ0அ. மால் நல் போனகம் - விஷ்ணுவுக்குணவாகிய பூமி.

உக0. பவ்வமன்னவன் - சமுத்திரவரசன் (வருணன்.)

உகஉ. சூல் - சருப்பம். ஒலி - காற்று.

உகரு. விண்ணின்கா - கற்பகம். பூ - அழகு.

உகச. கலுழுபபடை-கருடாஸ்த்திரம்.

உகஎ. இமில் - முசுப்பு. கட்டு அழல் தூர்க்கும்படி வாயினீர்க்காட்ட. மருத்தை நாசியும், தீயை விழியும் காட்ட.

உகஅ. மருப்பு, எரிய உரியதி லாமையின் (வாளா) இருப்ப. உரியதிலாமை - தாககுதற் குரிய பொருளில்லாமை.

உககூ. தனே - கருடனே. வந் தனைசெய்து விடுத்தான்.

உஉங. உடலல் - வருந்தல்.

உஉரு. பொற்பிறங்கல் - மேரு.

உஙங. மா வஞ்சனி - பெரிய யோகினி.

உஙரு. உத்தாரம் - ஊழித்தீ.

உஙசு. உதவகன் - அக்கினி.

உஙகூ. நுங்கி - உண்டு.

உசக. அனிகம் - சண்டுக்காளி சேனைகள்.

உசரு. குலாலன் - குயவன்.

உசஎ. வீழ்ந்த தலைகளைப் பல வாக எடுத்து. இக்கூத்து துணங்கை என்பது.

உசஅ. அங்குலி - விரல். சுவஉ -பலகறை.

உசகூ. மத்தகர் - மதத்தர்.

உருO. மத்தநாகம் - மதயானை.

உருக. அரவம் - ஓசை.

உருங. பரம் - பாரம். கம்-தலை.

உருரு. காவிற்றைத்த முள்ளைப் பிடுங்கி முளையை அடித்தாற் போல.

உருசு. ஆட்கொள் நீ.

உருஎ. வீட்டல் - கெடுத்தல்.

உருஅ. சாழல் - ஓர்விளையாட்டு.

உசுக. கோதுக்கு ஆகரம் - குற் றத்திற்கு இருப்பிடம்.

உசுங. கட்செவி வால்கொடு பிறையைச் சுற்றி நான்றிட. பொற்ற மா நகம் - அழகிய பெரிய மலை (கைலை.)

உசுரு. சுனந்த முனிவரென் பவர், கைலாயத்திலே தாண் டவதரிசனந் தந்தருளப் பிரார்த்தித்து, சிவபெருமான் அனுக்கிரகப்படியே திருவால ங்காடடைடயடைந்து, நெடுங் காலம் அருந்தவம் புரிந்திருந் துழி, மண்மேடிட்டுத் திரு மேனிமறைந்து கேசத்தோடு முஞ்சிப்புல் முளைக்கப்பெற் றமையால், முஞ்சிகேசமுனி வரென்னும் திருநாமமுடை யவராயிருக்க; கார்க்கோடகர் என்பவரும் கைலாயத்திலே சிவபெருமானுக்குக் கங்கண மாயிருக்குங்கால், அறியாமை யால் விடத்தைக்கக்கி, அக் குற்றங்காரணமாக அக்கட வுளருளியவாறு அத்தலத்தை யடைந்து தவனிலையினின் று தாண்டவதரிசனம் கிடை க்கப்பெற்று அம்முனிவரோ டு முத்தியடைந்தனர். என் பது புராணம்.

உஎO. தாலம் - பூமி.

உஎஅ. பீடாரி - இது பிடாரி யென மருவிற்று.

சுபம்.